www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

பக்கம் 20

Registered as a News Paper in Sri Lanka

ரூபா 10/00

දිනමුරසු වාරමලර්

ஜனவரி ,08-14,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 84



## அரசு-புலிகள்-இந்தியா
## திரைமறைவில் ஒரு
## சதுரங்கம்

எக்ஸ்ரே
ரிப்போர்ட்

துல்லியமான
நெத்தியடியான
அரசியல்
விமர்சனங்கள்

## புலிகள் தகர்த்த
## விமானம்



லேடீஸ்
ஸ்பெசல்

ரசிகன்
வழங்கும்

அதிரடியான
தகவல்களோடு

அரசியல்
தொடர்

உளவுச் சதி

## ஒரு அழகி-ஒரு அமைச்சர்-ஒரு டாக்டர்!

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## விழிப்புத் தேவை

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
வாழ்த்துக்களை அனுப்பிவைத்த
அன்பு நெஞ்சங்களுக்கு இதய நன்றி!

வெறுப்பவை யாவும்
மக்களின் விருப்பையும் மீறி
விரைவாக நடந்து முடிந்துவிடுகின்றன.

மக்கள் விருப்புடன் எதிர்பார்க்கும்
நிகழ்வுகள் மட்டும்
முகம் காட்டாமல்
நீண்ட தொலைவில் எங்கோ
நின்றுகொண்டிருக்கின்றன.

அரசியல் தீர்வு முயற்சிகளும்
அர்த்தமுள்ள சமாதானத்தின் வரவும்
அப்படித்தான் நின்றுகொண்டிருக்கின்றன.

உடைப்பதும், அழிப்பதும் சுலபம்.
ஆக்குவதும், ஆக்கபூர்வமாக்குவதும்
மிகப்பெரும் கடினம்!
போரும் அதன் நாசமும்
யார் தடுத்தும் கேளாமல்
தொடர்ந்து வளர்ந்துகொண்டிருக்கின்றன.

சமாதானமும் அதன் அவசியமும்
யார் எடுத்துச் சொல்லியும்
உருவெடுக்க முடியாமல்
பேச்சளவில் மட்டுமே பிரபலமாகிக்கொண்டிருக்கிறது.

சமாதானப் பேச்சு மட்டுமல்ல
சமாதானத்தின் பெயரைச் சொல்லியே
பிரபலம் பெற சிலர்
ஆசைப்படுவதும் தெரிகிறது.

சமாதானத்திற்குத்தான்
இப்போது மக்களிடம் செல்வாக்கு;
இந்த நேரத்தில்
தாமும் கடை விரித்தால்
லாபம் தேறும் என்று
சிலருக்கு சின்னதாய் ஆசைகள் வரலாம்.
நாம் விழிப்பாயிருக்கவேண்டும்.

சமாதானத்தின் தடைகள் என்ன?
தற்போதைய அரசியல் சூழல் என்ன?
என்பதையெல்லாம் பேசவே தயங்கிக்கொண்டு
எந்தப் பக்கத்திற்கும் நோகாமல் பேசி
தமது சொந்த நோக்கத்தை
நிறைவேற்ற முயல்வோர்
அவ்வப்போது அரங்கில்
அறிமுகமாகிக்கொண்டேயிருக்கிறார்கள்.

பாதைத் திறப்பு பற்றி பேசுவார்கள்.
எப்படித் திறக்க வேண்டும்?
யார் என்ன செய்யவேண்டும்?
என்றெல்லாம் சொல்லமாட்டார்கள்.

சமாதானம் பற்றி பேசுவார்கள்.
அந்த சமாதானம் எப்படியிருக்கவேண்டும்?
என்று சொல்லமாட்டார்கள்.
சொன்னால் வம்பு.
ஒன்றில் அரசு கோபிக்கும்
அல்லது புலிகள் கோபிப்பார்கள்.

அரசாங்கம் கோபித்தால்
சிபாரிசுகளுக்காக போய் நிற்கமுடியாது.
புலிகள் கோபித்தால்-
சுதந்திரமாக நடமாடி உழைக்க முடியாது.
எனவே-புத்திசாலித்தனமாகப் பேசி
பிழைத்துக்கொள்ளத் தெரிகிறது.
இதனைச் சுட்டிக்காட்டினால்
சமாதானத்தின் எதிரிகள் என்று
கூச்சமில்லாமல் குற்றம் சாட்டுவார்கள்.

சமாதானம் பற்றிய தெளிவோடு
உள்நோக்கம் இல்லாமல்
யார் எவர் முயன்றாலும்
அதனை வரவேற்று ஆதரிக்கலாம்!

சமீபத்தில் கொழும்பில்
ஒரு சமாதானப் பேரணி நடந்தது.
வெறுமனே சமாதானம் என்று முழங்காமல்
புதிய கோசம் ஒன்றை
அவர்கள் பேரணியில் முன்வைத்தனர்.

ஜனநாயகமுள்ள சமாதானமே தேவை
என்று அவர்கள் கோரினார்கள்.
சரியோ-தவறோ
தமது நோக்கம் குறித்த தெளிவு
அவர்களிடம் இருந்ததை
நிச்சயம் வரவேற்கலாம்.

கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
என்ற கதையாக-
சமாதானம் பற்றிப் பேசவும் ஆசை;
அரசிடம் உதவி பெறவும் ஆசை;
புலிகளின் கோபத்தை தவிர்க்கவும் ஆசை
என்று சிலர் இங்கே
கும்பலில் கோவிந்தா போடுவது
நிச்சயம் வரவேற்கத்தக்கதல்ல.

அவர்களது நோக்கம்
சமாதானமும் அல்ல!

அரசியலில் காணாமல் போனவர்கள்,
முற்போக்கு முழக்கமிட்டுவிட்டு
முகம் மறைத்துக்கொண்டிருந்தவர்கள்
சிலர் மீண்டும் முகம் காட்டுகிறார்கள்.

சமாதானக் கோசம் மூலம்
தமது பெயர்களை பிரபலமாக்கிவிட்டு
அதனைவைத்து பிழைத்துக்கொள்வதே
அவர்களது நோக்கம்.

சரியோ தவறோ-
இரத்தம் சிந்திப் போராடும் புலிகள்
மற்றும் தமிழ் அமைப்புக்கள்
உளப்பூர்வமான சமாதான விரும்பிகள்
போன்ற சக்திகளது கூட்டு முயற்சியும்
அரசாங்கத்தின் துணிச்சலுமே
நிரந்தர சமாதானத்தை தோற்றுவிக்கும்.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை- என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்

## கிறிஸ்துவின் அறைகள்

"ராஜா என்னைத் தமது அறைகளில் அழைத்துக்கொண்டு வந்தார். நாங்கள் உமக்குள் களிகூர்ந்து மகிழுவோம்." (உன் 1:4)

வேதாகமம் முழுவதும் கர்த்தருடைய மகிமையான மாளிகையாக விளங்குகின்றது. அரண்மனையில் பல அறைகள் இருப்பதைப்போலவே வேதாகமத்தில் அறுபத்தாறு புத்தகங்கள் அறைகளைப் போலவே இருக்கின்றன. கிறிஸ்து நம்மை அந்த புத்தகங்களின் வாயிலாக தம்மை வெளிப்படுத்தும்போது, நம் ஆவி, ஆத்துமா, சரீரமெல்லாம் மகிழ்ந்து களிகூருகின்றனது.

கிறிஸ்துவின் அன்பை ருசிக்கின்ற தேவனுடைய பிள்ளைகளுக்கு அவர் தமது அன்பை வேத புத்தகத்திலிருந்து வெளிப்படுத்துகிறார். அருமையாக போதிக்கிறார். அருமையாக ஆலோசனை கூறுகிறார். சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்துகிறார். "நான் உன்மேல் என் கண்களை வைத்து உனக்கு ஆலோசனை கூறுவேன்" என்று வாக்களித்திருக்கிறார் அல்லவா? எனவே நாம் கிறிஸ்துவோடுகூட வேதாகம மாளிகையில் பிரவேசிக்க வேண்டும்.

-முத்துக்குமார் தில்லைராஜா, பசறை-



## ஸலவாத்தின் மகிமையறிந்து பயன் பெறுவோம்!

உங்களில் அல்லாஹுத் தஆலாவினால் செல்வம் அருளப் பெற்றவர்கள் 'அல்ஹம்து லில்லாஹ்' என்று கூறி நன்றி தெரிவியுங்கள். அதன்மூலம் மேலும் அல்லாஹ் செல்வத்தை அருளுவான். என்றும் தங்கள் செல்வம் வீணில் அழியாமல் அபிவிருத்தியடைய வேண்டும் என விழைபவர்கள்,

'அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் அப்திக வரஸூலிக்க வ அலல் முஃமினீன வல் முஃமினாத்தி வ அலல் முஸ்லிமீன வல் முஸ்லிமாத்தி' என்ற ஸலவாத்தை ஓதி வரவும் என நபி பெருமானார் கூறியுள்ளார்கள்.

மேலும் ஸலவாத்து ஓதுவதால் எண்ணற்ற நன்மைகள் விளைகின்றன. ஒருவர் நபி பெருமானாரின்மீது ஒரு தடவை ஸலவாத்து ஓதினால், அல்லாஹ்வும், அவன் அமரர்களும் அவர்மீது பத்து ஸலவாத்துகளை ஓதுகின்றனர். பத்து படித்தரங்களை உயர்த்துகின்றனர். பத்து நன்மைகளை இறக்குகின்றனர். பத்து பாவங்களை அழிக்கின்றனர். அவரது பிரார்த்தனையும் ஏற்கப்படுகிறது. பின்னும் இதன் பாக்கியத்தால் கஷ்டங்கள் நீங்கும். மேலும் ஸலவாத்து ஓதுவதால், இதயத் தூய்மையும், சம்சார வாழ்க்கையில் சுபீட்சமும் கிடைப்பதுடன் அவனுடைய எதிர்கால சந்ததிக்கும் அதன் பாக்கியங்கள் கிடைக்கக் காணலாம். உள்ளன்புடன் மனிதனால் ஓதப்படும் ஸலவாத்தை அமரர்கள், தங்கத்தாலும் வெள்ளியாலும் வரைந்து வைத்து அவனுக்காக மன்னிப்புக் கோருகின்றனர். மேலும் அந்த ஸலவாத்தை பெருமானாரிடம் கொண்டுபோய் சேர்க்கின்றனர். ஸலவாத்து ஓதுபவர்களின் பாவங்கள் மூன்று நாட்கள் வரையிலும் தௌபாவுக்காக நிறுத்தி வைக்கப்படும்.

இன்னும் எத்தனையோ நன்மைகளை அள்ளி வழங்கும் அற்புத ஸலவாத்துக்களை அன்றாடம் ஓதி பயன்பெறுவோம்!

எஸ். தாஜுன் நிஸா றஹ்மான்-பிலியந்தலை.

## கவிதைப்போட்டி இல-81

**வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும் வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்**

### பரிசுக்குரிய கவிதை

**மூந்நூறு இயக்கங்கள்!**

குட்டி நாட்டிற்குள்ளேயே
குடிவாழப் பயந்து,
முட்டைக்குள் போயொளித்தேன்;
முருகா!
முட்டைக்குள்ளும்
மூந்நூறு இயக்கங்கள்!

செ. குணரத்தினம்-மட்டக்களப்பு.

### வியக்கப்பட்டவை

**குண்டு பாயா குடியிருப்பு**
குண்டு பாயா பங்கருக்குள்
குடியிருக்க நான் வந்தேன்
கண்டவர்கள் படமெடுத்து
காட்சிக்காய் தந்துவிட்டார்
திருமதி. பரமேஸ்வரி சொலமண்
மட்டக்களப்பு.

**மனிதக் கருவறை**
விஞ்ஞான வேகத்தில்,
மனிதக் கருவறை,
மாற்றியமைக்கப்பட்டால்
வியப்பிற்கு இடமேது?
எஸ். பீ. டீன்
கற்பிட்டி.

**புன்னகை**
முட்டைக்குள்
முகங்காட்டும்
முத்தே!
உன் புன்னகை
உள்ளிருக்கும்வரை மட்டுமே!
சுஜானா றஹீம்-புத்தளம்.

**?**
மனித இனம் இன்று
விலங்குகளை விட்டு
விலகிக்கொண்டதோ
பட்சிகள் பக்கம்
கட்சி மாறியதோ?
குணத்தில் புறாக்களாய்
குஞ்சுகள் பொரிக்குமோ?
புத்தாண்டிலாவது
புதுயுகம் தோன்றுமோ?
ரேணுகா றிபாய்தீன்
ஏறாவூர்-02.

**எங்கு வரப்போகின்றாய்?**
சமாதானம் அழுகிறதே
ஆயுதங்கள் சிரிக்கின்றதே
ஓசோனிலும் ஓட்டையாமே
எயிட்சும் உண்டு என்னசெய்வாய்?
எங்கு வரப்போகின்றாய்?
ஈ. எம். சமீம்-கல்முனை-04.

**கருவில் கருத்து**
குஞ்சுநான் வெளிவரவா?
கொஞ்சுவாய் அள்ளியென்னை
மிஞ்சும் மனித மிருகங்கள்
எஞ்சுமோ என்னுயிர் உங்கே
அஞ்சும் நான் இங்கிருந்திடுவேன்
பஞ்சுபோல் சுகம் இங்குண்டு
தம்பி. நாதன்-கொழும்பு-07.

**(சு)வாசம்!**
இருப்பிடம் தேசம்,
பிறப்பிடம் வேஷம்.
அதனால்
முட்டைக்குள் (சு)வாசம்!
ஷஹீர்ஷா தாஸிம்-தர்கா நகர்.



**சமாதானம்**
தீவுக்குள்
சமாதானம்
எட்டிப்பார்க்கிறது
ஏ. எச். எம். பாஹிம்
ஹிஜ்ரபுரம்.

**கவசம்**
உயிர் காக்க
உருவான
நவீன
கவசம்
என். ஏ புவனேஸ்வரி
பசறை.


**சமாதான அவதாரம்!**
முட்டையிலிருந்து
கோழி வந்ததா?
கோழியிலிருந்து
முட்டை வந்ததா?
சே!
என்ன இது விந்தை!!
முட்டையிலிருந்து
சமாதானத்திற்கோர்
அவதாரம்
வருகிறது!
இ. சந்திரபாலன்
இரத்தினபுரி.

**எதிர்பார்ப்பு**
மனித வேட்டையில்
உயிர்காக்க
பதுங்கிவிட்டு,
சமாதானப்
பேச்சுகேட்டு,
தலைநீட்டும்
சின்னச்சிட்டு.
ஆரையம்பதி-இதயம்.

**முட்டையிலுமா?**
அட்டையிலே போட்டிடும்
அதிசயத் தகவல்கள்போல்
முட்டையிலும் காட்டிடுதோ
முரசு
எம். எஸ். புகாரி-சாய்ந்தமருது-4.


**சிசுவின் சிந்தனை**
மானிடத்தில்
பிறந்துவிட்டால்,
மண்மேலே
இடமில்லை.
சுதந்திரமாய்
வாழ்வதற்கும்
துப்பாக்கி
விடுவதில்லை.
பறவைக்குக்
குஞ்சானால்
பயமின்றி
வாழ்ந்திடலாம்.
இ. சந்திரபாலன்
இரத்தினபுரி.

## கவிதைப் போட்டி இல-84



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 14.01.1995.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 84
தினமுரசு வாரமலர்
த. பெ. இல-1772,
கொழும்பு.



தினமுரசே, நீ ஒவ்வொரு வாரமும் சுமந்துவரும் அம்சங்கள் அனைத்தும் பிரமாதம். குறிப்பாக அதிரடி அய்யாத்துரை, எக்ஸ்ரே ரிப்போர்ட், சினிமா பகுதி, அரசியல் அலசல் போன்றவை என்னை மட்டும் கவர்ந்தவையல்ல. எமது குடும்பத்தினர் அனைவரையுமே கவர்ந்தவை. ஒருமுறை கண்ட உன்னை மீண்டும் காணாமல் இருக்க முடியாது. இவ்வாறான சுவையான செய்திகளை தந்து நெடுங்காலம் வாழ எனது வாழ்த்துக்கள்.

எம். வே. ரயீஸ் அஹமட்-அநுராதபுரம்.

□□

தினமுரசு தரும் அத்தனை அம்சங்களும் எம் உள்ளங்களுக்கு மகிழ்வூட்டியும் அறிவூட்டியும் வருகின்றன. உண்மையை எடுத்துக்கூறும் நாரதர், இராஜதந்திரி, அற்புதன் ஆகியோருக்கு எம் வாழ்த்துக்கள்.

ஏ. எல். அமீர் ஹுஸைன்-கல்முனை.

□□

### 'தாய்' தரும் வியப்பு

எழுத்தாளர் மக்சீம் கார்க்கியின் 'தாய்' தொடரை படித்து வருகிறேன். நான் இதுவரை காலமும் படிக்காமல் இப்படி ஒரு நாவல் உள்ளதா என வியந்தேன். சமூக வாழ்வை நன்கு பிரதிபலிப்பதாக உள்ளது. என்னைப் போன்ற இளைய தலைமுறைக்கு இது ஒரு வடிகால்.

செல்வன் ஷஹீர்ஷா தாஸிம்-தர்காநகர்.

□□


என் இனிய வண்ண முரசே! வார முரசே! உன்னை ஒவ்வொரு வாரமும் பார்த்து உன் இதழ்களை சுவைக்கின்றோம். நல்ல பல அம்சங்களை வழங்குவதில் உனக்கு நிகர் நீயே! உனது சேவையும், பணியும், தொண்டும் திக்கெட்டும்பறந்து நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

ஆர். ராம், ஏ. சுபாகர், ஏ. சுவேதா, பி. பரமேஸ்வரி, பி. தனூ, எம். மது-பண்டாரவளை.

□□

என் உள்ளம் கவர் கள்ளி. உனக்கேன் வேண்டும் உள்ளி, உன் அழகுமிகு வதனமதை கிள்ளி வாரியணைப்பேன் அப்படியே உன்னை அள்ளி. தினமுரசே, தமிழர்களின் பாரம்பரிய காவியமான மகாபாரத தொடரை அழகிய தமிழில் தரும் ராஜகுமாரனுக்கும் எனது நன்றிகள். நீ தாங்கி வரும் சினிவிசிட் பகுதி என்னை மட்டுமின்றி பல வாசகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்திவிடுகின்றது. மற்றும் நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் ரியலி சுப்பர்! உனக்கு நிகர் நீயே. மென்மேலும் உனது பணி தொடரட்டும்.

ஆறுமுகம் விஜயகுமார்-பம்பரக்கொலை எஸ்டேட்.



அன்பின் முரசே,
நீ வாரா வாரம் சுமந்து வரும் அனைத்தும் மிகச் சிறப்பானவை. அதிலும் மகாபாரதம், இலக்கிய நயம் போன்றவை. உனக்கு எமது அன்பு வாழ்த்து.

ஜனீரா, கோகிலா, எமஸ்ட் உடபுசல்லாவ.

□□

என்றும் என் இனிய முரசே,
வாராவாரம் நீ சுமந்துவரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். ரசிகனின் இலக்கிய நயம் மிகவும் பிரமாதம். நீ மென்மேலும் வளர என் வாழ்த்துக்கள்.

சிஹானா ஏ. குத்தூஸ்-புத்தளம்.

□□

அன்பின் முரசே!
ஒவ்வொரு வாரமும் பல அம்சங்களை சுமந்து வரும் உன்னை எங்களால் வாழ்த்தாமல் இருக்க முடியாது. இது போன்ற பல சுவையான அம்சங்களை தருவீர்கள் என்று வாழ்த்துகின்றோம்.

செல்விகள். நவம் தர்ஷனா, நவம் கீர்த்தனா-வாழைச்சேனை.

□□

'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை' என்ற தலைப்பில் வெளிவரும் அரசியல் தொடர் வியப்பூட்டும் உண்மைகளை வெளிப்படுத்தும்- 'பிளஷ்பேக்' என்று சொல்லலாம். கட்டுரை ஆசிரியர் அற்புதனின் அலசல்..தூள் பறக்கிறது! மற்றும், கவிதைப்போட்டியில் வியக்கப்பட்டவற்றில் இடம்பிடிப்பவைகள் குறைந்து கொண்டே போகின்றதே..! படத்தை ஓரளவு சிறிதாக்கி இடத்தை அதிகப்படுத்தலாமே..!

ஷியானி நளீர்-அக்குறணை.

□□

அன்பின் முரசே,
தித்திக்கும் உன் இதழ்கள் அத்தனையும் தேன். உன்னை ஒரு வாரம் காணாவிட்டால் ஏங்கும் நெஞ்சம்.

செல்வி. டி. புஸ்பலதா-புத்தளம்.

□□

### உண்மையை நேசிப்பவர்கள்

முரசுக்கு வணக்கங்கள்.
அரசின் வெகுஜன தொடர்பு சாதனங்களால் சமாதானம் பற்றிய அதீத கற்பனைகளில் மூழ்கி மூச்சுத் திணறிக்கொண்டிருக்கும் தமிழினத்திற்கு நாரதரின் (எக்ஸ்ரே ரிப்போர்ட்) நறுக்கான கருத்துக்கள் உண்மைகளை உணர்த்த தொடங்கியுள்ளன. பக்கசார்பற்ற விமர்சன துறையை முரசு முழுமையாக அரங்கேற்றிக் கொண்டிருப்பது சுயநல அரசியல் வாதிகளின் வயிற்றில் புளியைக் கரைத்துக்கொண்டிருப்பதை உணரக் கூடியதாக உள்ளது.

என்னைப் பொறுத்தவரை எழுத்தை நேசிப்பவன் முரசை நேசிக்கிறான். முரசை நேசிப்பவன் உண்மையை நேசிக்கிறான் என்பதேயாகும். தொடரட்டும் உங்கள் தூய பணி.

தருணமறிந்து 'தாய்' வரும் சந்தோசத்தை எம்மால் தாங்கமுடியவில்லை. முரசே உன்னை முத்தமிடுகிறேன்.

க. விஜயகுமார்-கலஹா.

□□

### மனதிலே தாய்

முக்கனிச் சுவையோடு அள்ளித் தரும் தினமுரசே, உன் ஆக்கங்கள் அனைத்தும் தேன் அமுதம்! ரசிகனின் இலக்கிய நயம் அருமை. நீ சுமந்துவரும் புதிய தொடர் 'தாய்' என் மனதில் இடம்பிடித்துவிட்டது.

எஸ். சந்தனராஜ்-அப்புத்தளை.

□□

இனிய முரசே,
உன்னைப் பாராட்டி எத்தனை மடல்கள்தான் தீட்டிவிட்டேன்! உனக்கு என்ன கோபம் என்னோடு? ஏன் எனது பாராட்டுதல்களைப் பிரசுரிக்க மறுக்கின்றாய்? உனக்குப் புகழ் மாலை சூடினால், தூக்கி வீசுகின்றாயே! காரணத்தையாவது கூறேன்?

கே. இஸ்மத் இர்பானா-ஏறாவூர்-02.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முகாம்களில் சமையல் பணிசெய்யும் பிரபாகரன்!

## முக்கிய பிரமுகர்கள் மீது தொடரும் விசாரணை!

## அமுதர் கொலை மாத்தையாமீது சுமத்தப்படுமா?

**"புலிகளின் முன்னாள் பிரதித் தலைவர் மாத்தையா மீதான விசாரணை தொடர்கிறது. பொட்டம்மானின் வலதுகரமான லெப்-கேணல் அமுதன் ஊழல் குற்றச்சாட்டுக்கு தண்டனை பெற்றுச் சென்றபோதே இராணுவத்தினரின் தாக்குதலுக்கு உள்ளாகி மரணமானார்" இவ்வாறு கனடாவில் இருந்து வெளிவரும் 'மஞ்சரி' என்னும் பத்திரிகை புதிய தகவல்களை வெளியிட்டுள்ளது.**

### சுய தண்டனை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரன் தற்போது தனக்குத்தானே சில தண்டனைகள் விதித்து அவற்றை தானே மேற்கொண்டு வருகிறார்.

அண்மைக் காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உள் பிரச்சனைகள் ஏற்பட்டது அனைவரும் அறிந்த விடயம்.

முன்னாள் பிரதித் தலைவர் மாத்தையா, முன்னாள் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் யோகி ஆகியோர்மீது விசாரணை நடக்கிறது.

இதேவேளை ஜெயம், குட்டி, சீலன், சலீம், போல், ஆகியோர் உட்பட இரண்டாம் கட்டத் தலைவர்கள்மீதும் இயக்க விசாரணைகள் நடந்து வருகின்றன.

இந்த விசாரணைகளை பொட்டம்மான் தலைமையிலான உளவுப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

தனது நெருங்கிய சகாக்களின் நடத்தையால் பிரபாகரன் மனமுடைந்துள்ளார். தனது சகாக்கள் மீதே விசாரணை நடத்தப்படவேண்டிய நிலை ஏற்பட்டதையிட்டு பிரபாகரன் கவலையடைந்துள்ளார்.

சகாக்களின் இந்த நடத்தை தன்னையும் ஓரளவு சார்ந்தது என்று பிரபாகரன் எண்ணியுள்ளார். ஒரு நல்ல தலைவன் தனது சகாக்களின் நடத்தைக்கு ஓரளவு பொறுப்பு என்று பிரபாகரன் கருதுகிறார். அதற்காக தானும் ஒருவிதத்தில் பிராயச்சித்தம் தேடவேண்டுமென்று நினைக்கிறார்.

எனவே-திரு.பிரபாகரன் தனக்குத்தானே தண்டனை விதித்து அதனைக் கடைப்பிடித்தும் வருகிறார்.

### சுத்திகரிப்புப் பணி

பாதுகாப்பு காரணங்களுக்காக அடிக்கடி இடம் மாறும் திரு.பிரபாகரன் விடுதலைப் புலிகளின் முகாம்களுக்கு சென்று பணிபுரிந்து வருகிறார். ஏனைய உறுப்பினர்கள்போல் தனக்கும் 'முறை'போட்டு' சமையல் செய்கிறார். முகாம்களின் சுத்திகரிப்பு பணிகளில் ஈடுபடுகிறார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உள்ளார்ந்த கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்காக இத்தகைய பணிகள், தண்டனைகளாக வழங்கப்படுவது வழக்கம்.

பிரபாகரனின் இச் செயற்பாடு இயக்க உறுப்பினர்கள்மீது- குறிப்பாக இளம் உறுப்பினர்கள்மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தனக்குத்தானே தண்டனை விதித்துள்ள தலைவரின் பண்பு அவர்களை மனம் நெகிழ வைத்திருக்கிறது.

இதேவேளை முன்னாள் பிரதித் தலைவர் மாத்தையா மீதான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மாத்தையா விவகாரத்தில் கைதுசெய்யப்பட்ட எஞ்சினியர் சுரேசுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுவிட்டதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது.

### அமுதர் கொலை விவகாரம்

மாத்தையாவின் கடந்தகால நடவடிக்கைகள் முழுவதும் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரை விசு தலைமையிலான குழு சுட்டுக்கொன்றது. இது தொடர்பாகவும் ஆராயப்பட்டுவருகிறது.

மாத்தையா, யோகி போன்றோருக்கு இந்திய உளவு அமைப்புக்களுடன் தொடர்பு இருந்ததா என்று கண்டறியும் முயற்சியும் தற்போது நடந்துவருகிறது.

மாத்தையாவின் கடந்தகால பணிகளில் சம்பந்தம் வைத்திருந்தவர்கள் புலிகளது உளவுப் பிரிவால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இதே வேளை மாத்தையாவின் மனைவி, தான் பிரபா மீது நம்பிக்கை வைத்திருப்பதாகவும் அவர் எடுக்கும் முடிவுகளுக்கு கட்டுப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். நல்ல முடிவு எடுக்கப்படும் என்று தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவில் ஆயுதப் பயிற்சி பெற்ற முதலாவது அணியைச் சேர்ந்தவர் மாத்தையாவின் மனைவி (கல்பனா) என்பது குறிப்பிடத்தக்கது.

### யோகி மீண்டும் கைது

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முன்னாள் செயலாளர் யோகி மீண்டும் விசாரணைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார். முன்னர் விசாரணைக்குள்ளாகிய யோகி இயக்கத்தை விட்டு நீக்கப்பட்டிருந்தார்.

யாழ் இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு விளையாட்டுத்துறை பயிற்சி வழங்கினார். அத்துடன் சிறு கோழிப் பண்ணை ஒன்றையும் தொடக்கினார்.

பின்னர் யோகி மீண்டும் இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். ஆனால் புதிய பொறுப்பு எதுவும் வழங்கப்படவில்லை.

இப்போது மீண்டும் யோகி கைதுசெய்யப்பட்டுள்ளார். தற்போது அவர் எவராலும் சந்திக்க முடியாத நிலையில், சூரிய வெளிச்சம் இல்லாத 'பங்கர்' விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளதாக அறிய முடிகிறது. மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட்ட 'யோகி' மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது ஏன் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

உண்மையில் யோகிக்கு மன்னிப்பு வழங்கப்படவில்லை என்றும், உளவுப் பிரிவு விசாரணையின் ஒரு தந்திரமாகவே யோகி விடுதலை செய்யப்பட்டதாகவும் இது ஒரு விட்டுப்பிடிக்கும் செயல் என்றும் கூறப்படுகிறது.

மல்லி என்ற லெப்டினன்ட் கேணல் அமுதன் உளவுப் பிரிவில் பொட்டம்மானின் வலதுகரமாக திகழ்ந்தவர். இவர்மீதும் ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் சம்பந்தமான விசாரணை நடந்தது. இவரது விசாரணை முடிந்து தண்டனை வழங்கப்பட்டது. தனது பதவித் தரத்தை இழக்காத நிலையில் சிப்பாய்பணி மேற்கொள்ள மணலாற்றுக்கு (வெலிஓயா) சென்ற லெப்டினன்ட் கேணல் அமுதன் கொக்குத் தொடுவாய் பகுதியில் இராணுவத்திடம் சிக்கி உயிரிழந்தார்.

இவ்வாறு 'மஞ்சரி' தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

### குட்டி விடுதலை

ஆனால் முரசுக்கு கிடைத்துள்ள தகவலின்படி கிளிநொச்சியில் நிதி திரட்டலுக்கு பொறுப்பான குட்டி உளவுப் பிரிவின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். நிதி மோசடி தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட குட்டி தற்போது விடுதலையாகி மீண்டும் கிளிநொச்சி பகுதியில் நிதி திரட்டல் நடவடிக்கைக்கு பொறுப்பாக உள்ளார். கொழும்பில் இருந்து லொறிகளில் செல்லும் பொருட்களுக்கு வரி விதிப்பது போன்ற பணிகள் குட்டியின் பொறுப்பின்கீழ் நடந்து வருகின்றன. சலீம் போன்றோர்தான் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சலீமை விசாரணைக்காக வவுனியாவில் இருந்து அழைத்துச் சென்றது புலிகளது அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ் செல்வன். சலீம் இறுதியாக தமிழீழ பொருளாதார நிறுவனத்தில் பணியாற்றியவர். இவர் மாத்தையாவின் விசுவாசி என்று நம்பப்படுகிறது. ■

---

# 'இனப்பிரச்சனை தீர்வுக்கு ஒரேவழி சமஷ்டி!'

## முன்னாள் ஜனாதிபதிக்கு பிறந்துள்ள ஞானம்!

இலங்கையில் சிறுபான்மையினர் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதுடன் வட-கிழக்கில் அமைதியினை நிலைநாட்ட சமஷ்டி ஆட்சி முறையினை ஏற்படுத்துவதே சிறந்த வழியாகும் என முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இரு தடவைகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தான் இருந்த வேளையில் சமஷ்டி முறையினை ஏற்படுத்துவதற்கு நாட்டு மக்களின் ஒத்துழைப்பு கிடைத்திருக்கக்கூடிய சாத்தியம் இருக்கவில்லை என்றும் அவர் கூறுகிறார்.

"தர்மிஷ்ட சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்காகவே நான் திட்டங்களை வகுத்தேன். ஆனால் அரசாங்கத்துக்கெதிராக வன்முறைகள்-1983ல் தலையெடுத்ததைத் தொடர்ந்து என்னுடைய திட்டங்கள் அனைத்தும் தவிடு பொடியாகிவிட்டன" என்கிறார் 85 வயதான முன்னாள் ஜனாதிபதி. அவர் தொடர்ந்து கூறியதாவது:

"வடக்கிலே தலையெடுத்த பிரிவினைவாதிகளின் நடவடிக்கைகளுக்கு இந்தியா பின்னணியில் நின்று உதவி புரிந்திருக்கிறது. அவர்களுக்கு பணமும் ஆயுதங்களும் தந்தது மட்டுமல்லாமல் எமது அரசுக்கு எதிராக வன்முறை வழிகளைப் பயன்படுத்துவதற்கான ஆயுதப் பயிற்சிகளையும் இந்தியா வழங்கியிருக்கிறது. இது தவறான நடைமுறையாகும். ஆரம்பத்தில் இந்திரா காந்தியும் தொடர்ந்து ராஜீவ் காந்தியும் இத்தகைய உதவிகளைக் கொடுத்து பிரிவினைவாதிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் கொடுத்தனர். எம்.ஜி.ஆர், பிரபாகரனின் நெருங்கிய நண்பராகவே இருந்தார். இத்தகைய காரணங்களினால் அன்று பிரிவினைவாதிகளை எம்மால் அடக்க முடியாமற் போய்விட்டது.

"காலங் கடந்த பின்னர்தான் இந்தியா விட்ட தவறுகளை ராஜீவ் காந்தி உணரத் தலைப்பட்டார்.

"இனப்பிரச்சனையினைத் தீர்ப்பதற்காகவே சர்வ கட்சி மாநாடுகளை நடத்தினேன். இதனால் அவர்களுடைய கோரிக்கைகள் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட முடியாதவையாக இருந்தமையினால் இச்சர்வ கட்சிக் கூட்டங்கள் தோல்வியிலேயே முடிந்தன. அக்கால கட்டத்திலும் சமஷ்டி ஆட்சிமுறை ஒன்றினைப் பற்றிய பேச்சுக்களும் அடிபட்டன. ஆனால் அப்போது தெற்கில் அதற்கான ஆதரவு கிடைக்கும் சூழ்நிலையில்லை. இன்றைய நிலையில் நாட்டின் பிரச்சனைகளுக்குத் தீர்வாக சமஷ்டி ஆட்சிமுறையினைப் புகுத்தினால் அமைதியான சூழ்நிலை திரும்ப வழி கிடைக்கும் என்பதே எனது நம்பிக்கை." ■

---

# "பாப்பரசர் மன்னிப்புக் கேட்க வேண்டும்"

## பௌத்த அமைப்புக்களது சம்மேளனம் கூறுகிறது

"**பா**ப்பாண்டவர் இந்த பௌத்த தேசத்தின் மண்ணில் காலடி எடுத்து வைப்பதற்கு முன்னதாகவே தான் பௌத்த மதக் கோட்பாடுகளைப் பற்றிக் கூறிய கருத்துக்களுக்காக மன்னிப்புக் கோரவேண்டும். கத்தோலிக்க ஆயர்கள் பாப்பாண்டவர் சார்பாக மன்னிப்புக் கோருவதை ஏற்க மாட்டோம்" என்று பௌத்த அமைப்புகளின் சம்மேளனத்தின் செயலாளரான கல்லகே புண்ணியவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

"பௌத்த மதக் கோட்பாடுகளுக்கு தவறான அர்த்தம் கொடுக்குமுகமாக பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். இதனால் இந்நாட்டில் வாழும் பௌத்த மக்களும் பௌத்த சந்நியாசிகளும் புண்பட்டிருக்கின்றனர். பாப்பரசருடைய கருத்துக்கள் பௌத்த நெறியில் நம்பிக்கை வைத்திருக்கும் சகலரையும் எவ்வாறு பாதித்திருக்கிறது என்பதனை கண்டி, அனுராதபுரம், மாத்தறை போன்ற இடங்களிலுள்ள பௌத்த குருமாருக்கு விளக்கி வருகிறோம். இவற்றை முதலில் குருமாருக்கே உணர்த்தி வருகிறோம். விரைவில் பொது மக்களுக்கும் இத்தகைய விளக்கம் தரப்படும். இவர்களும் எமது எதிர்ப்பு இயக்கத்தில் இணைந்துவிடுவார்கள்" இவ்வாறு செயலாளர் புண்ணியவர்த்தனா கூறுகிறார்.

---

# தங்கத்துரையின் பதவி ஜனவரியோடு காலி?

## திருமலை கூட்டணி வட்டாரங்கள் தகவல்

(திருமலை நிருபர்)

**த**மிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு.தங்கத்துரை இம்மாத முடிவுக்கு இடையில் பதவி விலகுவார். அவரது இடத்திற்கு கூட்டணி செயலதிபர் திரு.இரா.சம்பந்தன் நியமனம் செய்யப்படுவார் என்று திருகோணமலை தமிழர் விடுதலை கூட்டணி வட்டாரங்கள் முரசுக்கு தெரிவித்தன.

ஏற்கனவே கட்சிக்குள் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி இந்த வருடம் ஜனவரி மாதம் வரையே திரு.தங்கத்துரை பா.உறுப்பினராக இருக்கமுடியும் என்று அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதே வேளை திரு.தங்கத்துரை தனது பதவியை விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்று அறியப்படுகிறது. திருகோணமலை கிளை தங்கத்துரைக்கு எதிராக செயற்படுகிறது. திரு.இரா.சம்பந்தன் எம்.பியாக வேண்டும் என்பதே அவர்களது நோக்கமாகும். திரு.சம்பந்தனைவிட திரு.தங்கத்துரை கட்சியில் மூத்தவர் என்று தங்கத்துரை ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

கட்சியில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் சட்டப்படி செல்லாது என்பதால் திரு. தங்கத்துரை தானாகவே பதவி விலகாவிட்டால் கூட்டணித் தலைமையால் எதுவும் செய்ய முடியாது போகலாம்.

---

# புளொட் உபதலைவர் படுகொலை!

## உள் முரண்பாடா? புலிகளா?

(நமது நிருபர்)

**பு**ளொட் அமைப்பின் உப தலைவர் கரவை கந்தசாமி கடந்த 31.12.94 அன்று தெஹிவளையில் அவரது இல்லத்தில்வைத்து சுட்டுக்கொல்லப்பட்டமை தெரிந்ததே.

இக்கொலை தொடர்பாக பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப் படுகொலை தொடர்பாக புளொட் தலைமைப்பீடம் உடனடியாக எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை. வவுனியாவில் இருந்து ஒரு அறிக்கை வெளியிடப்பட்ட போதும் கொலைக்கு யார் காரணம் என்று தெளிவாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இக்கொலை நடவடிக்கை குறித்து பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கும்போது, கொலைக்கு காரணம் உள்முரண்பாடா அல்லது புலிகளா என்று கண்டறிய விசாரணை நடத்தப்பட்டுவருவதாக தெரிவித்தன.

விஷமச் சக்திகள் சில தவறான கருத்தை ஏற்படுத்தும் விதமாக உள் முரண்பாடுதான் கொலைக்கு காரணம் என்று கூறி.வருவதாக 'புளொட்' தலைவர் சித்தார்த்தன் பா.உ. தெரிவித்திருக்கிறார்.

---

# வடமேல் மாகாண சபைக்குள் பிளவு?

**வ**டமேல் மாகாண சபையில் ஐக்கிய தேசியக் கட்சியினரால் தாம் புறக்கணிக்கப்படுவதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் குமுறத் தொடங்கியுள்ளனர்.

வடமேல் மாகாண சபையில் ஜனநாயக ஐ.தே.முன்னணி தனித்து இயங்கவேண்டும் என்று கோரும் தீர்மானம் தலைமைக் காரியாலயத்தின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும், வடமேல் மாகாண சபை சபாநாயகர் தலைமையில் நடந்த கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

வடமேல் மாகாண சபை முதல்வர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# தொலைத் தொடர்பு சீர்குலைவு

(காரைதீவு நிருபர்)

**க**ல்முனைப் பிரதேசத்தில் தொலைத் தொடர்புச் சேவைகள் கடந்த இரு வாரங்களாக சீர்குலைந்து காணப்படுகின்றன.

காரைதீவு, கல்முனை, நிந்தவூர், அக்கரைப்பற்று, மற்றும் சம்மாந்துறை முதலான இடங்களில் தபாலகம் உட்பட மக்கள் வங்கி, வைத்தியசாலைகளும் தொலைத் தொடர்பில் ஏற்பட்ட கோளாறால் சேவைகள் பாதிப்படைந்த நிலையிலுள்ளன.

இது தொடர்பாக பொதுமக்கள் கல்முனைத் தொலைத் தொடர்புப் பணியகத்தில் புகாரிட்டும் திருத்த வேலைகள் துரிதமாக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

---

# இரண்டாம் சுற்றுப் பேச்சு!

## பிரபாவின் கோரிக்கைக்கு

# அரசு இணக்கம்

உடனடிப் பிரச்சனைகள் பற்றியே முதலில் பேசவேண்டும். அதன் பின்னரே அடிப்படைப் பிரச்சனைகள் பற்றி பேசவேண்டும் என்று புலிகளது தலைவர் பிரபாகரன் பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கு 22.12.94 அன்று அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

யுத்தத்தின் மூல வேர்களை ஆராய்ந்து இனப் பிரச்சனை தீர்வு பற்றி பேசவேண்டும் என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் எழுதிய கடிதத்திற்கே பிரபா அவ்வாறு பதில் அனுப்பியிருந்தார். இது தொடர்பாக ஏற்கனவே முரசில் விபரமாக செய்தி வெளியிட்டிருந்தோம்.

இவ்வாறு இரு தரப்பும் பேச்சுத் தொடர்பாக கொண்டிருந்த முரண்பட்ட நிலையில் தாமதமடைந்த பேச்சு முயற்சிகள் அரசின் விட்டுக்கொடுப்பையடுத்து மீண்டும் ஆரம்பித்துள்ளன.

இரண்டாம் சுற்றுப் பேச்சிற்காக யாழ் சென்ற தூதுக்குழுவிடம் புலிகள் உடனடிப் பிரச்சனைகள் பற்றியே முன்னுரிமை கொடுத்து வலியுறுத்தியுள்ளனர்.

முதல் சுற்றுப் பேச்சில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளையே புலிகளின் தரப்பு மீண்டும் வலியுறுத்தியிருக்கிறது.

# சொந்த எண்ணப்படி அனுப்பிய விண்ணப்பம்!

# வடக்கு-கிழக்கு மாகாண சபையின் அந்த ஆறு பேர் யார்?

(சஞ்சயன்)

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வடக்கு-கிழக்கு மாகாணசபை அனுப்பிய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

மாகாணசபை வட்டாரங்கள் என்ற பெயரில் வெளியான அந்தச் செய்தி சில சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது.

வடக்கு-கிழக்கு மக்களை பிரதிநிதித்துவப் படுத்துவதாக கூறி மாகாண்சபை சிபாரிசு செய்த அந்த ஆறு எழுத்தாளர்களும் யார்?

அவர்கள் எவ்வாறு தெரிவுசெய்யப் பட்டார்கள்? வடக்கு-கிழக்கு மாகாண தலைமைச் செயலர் திரு.கணேசநாதன் தனது பெயரையும் இணைத்து தமிழக அரசிடம் விண்ணப்பம் போட்டிருந்தார்.

காதும் காதும் வைத்ததுபோல தமிழக அரசுக்கு விண்ணப்பம் அனுப்பினார்கள். தமது எண்ணப்படி, தாம் விரும்பும் நபர்களை சிபாரிசு செய்தபோது பத்திரிகைகளுக்கு மூச்சுக்காட்டவில்லை. விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டபோது மட்டும் வடக்கு-கிழக்கு மக்களுக்கு தமிழக அரசு அநியாயம் செய்து விட்டது போல செய்தி கொடுக்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தையோ மாகாண எழுத்தாளர்களையோ பிரதிநிதித் துவப்படுத்தும் பொறுப்பை இதுவரை எவரும் திரு.கணேசநாதனுக்கு வழங்கியதாகத் தெரியவில்லை. எனவே அவர்களது விண்ணப்பத்தை புறக்கணித்தமை வடக்கு-கிழக்கு மாகாணத்தை புறக்கணித்தமையாக கருத இடமில்லை.

இலங்கைத் தமிழ் அறிஞர்கள் விடயத்தில் தமிழக அரசு சரியாக செயற்படவில்லை. அழைக்கப்படவேண்டிய பெரியவர்கள் பலருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்பது மறுக்கமுடியாத விடயம்.

ஆனால், வடக்கு-கிழக்கு மாகாணசபையில் உள்ள சிலர் தமது அதிகாரத்தை பயன்படுத்தி தமிழராய்ச்சி மாநாடு என்ற போர்வையில் சுற்றுப் பயணம் நடத்த முடியாமல் போனதற்காக நாம் வருத்தப்படத் தேவையில்லை.

வடக்கு-கிழக்கு மாகாணசபை சிபாரிசு செய்ததாகக் கூறப்படும் ஆறு எழுத்தாளர்கள் யார்? அவர்கள் தமிழுக்கு ஆற்றிய அரும் பெரும் சேவை என்ன? எழுத்துத் துறையில் படைத்த சாதனை என்ன? போன்றவற்றை அறிய ஆவலாயுள்ளோம். திரு.கணேசநாதன் விளக்குவாரா?

## 'தமிழீழ பொதுக்கல்வி தேர்வு'

## 16 ஆயிரம் மாணவர்கள் தோற்றினர்

'வருடா வருடம் தமிழீழ பொதுக்கல்வி தேர்வு' என்னும் கல்வித் தேர்வு பரீட்சைகளை யாழ் குடாநாட்டில் புலிகள் அமைப்பினர் நடாத்திவருகின்றனர்.

94ம் ஆண்டுக்கான பரீட்சையில் 16,500 மாணவர்கள் சகல பாடசாலைகளில் இருந்தும் பங்குகொண்டிருந்தனர்.

யாழ் குடாநாட்டில் 7 பாடசாலைகளைச் சேர்ந்த 9 மாணவர்கள் 8 பாடங்களில் மிகுதிறன் தேர்ச்சி (டீ தரம்) பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசால் நடத்தப்படும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு ஈடாக புலிகளால் நடத்தப்படும் பரீட்சையே 'தமிழீழ பொதுக் கல்வி தேர்வு' பரீட்சையாகும்.

## யுத்த சூழலால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் உதவ முன்வந்துள்ளது கனடா பல்கலைக்கழகம்

(ஏறாவூர் நிருபர்)

யுத்தத்தின்போது பெற்றோரை, உறவினரை இழந்து அநாதைகளாக அல்லது வேறு வகைப் பாதிப்பிற்குள்ளான மாணவர்களின் உளநலன் பற்றிய ஆய்வொன்றை கனடா மக்.மாஸ்டர் பல்கலைக்கழகம் மேற்கொள்ளவிருக்கிறது.

இலங்கையில் பாதிப்பிற்குள்ளாகியுள்ள தமிழ்-முஸ்லிம்-சிங்கள சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மனநிலையில் கடந்தகால யுத்தங்களும், வன்செயல்களும் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றனவென்பதைக் கண்டறிவதும் அத்தகைய தாக்கங்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்குமான வழி வகைகளை மேற்கொள்வதுமே மேற்படி ஆய்வின் நோக்கமாகும்.

எதிர்வரும் 1995 ஜனவரியில் தொடங்கவிருக்கும் இந்த ஆய்வு வேலைத் திட்டத்தை மேற்கொள்ளவென மட்டக்களப்பு, பொலனறுவை, குருநாகல் ஆகிய மாவட்டங்களிலிருந்து தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களைச் சேர்ந்த சமூக நலப் பணிகளில் ஆற்றலுள்ள 75பேர் உளநல ஆய்வாளர்களாகப் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்தைச் சேர்ந்த உளநல மருத்துவர் திருமதி. அனாடொனி, கனடாவைச் சேர்ந்த செல்வி அபர்ணா சிவசுப்பிரமணியம், இலங்கை குடும்ப புனர்வாழ்வு நிலைய இணைப்பதிகாரி திருமதி.இந்திரா காந்தி பெரேரா, வைத்திய கலாநிதி திரு.எஸ்.சிவயோகன், பிதா டேமியன் ஆகியோர் இலங்கையில் இத்திட்ட அமுலாக்கத்திற்குப் பொறுப்பாயுள்ளனர்.

## வேலித் தகரத்தில் பாடம் படிக்கிறார்கள்!

(திருமலை நிருபர்)

திருகோணமலையின் பிரபல பெண்கள் கல்லூரி ஒன்றில் கரும் பலகைகளுக்குப் பதிலாக தகரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் வருட மாணவிகளின் வகுப்பறைத் தடுப்புக்காகப் போடப்பட்டிருக்கும் தகர வேலியையே இவ்வாறு கரும்பலகையாகப் பயன்படுத்துகிறார்கள்.

மூன்றாம் ஆண்டு மாணவர்களின் கரும்பலகையோ கருமை நீங்கி வெண்மை படர்ந்த நிலையில் காணப்படுகின்றது. குழந்தைகள் கஷ்டப் பட்டுத்தான் ஆசிரியைகள் எழுதுவதைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

பாடசாலை நிர்வாகமோ அபிவிருத்திச் சபையோ இக்குறைபாடுகள் பற்றி சற்றும் அலட்டிக்கொள்ளாமல் மனைப் பொருளியல் துறையில் "அழியும் பொருட்களை"க் கொள்வனவு செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பதை எந்தக் கணக்கில் வைப்பது எனப் பெற்றோர்கள் கேட்கிறார்கள்.

அடுத்த தவணை ஆரம்பத்திலாவது இக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென பெற்றோர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

## கல்விப் பணிமனைக்கு கற்றுக்கொடுப்பது யார்?




புத்தளம் கல்வி வலயப் பணிமனையினால் இவ்வலயத்திலுள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் அண்மையில் நடத்தப்பட்ட வகுப்பேற்றப் பரீட்சைகளுக்குரிய அனேகமான வினாத்தாள்களில் இடம்பெற்றுள்ள எண்ணிலடங்கா எழுத்துப் பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும்தான் நான் இவ்விதம் சுட்டிக்காட்டுகின்றேன்.

வீதிகளிலும், அலுவலகங்களிலும் உள்ள பெயர்ப் பலகைகளில்தான் இத்தகைய தமிழ்க் கொலை என்றால் மாணவர்களின் உயிர் நாடியான கல்வி விஷயத்திலும் சம்பந்தப்பட்டவர்கள் அசிரத்தையாக இருப்பது கண்டிக்கத்தக்கதாகும்.

சென்ற முறையும் இத்தகைய பிழைகள் வினாத்தாள்களில் இடம்பெற்றிருந்தன. எதிர்வரும் காலங்களில் இத்தகைய தவறுகள் நடைபெறாவண்ணம் தவிர்த்துக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறேன்.

ஐ.என்.எம். நிஹ்றீர்.

## பாவனையாளர் பாதுகாப்புச் சங்கம்!

## மன்னார் தீவில் ஆரம்பம்!!

(மன்னார் நிருபர்)

அண்மைக்கால வன்செயலின் காரணமாக இயங்காமல் இருந்த பாவனையாளர் பாதுகாப்புச் சங்கங்களை இயங்க வைக்கவும், புதிதாக பல சங்கங்களை ஆரம்பிக்கவும் மன்னார் தீவுப் பகுதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட விலைக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் திரு.மு.செ.நவரத்தினம் பல முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இவர் முரசுக்கு தெரிவித்த தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: வன்செயல் காரணமாக சில காலம் இயங்காமல் இருந்த பாவனையாளர் பாதுகாப்புச் சங்கங்கள் புனரமைப்பு செய்யப்பட்டு வருவதுடன் பல புதிய சங்கங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தாழ்வுபாடு, உப்புக்குளம், மன்னார், பனங்கட்டிக் கொட்டு கிழக்கு, மேற்கு, புதுக்குடியிருப்பு, கரிசல், தாராபுரம், எழுத்தூர், எருக்கலம்பிட்டி, போன்ற பகுதிகளில் புதிதாக சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஏனைய பகுதிகளிலும் இது உருவாக்கப்பட்டு வருகின்றன.

விலைப்பட்டியலை பொதுமக்கள் பார்வைக்காக வைத்தல், பதுக்கல், விற்க மறுத்தல், நிறை குறைத்து விற்றல் போன்றன தொடர்பாக வர்த்தகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் தொடர்பாக வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு விளக்கமளிக்கப் பட்டு வருகின்றன.

அநேகமான பேக்கரிகள், வர்த்தக நிலையங்கள் என்பன விலைக்கட்டுப்பாட்டு சட்டங்களை ஓரளவு நடைமுறைப்படுத்தி வருகின்றன. பாவனையாளர் விலையுயர்வு மற்றும் பிரச்சனைகளினால் பாதிக்கப்படாமலிருக்க பல புதிய நடைமுறைகள் கொண்டு வரப்படவுள்ளன. இதற்கு வர்த்தகர்களின் பூரண ஒத்துழைப்பை நாடியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## குருநாகலில் காணாமல் போகும் -மோட்டார் சைக்கிள்கள்!-

(குருநாகல் நிருபர்)

அண்மைக் காலங்களில் குருநாகல் நகரில் மோட்டார் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றமையை காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்காக இங்கு பல குழுக்கள் இயங்குவதாகவும் கூறப்படுகிறது. அண்மையில் சம்பந்தப்பட்ட ஒரு குழுவினரையும், களவாடப்பட்ட ஐந்து மோட்டார் சைக்கிள்களையும் குருநாகல்ப் பொலிஸார் மீட்டனர். பறிகொடுத்த உரிமையாளர்களை அழைத்து தங்கள் வாகனங்களை அடையாளம் காட்டும்படி கேட்டுப்பார்த்த பொழுது உரிமையாளர்கள் திகைத்தனராம். காரணம் நிறம் மாற்றாப்பட்டு, அடிச்சட்ட இலக்கம், இயந்திர இலக்கம் என்பனவும் மாற்றப்பட்டிருந்ததாம் சில அடையாளங்களை வைத்தே தன் வாகனத்தை மீளப் பெற்றதாக அரச ஊழியரொருவர் தினமுரசு நிருபரிடம் தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிள்களைத் திருடி துண்டுகளாகக் கழற்றி விற்கும் குழுக்களும் இயங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை வடமேல் மாகாண முதலமைச்சர் அலுவலகத்திற்குச் சொந்தமான வாகனமொன்றும் களவாடப்பட்டுள்ளது. இதுவரை அதுபற்றிய தகவல் எதுவும் இல்லை. மோட்டார் சைக்கிள் விற்பனையில் பிரதான இடமாகத் திகழும் குருநாகலுக்கு வெளியூர்களில் இருந்து வந்து வாங்கிச் செல்லும்போது இடைவழியில் வைத்து, அபகரித்துச் சென்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. முக்கியமாக சிறுபான்மையினரே பறிகொடுத்துள்ளதாகத் தெரியவருகிறது. எனவே அவதானம் தேவையென தினமுரசு மூலம் சுட்டிக்காட்டப்படுகிறது.

## விளம்பரப் பகுதி


இனிய இசைத்தமிழ் நிகழ்ச்சி



செட்டியார் தெரு, கொழும்பு -11
அம்பிகா ஜுவல்லர்ஸ்
ஆதரவில்
LION'S CLUB
OF COLOMBO CITY
வழங்கும்
முதன் முறையாக
கவியரசு வைரமுத்து தொகுத்தளிக்கும்







சாகுல் ஹமீட் -- மின்மினி --
உன்னிமேனன் --
ராஜேஸ் -- சுபா
சுப்பர் சன்ஸ் இசைக்குழுவினரோடு
இசைக்கும்
ரகுமானின்
ரம்ய கானங்கள்
'95 ஜனவரி 8



சுகததாச உள்ளரங்கு
மாலை 6.15

டிக்கட் கிடைக்குமிடங்கள்:
செட்டியார் தெரு- அம்பிகா ஜுவலாஸ், பூபாலசிங்கம் புத்தக சாலை
கொட்டாஞ்சேனை 'கொட்டஹேன பாமசி, கிரிஸ்கோ பாமசி, ( புளூமெண்டால் பிளட்ஸ்)
முகத்துவாரம் - குளோப் பாமசி ( சென். ஜேம்ஸ் சந்தி). ஆமர் வீதி - அம்பாள் கபே, ஸ்ரீ வாணி விலாஸ்
கிராண்ட்பாஸ் - ராஜ் ஸ்ரீ ஜுவலர்ஸ் ( பலாமரச் சந்தி). மருதானை - K.R.K. கோல்ட்ஹவுஸ்
வெள்ளவத்தை - S.J.ஷொப்பிங் சென்ரர் ( குத்ரா மாவத்தை அருகாமையில்). கீதா கொம்யுனிகேஷன்
பம்பலப்பிட்டி - கிறீன்லண்ட்ஸ், சரஸ்வதி லொட்ஜ், டிசைன் டெக்ஸ்
தெகிவளை - பான் பாமா பாமசி 162 A. காலி வீதி.





மலையாள மாந்திரீகம்

27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையாள மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

நிறைவேறாத காதல் வசியம்- 100/97
கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
கணவன் மனைவி பிணக்கு- 100/45
பெற்றோர் விரும்பாத காதல்-100/87
குத்தகை குடியிருப்போர் பிரச்சனை-100/33
தீரா ஆஸ்துமா நோய்- 100/100
திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
குடிபோதை நிவர்த்தி- 100/97
கல்வி ஞான விருத்தி- 100/72
சகல வியாபார விருத்தி- 100/83
மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
புத்திர பாக்கியம்-100/33
பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

தலைமைப்பீடம்
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3093

கொழும்பு இல்லம்-
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 342463, 342464



நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:
ஒரு வருடத்திற்கு ரூபா 492/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்கள் ரூபா 251/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்கள் ரூபா 128/= (13 வாரங்கள்)
சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.
சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.



தையல்

ஆண்-பெண்களுக்கான
ஆடைகளைச் சிறந்த,
நவீன முறைகளில் தைத்துக்
கொள்ள நாட வேண்டிய
ஒரே இடம்-
M.STIEEPHAN
CUSTOM TAILOR
191/17, MANGALA UYANA
THIMBIRIGASYAYA ROAD,
COLOMBO-05.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

இந்தியாவில் பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராக அவரது கட்சிக்குள்ளிருந்தே அம்புகள் ஏவப்படுகின்றன.

அத்தி பூத்ததுபோல எப்போதாவது மெல்லியதாய் புன்னகைக்கும் இந்தியப் பிரதமரை மாநிலத் தேர்தல்கள் கடுமையாக சிந்திக்கவைத்திருக்கின்றன.

'நான் இருக்க நரசிம்மராவ் பிரதமராவதா?' என்று ஆரம்பத்திலே இருந்தே புகைந்துகொண்டிருந்தவர் அமைச்சர் அர்ஜுன் சிங்.

பிரதமர் நரசிம்மராவ் தன்னை ஓரளவு நிலைப்படுத்திக்கொண்டதால் அர்ஜுன் சிங் தனது கத்தியை ஒளித்துவைத்துக்கொண்டு அவரோடு சமரசமாய் நடந்துகொண்டார்.

சமீபத்தில் இந்திய மாநிலங்கள் சிலவற்றில் நடந்த தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கு வாக்காளர்கள் அதிர்ச்சி வைத்தியம் செய்துவிட்டார்கள்.

எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா கட்சியிலும் இந்தியாவெங்கும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய தலைவர் என்று எவரும் இல்லை. அக்கட்சித் தலைவர்கள் அத்வானி, வாஜ்பேய் போன்றவர்களது செல்வாக்கும் நிலையானதாக இல்லை.

இந்தியாவில் காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய தேசியக் கட்சிகளது துரதிஷ்டம் என்னவென்றால் தப்பித் தவறி ஆட்சிக்கு வந்தால் கூட நிலைத்திருப்பதில்லை. எனவே, மக்களும் நிலையான நம்பிக்கை வைப்பதில்லை.

நேரு குடும்பத்தினரே ஆட்சி நடத்த பாதிப்பு என்று நினைக்கவேண்டியிருக்கும்.

ஆக, இந்தியாவில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ராஜீவ் கொலை விவகாரம், மறப்போம் மன்னிப்போம் விடயமாக மாறமாட்டாது என்பது தெளிவு.

இவ்வாறான பின்னணியில்தான் ராஜீவ் காந்தி கொலை விவகாரம் பற்றி அர்ஜுன் சிங் எழுப்பியுள்ள குற்றச்சாட்டையும் நோக்க வேண்டும்.

தமிழக அரசியலின் உள்விவகாரங்களில் இலங்கைத் தமிழர் பிரச்சனை முன்னர் பயன்பட்டு வந்தது.

இரண்டு, ராஜீவ் காந்தி கொலை விவகாரம் குறித்த உண்மைகளை வெளிப்படுத்துவதில் நரசிம்மராவ் ஆர்வம் காட்டவில்லை.

இதற்கிடையே பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு இலங்கை அரசிடம் கோரவேண்டும் என்னும் கோரிக்கையும் ராஜீவ் காந்தி விசுவாசிகளால் எழுப்பப்பட்டு வருகிறது.

முன்னரே இக் கோஷம் எழுப்பப்பட்ட போதும் தற்போதைய இந்திய அரசியல் நிலவரம் காரணமாக மீண்டும் உரத்த தொனியில் கிளம்பியிருக்கிறது.

ராஜீவ் காந்திக்கு விசுவாசமானவராக நரசிம்மராவ் தன்னை நிரூபிக்கவேண்டுமானால், பிரபாவை தம்மிடம் ஒப்படைக்குமாறு இலங்கை அரசிடம் அவர் கோரிக்கை விடலாம் என்று அவரது ஆதரவாளர்கள் சிலரே கருத்துக்கொண்டுள்ளனர்.

இந்திய அரசியலில் கட்சிப் பலம் பூர்த்தியடையும்போது இலங்கை அரசுக்கும், புலிகளுக்குமிடையே உறவா, பகையா? என்று இரண்டில் ஒன்று தெரிந்திருக்கும்.

அதே சமயம் இலங்கை அரசு ராஜீவ் காந்தி கொலை வழக்குக்கு தேவைப்படும் உதவிகளை வழங்கியே வருகிறது.

வாழைச்சேனையில் உள்ள ஒரு விவாகப் பதிவாளரை வழக்கு விசாரணைக்காக இலங்கை அரசு இந்தியாவுக்கு அனுப்பியிருந்தது.

புலிகளது உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் பற்றிய சாட்சியம் ஒன்றுக்காகவே அந்த விவாகப் பதிவாளர் தேவைப்பட்டார்.

இலங்கைப் பத்திரிகைகளில் ஓர் ஓரத்தில்- முக்கியமற்றதுபோல வெளியான அச்செய்தி புலிகளைப் பொறுத்தவரை பெரிய விசயம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'ஈழநாதம்' பத்திரிகையின் ஆசிரியர்



# அரசு-புலிகள்-இந்தியா

# திரைமறைவில் ஒரு சதுரங்கம்

சந்தர்ப்பம் சரியாக இருக்கிறது என்று கணிப்பிட்ட அர்ஜுன் சிங் ஒளித்து வைத்திருந்த கத்தியை எடுத்துக்கொண்டு பிரதமர் நரசிம்மராவைத் துரத்த ஆரம்பித்திருக்கிறார்.

இது இந்தியாவின் உள் விவகாரம். காங்கிரசைப் பொறுத்தவரை உட்கட்சி விவகாரம்.

ஆனால், உட்கட்சி விவகாரத்தில் அர்ஜுன் சிங் எழுப்பியுள்ள குற்றச்சாட்டு ஒன்று இலங்கையின் உள்விவகாரத்தோடும் தொடர்புபட்டிருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலை விவகாரத்தில் பிரதமர் நரசிம்மராவ் சரியாக நடந்து கொள்ளவில்லை. உண்மைகள் வெளிவராமல் தடுத்துவிட்டார் என்று இப்போது- மிகத் தாமதமாக கொதித்துப் பேசுகிறார் அர்ஜுன் சிங்.

இந்தியாவில் காங்கிரஸ் கட்சிக்கு மாற்றுச் சக்தி உருவாகாதவரை இந்திய அரசியல் நேரு குடும்பத்தினரைச் சுற்றியே வந்துகொண்டிருக்கும்.

எனவே-ராஜீவ் காந்தி கொலை விவகாரத்தில் நரசிம்மராவ் குற்றம்சாட்டப் படுவதன் நோக்கம் நேரு குடும்பத்தின் ஆதரவை பெறுவதற்காகவே.

ராஜீவ் காந்தியின் மனைவி- சோனியாவை நரசிம்மராவின் எதிர்ப்பாளர்கள் சுற்றிவளைத்து தூண்டில் போட்டு அரசியலுக்கு இழுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், பிரியங்கா அரசியலுக்கு வந்தால் அர்ஜுன் சிங் பிரதமராக வரமுடியாது. சோனியாதான் பிரதமராகவேண்டியிருக்கும்.

தனக்கு ஒரு கண் போனாலும் எதிரிக்கு இரண்டு கண்ணும் போனால் சரி என்பதுதான் அர்ஜுன் சிங்கின் எண்ணமாக இருக்கிறது.

அது மட்டுமல்லாமல் மக்களைக் கவரக்கூடிய தலைவருக்கு காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள பஞ்சத்தையும் சோனியாவே போக்க முடியும்.

ஆட்சியை பறிகொடுத்து முன்னாள் அமைச்சர்களாகவும், முன்னாள் பா.உக்களாகவும் இருப்பதைவிட சோனியா மூலமாக ஆட்சியை காப்பாற்றுவது புத்திசாலித்தனம். அவரே பிரதமராக இருந்துவிட்டுப் போகட்டும் என்று காங்கிரஸ் கட்சியில் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் நினைக்கிறார்கள்.

பிரதமர் நரசிம்மராவின் ஆதரவாளர்கள்கூட அப்படித்தான் நினைக்கிறார்கள். ஜனநாயக அரசியலில் கூட்டம் சேர்க்கும்- வாக்குகளை கவரும் தலைவருக்குத்தான் மரியாதை.



ராஜீவ் கொலையின் பின்

இந்தியாவின் தேசிய அரசியலிலும் தாக்கம் செலுத்தத் தொடங்கிவிட்ட இலங்கைத் தமிழர் பிரச்சனை

வல்லவர்கள் என்ற உறுதியான எண்ணம் இந்திய மக்களில் கணிசமானோர் மத்தியில் ஆழப் பதிந்திருக்கிறது. இடைக்கிடையே அந்த நம்பிக்கை வாடும் போதெல்லாம் எதிர்க்கட்சிகள் தமக்குள் அடிபட்டு, கழுத்தறுத்து அந்த நம்பிக்கை பட்டுப்போகாமல் உதவி வந்திருக்கின்றன.

இப்போது காங்கிரஸ் கட்சி மீண்டும் நேரு குடும்பத்தவரைத் தேடிப் போயிருக்கிறது.

சோனியா அரசியலுக்கு வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி நேரு குடும்பத்தினரது அதிருப்தியை சம்பாதிக்க இந்தியாவில் ஆளும் கட்சியாக வரும் எந்தவொரு கட்சியும் விரும்பாது.

ஏற்கனவே சோனியா தன்னைத் தேடி வந்த அரசியலை புறம்தள்ளியதால் மக்களது மதிப்பில் உயர்ந்திருக்கிறார். இப்போது மீண்டும் அரசியலை அவர் நிராகரித்தால் மேலும் மதிப்பு உயரும்.

பதவியை தேடி பலர் பறந்துகொண்டிருக்கும் அரசியலை பார்த்துப் பழக்கப்பட்ட மக்களுக்கு, வலியத் தேடி வரும் பதவியை திரும்பியும் பார்க்காத ஒருவர் ஆச்சரியம் தருவதில் வியப்பில்லை.

ஒருவேளை காங்கிரஸ் கட்சி ஆட்சியை தவறவிட வேறொரு கட்சியோ, கூட்டோ ஆட்சிக்கு வந்தால்கூட சோனியாவின் அதிருப்தியை சம்பாதிக்க விரும்பாது.

அவரை வலியச் சீண்டிவிட்டு அரசியலுக்கு கொண்டுவந்தால் தமக்குத்தான்

என்று எதுவும் இல்லாதபோதும், பத்திரிகைகளில் பரபரப்பாக அடிபடுபவர் சுப்பிரமணியம் சுவாமி.

பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்பவர்களில் சுவாமியும் ஒருவர். ஜனதா கட்சி தலைவராக இருக்கும் சுப்பிரமணியம் சுவாமி சமீபத்தில் மீண்டும் தனது கோரிக்கையை தூசுதட்டி எடுத்துப் போட்டிருக்கிறார்.

காங்கிரஸ் கட்சிக்குள் உள்ள சிலர்தான் அவருக்கு தூண்டுதல் கொடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

பிரபாவை ஒப்படைக்குமாறு இலங்கை அரசிடம் இந்தியா கோருமானால் நரசிம்மராவுக்கு தற்காலிக அரசியல் ஆதாயம் கிடைக்கக்கூடும்.

ஆனால், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தவரை அவ்வாறான கோரிக்கையை உடனடியாக முன்வைப்பது இராஜதந்திரமாக இருக்காது.

தலையங்கத்தில், விவாகப் பதிவாளரை இந்தியாவுக்கு சாட்சி சொல்ல அனுப்பியதை நாடு கடத்தல் என்றும், சட்டத்திற்கு அப்பாற்பட்ட நெருக்கம் என்றும் கண்டிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சனை விடயத்திலும், புலிகள் பற்றிய விடயத்திலும் இந்தியாவோடு பரஸ்பர புரிந்துணர்வு நிலவுவதை இலங்கை அரசு விரும்புகிறது. அதன் அவசியத்தையும் உணர்ந்திருக்கிறது.

பேச்சுவார்த்தையை, இலங்கை அரசை அம்பலப்படுத்துவதில் கொண்டுசென்று முடிக்கவே புலிகள் நினைக்கிறார்கள் என்ற சந்தேகம் இலங்கை அரசுக்கும் ஏற்பட்டுள்ளது.

பேச்சு முயற்சிகளைத் தொடரும் அதே நேரத்தில் நிதானமாக யோசித்து அடியெடுத்து வைக்கும் அரசின் அணுகுமுறை அதனை உறுதிப்படுத்துகிறது.

புலிகளைப் பொறுத்தவரை இந்தியா

## எக்ஸ்ரே ரிப்போர்ட் - நாரதர்

ராஜீவ் காந்தி கொலை விவகாரத்தின் பின்னர் இந்திய தேசிய அரசியலிலும் இலங்கைத் தமிழர் பிரச்சனையோடு தொடர்புடைய விவகாரங்கள் பயன்படத் தொடங்கியுள்ளன.

ராஜீவ் காந்தி கொலைக்கு காரணம் புலிகளே என்பதில் உறுதியான நம்பிக்கை இந்தியாவிடம் இருக்கிறது.

எனவே-புலிகள் தொடர்பான நட்பு ரீதியான எந்தவொரு அணுகுமுறையையும் சமீப எதிர்காலத்தில் இந்தியாவிடம் எதிர்பார்க்க முடியாது.

இப்போது இந்திய அரசியலின் உள் விவகாரத்தில் நரசிம்மராவை நேரு குடும்பத்தின் விரோதி என்று காட்ட அவரது எதிர்ப்பாளர்கள் முற்படுகிறார்கள்.

அதற்கு மிக வாய்ப்பான விடயமாக ராஜீவ் காந்தி கொலை விவகாரம் பயன்படுத்தப்படுகிறது.

ராஜீவ் விசுவாசிகள் என்று தம்மை அழைத்துக்கொள்ளும் நரசிம்மராவின் எதிர்ப்பாளர்கள் முன்வைக்கும் முக்கிய குற்றச்சாட்டுக்கள் இரண்டு.

ஒன்று, முன்னாள் பிரதமர் ராஜீவுக்கு அன்றைய அரசு உரிய பாதுகாப்பை வழங்கவில்லை.

இலங்கை அரசும் புலிகளும் பேச்சு நடத்துவதை இந்தியா விரும்பவில்லை என்று வெளியுலகம் நினைக்க வைத்துவிடும்.

இந்தியாவின் கோரிக்கைக்கு இலங்கை அரசு சாதகமாகப் பதிலளித்தால் மறு நொடியே பேச்சுவார்த்தை முறிந்துவிடும்.

பாதகமான பதில் கிடைத்தால் இலங்கை அரசோடு முரண்பட்டுக்கொள்ளவேண்டி ஏற்படும். இலங்கை குறித்து இந்தியாவின் கொள்கைக்கும் நலனுக்கும் அது நல்லதல்ல.

இலங்கை அரசோடு நட்புறவு இறுக்கமாகி வருகிறது. இந்த நேரத்தில் இலங்கை அரசை சங்கடத்தில் ஆழ்த்த இந்தியா விரும்பாது.

எனவே-பிரபாவை தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்தியா உடனே கோரமுடியாது.

ஆனால், ராஜீவ் காந்தி கொலை வழக்கை சற்று துரிதப்படுத்தி புலிகள்தான் கொலைக்கு காரணம் என்று நிரூபிக்க இந்தியா நினைக்கலாம்.

வழக்கில் பிரபா குற்றவாளியாகக் காணப்பட்டால், அதன்பின்னர் இந்தியா சட்டரீதியாக அவ்வாறான ஒரு கோரிக்கையை முன்வைக்கலாம்.

வழக்கு விசாரணை தற்போது முடியும் சாத்தியம் தெரியவில்லை. வழக்கு விசாரணை

வின் எவ்வகையான தலையீடும் இனித் தேவையில்லை என்ற மனநிலையை மக்களிடம் ஏற்படுத்தும் விதமாகவே தமது பிர்சார உத்திகளை நகர்த்துகின்றனர்.

இந்தியப் படைமீது யாழ் மக்களுக்கு ஏற்பட்ட கசப்புணர்வுகள் இன்னமும் மறையாமல் இருப்பது புலிகளின் பிரசாரத்திற்கு பலமூட்டுகின்றன.

இந்திய உதவி- இந்தியாவின் அனுதாபம் தேவை என்று கருதும் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர்கள் கூட இந்தியப் படை மீண்டும் வருவதைப் பற்றி நினைத்துப் பார்க்கக்கூட தயாராக இல்லை.

ஆனால், இலங்கையின் இனப்பிரச்சனை மிக முக்கியமான மூன்று சக்திகளோடு தவிர்க்க முடியாதவையாக பின்னிப் பிணைந்திருக்கிறது.

இலங்கை அரசு-புலிகள்-இந்தியா ஆகிய மூன்று சக்திகளும் வெளிப்படையாக பேசிக்கொள்ளும் விடயங்களுக்கு அப்பால், தமது நலன்கள் குறித்து அக்கறை கொண்டவையாக இருக்கின்றன.

இலங்கையின் உள்நாட்டு அரசியலில் பொதுஜன முன்னணி அரசின் எதிர்காலம் புலிகளோடு நடத்தும் பேச்சுக்களோடும்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)



பனை வளத்தை கவனிக்க புதியவர் ஒருவர் நியமனமாகியிருக்கிறார். விழுந்தும் மீசையில் மண்படாத கதையாக பழைய வரும் முகம் காட்டிக்கொண்டு முன்னுக்கு நிண்டவராம். அது கிடக்க, புதியவர் தனது உரையிலை பழையவரின் பணியை தொடருவேன் எண்டு சொன்னது ஒரு நாகரீகம் கருதி எண்டாச் சரிதான். அதில்லாமல் உண்மையாகவே அவரின் பணியைத் தொடர்ந்தால் வம்புதான்.

யாழ்ப்பாணத்திற்கு வெளிநாட்டுச் சொக்கலேற்றுக்களோடு ஒரு பயணி போயிருக்கிறார். ரெண்டு எழுத்தார் மூன்றில் இரண்டு பகுதியை எடுத்துக்கொண்டு ஒரு பகுதியை மட்டும் கொண்டுபோக அனுமதிச்சிருக்கினம். ஆனால் அந்த ஒரு பகுதிக்கும் வரி நானூறு ரூபா. தம்பிமார் இதையும் நீங்களே வச்சிருங்கோ எண்டு மீதிச் சொக்கலேற்றுக்களையும் ரெண்டு எழுத்தாரிட்டைக் கொடுத்துப் போட்டு போட்டாராம் பயணி. உள்ளூரிலேயே சொக்கலேற்றுகள் உற்பத்தியாகிறதாலை கொழும்பிலிருந்து கொண்டுபோக கட்டுப் பாடாம்.

இப்பவெல்லாம் யாழ்ப்பாணத்திலை கிட்டுமாமா பூங்காவுக்குத்தான் சனக்கூட்டமாம். நல்லூர் முத்திரைச் சந்தையில் இருக்குது 'கிட்டுமாமா' பூங்கா. நல்ல வடிவா லைற் எல்லாம் போட்டு வைச்சிருக்கினம். 'லைற்' பார்க்கவே குழந்தைகள் விழுந்தடிச்சு ஓடுதுகளாம். இந்த விஞ்ஞான யுகத்திலையும் யாழ்ப்பாணக் குழந்தைகளுக்கு மின்சாரம் பெரிய ஆச்சரியமாய் இருக்குது பார்த்தியளோ? சரியாத்தான் பின்தங்கியாச்சு.

தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுக்காமல் புறக்கணிச்சும் மெத்தப் படிச்ச சிலருக்கு ரோசம் வரேல்லைப் பாருங்கோ. ஒன்றுபட்டு நிண்டு எல்லாருமே போகாமல் இருந்திருந்தா செல்விக்கு எங்கடை தன்மானத்தை புரியவைச்சிருக்கலாமல்லோ? அதைவிட்டுப் போட்டு ஒரு ஐந்து பேரையாவது அனுமதியுங்கோ எண்டு மன்றாட்டம் நடத்தினவையை நினைச்சா என்ன வரும்? நினைச்சுப் பாருங்கோவன்.

## அதிரடி அய்யாத்துரை

யாழ்ப்பாணத்திலை இயக்கத்தில் சேருவோர் எண்ணிக்கை குறையுது மாதிரித் தெரியுதாம். அதுதானாம் கடுமையாய் யோசித்து சினிமாவுக்கு முழுத்தடை போட்டவையாம். ஒட்டகத்தை கட்டிக்கோ ஒட்டிக்கோ எண்டு வீடியோவிலை படமும் பாட்டும் பார்க்கிற பிள்ளைகள் துப்பாக்கியை தொட்டுப் பார்க்கிற வீரம் இல்லாமல் போயிடுங்கள் கண்டியளோ? அதுதான் தடையாம்.

வெளிநாட்டு மாப்பிள்ளைகள் கொழும்புக்கு வர மணமகள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து கழுத்தை நீட்டுறதுதான் தற்போதைய வழக்கம். திருமணத்திற்கு எண்டு யாழ்ப்பாணத்தில் அனுமதி எடுத்துக்கொண்டுவந்த ஒரு குடும்பம் மாப்பிள்ளை இன்னும் வரேல்லை எண்டு பதறிக்கொண்டிருந்தது. முகூர்த்த நாள் தள்ளிப்போகுது எண்டு கவலையோ எண்டு கேட்டனான். சும்மா போம் காணும். ரெண்டு மாதத்திற்கு இடையிலை திருமண புகைப்படத்தை யாழ்ப்பாணத்திற்கு ரெண்டு எழுத்தாருக்கு அனுப்பவேணும் தவறினா பொய் சொல்லிப்போட்டு வந்தது எண்டு எங்களுக்காக அங்கு பிணை நிக்கிறவரைப் பிடிச்சி உள்ளுக்குப் போட்டுடுவினம் எண்டு சொன்னார் மணமகளின் அப்பா. பாஸ்போட்டிலை தலை மாத்திறமாதிரி வேறை ஒரு திருமணப் படத்தை எடுத்து வெட்டி ஒட்டி சமாளிக்க வேண்டியதுதான் எண்டு சொல்லிப்போட்டு ஓடி வந்திட்டன். ஹிஹிஹி.

வேலை வாய்ப்பை பெற்றுத் தருவதாக கூறி மட்டக்களப்பிலை கூட்டான கட்சி விபரம் திரட்டுதாம். நல்ல விசயம்தான். பாகுபாடு இல்லாமல் நடந்தாச் சரிதான். அரசை ஆதரிக்கிறதுக்கு பலனாய் இதைக்கூட செய்யாட்டி என்ன பிரயோசனம்? செய்யட்டும்.

பூவைப் பற்றி பல கவிஞர்கள் பல்வேறு விதமாய் பாடியிருக்கினம். கவிஞர் வாலி பூவைப்பற்றி எழுதிய புதுக்கவிதை ஒண்டு படிக்க கிடைச்சது. நீங்களும் படியுங்கோ:

"வண்டுகளுக்கோர்
விபச்சார விடுதி.
வாடைக் காற்றின்
காதற் கிழத்தி.
..............................
ஈக்கள் கள்ளை
இறக்கிடுந் தென்னை
இனிய மணத்தின்
விளைவுப் பண்ணை."

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அரசியல் தொடர்

# 9

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### அற்புதன் எழுதுவது

### விமானத் தகர்ப்பு மூலம் தெரிவிக்கப்பட்ட கண்டனம்!

#### நம்புவதில் தயக்கம்

இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை குழுவினர் கொல்லப்பட்ட செய்தி ஜே.ஆர். ஜயவர்த்தனாவுக்கு எந்தளவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்குமோ அந்தளவுக்கு எரிச்சலையும் ஏற்படுத்தியிருந்தது.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஆச்சரிய அலைகள்- "எங்கள் பெடியள் இப்படிச் செய்யக் கூடியவர்களோ?" கூடிநின்று குசுகுசுத்தார்கள். ஆர்வமாக காலையில் பத்திரிகைகளைப் புரட்டி பரபரப்பாக செய்திகளை வாசித்தறிந்தார்கள்.

"ஒருவேளை ஜே.வி.பிக்காரர்களாக இருக்குமோ?" என்றும் சிலர் சந்தேகப்பட்டார்கள். இக்கரைக்கு அக்கரை பச்சை என்பார்களல்லவா? அதுபோல சிங்கள இளைஞர்கள்தான் இப்படியான காரியங்களைச் செய்வார்கள் என்ற எண்ணம் தமிழர்கள் மத்தியில் ஒரு பகுதியினரிடம் இருந்தது.

1971ல் ஜே.வி.பி. ஒரு ஆயுதக் கிளர்ச்சியை நடத்தியிருந்தது. கிளர்ச்சி தோல்வியில் முடிந்திருந்தபோதும், அதன் பின்னர் எங்கு ஆயுதம் ஏந்திய தாக்குதலோ கொள்ளையோ நடந்தாலும் அதனை ஜே.வி.பியின் வேலை என்றே தமிழர்கள் சிலர் நினைத்துக்கொண்டிருந்தார்கள்.

தமிழர்கள் மிகவும் அமைதியானவர்கள் என்று சிங்கள மக்களும் நினைத்துக்கொண்டிருந்த காலம் அது.

இதனை நான் எழுதிக்கொண்டிருக்கும் 95ம் ஆண்டு ஜனவரியில், **தமிழர்கள் என்றாலே புலிகளாக இருக்குமோ** என்று பொலிசார் சந்தேகிக்கும் காலகட்டம்.

ஆனால், முன்பு தமிழர்கள் என்றாலே அமைதியானவர்கள் என்று கருதப்பட்ட சூழலுக்கு ஒரு உதாரணம் கூறுகிறேன்.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் 70களின் பிற்பகுதியில் பொலிசாரோடு பிரச்சனைப்பட்டு போராடினார்கள்.

பொலிசாரைக் கண்டித்து கொழும்பு பேருந்துகளில் சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன.

அதில் ஒரு சுலோகம் பின்வருமாறு இருந்தது:

**"பொலிசாரே! உங்கள் வீரத்தை யாழ்ப்பாணத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள். இங்கு வைத்துக்கொண்டால் செல்லாது"**

பஸ்தியாம்பிள்ளை குழுவினரது கொலையும், அதனைத் தொடர்ந்து புலிகள் உரிமை கோரி வெளியிட்ட அறிக்கையும் புதிய மாற்றம் ஒன்றின் அடையாளமாக அமைந்தது.

'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்ற பெயரை பத்திரிகைகள் வாயிலாக அறிந்த தமிழ் பேசும் மக்கள் உள்ளூர மகிழ்ந்து போயினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆசிர்வாதத்தோடு இயங்கும் ஓர் அமைப்பாகவே தமிழர்கள் பலர் ஊகித்தனர்.

வெறும் பேச்சோடு நில்லாமல் தமிழீழத்தை அமைக்க ஆயுதம் ஏந்திப் போராடும் அமைப்பையும் கூட்டணியினர் ஏற்படுத்திவிட்டனர் என்றே கூட்டணி விசுவாசிகள் குதூகலப்பட்டனர்.

அதில் பாதி உண்மையும் இருந்தது. தமது கட்டுப்பாட்டை மீறாத ஒரு அமைப்பாகவே புலிகள் இயக்கம் செயற்படும் என்று தலைவர் அமுதர் நம்பியிருந்தார்.

#### அமுதரின் தீவிரவாத முகம்

புலிகள் இயக்கத்தினரும் அமுதர் மீது தீராத காதல் கொண்டிருந்தனர். ஏனைய தலைவர்கள்தான் கொஞ்சம் மிதவாதிகள். அமுதர் தீவிரமானவர் என்றுதான் அப்போது நம்பப்பட்டது.

கூட்டணியில் முக்கியமான ஒருவராக இருந்தவர் ஈழவேந்தன். இவர் வாய்ச் சொல்லில் சிறந்த வீரர்.

அவர் ஒரு கூட்டத்தில் பேசும்போது இப்படிக் கூறினார்:

"தந்தை செல்வா காலத்தில் அகிம்சை வழியில் பேசுகிறோம். தளபதி அமிர் தலைமையில் நாம் வெறுமனே பேசிக்கொண்டிருக்கமாட்டோம்"

'சுதந்திரன்' பத்திரிகையில் அதனை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தார்கள்.

'ஈழவேந்தன் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு பேசிவிட்டார். எனது காலத்திலும் அகிம்சை வழியில்தான் பேசுவோம், போராடுவோம் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்' என்று அமுதர் சொல்லியிருக்கலாம். ஆனால் சொல்லவில்லை.

தீவிரமான தலைவராக தான் சித்தரிக்கப்படுவதை அமுதரும் இரசித்துக்கொண்டிருந்தார். எனவே மறுப்பே இல்லாமல் அவ்வாறான பேச்சுக்களை விருப்புடன் அங்கீகரித்தார்.

#### ஜே. ஆர். உஷார்

புலிகள் இயக்கம் உரிமை கோரி வெளியிட்ட அறிக்கையை அடுத்து ஜே.ஆர்.ஜயவர்த்தனா உஷாரானார்.

சட்ட நிபுணர்களோடு ஆராய்ந்து சுறுசுறுப்பாக ஒரு சட்டம் கொண்டுவந்தார்.

**புலிகள் இயக்கத்தையும், புலிகள் போன்ற ஏனைய அமைப்புக்களையும் தடை செய்யும் சட்டமூலம் இலங்கைப் பாராளுமன்றத்தில் 19.05.1978 அன்று நிறைவேற்றப்பட்டது.**

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்தால் போதும், அப்படி ஆதரிப்பவரின் சொத்துக்களை அரசாங்கம் பறிமுதல் செய்யலாம். அதற்கு சட்டம் இடம்தரும் வகையில் சட்டமூலம் அமைந்திருந்தது.

ஜே.ஆர்.ஜயவர்த்தனா புத்திசாலியாக இருக்கலாம். ஆனால், இனப்பிரச்சனை விடயத்தில் அவரது புத்திசாலித்தனம் பலமுறை தோல்வி கண்டது.

முதற் தோல்வியாக அந்த சட்டமூலம் அமைந்தது. புலிகள் தடைச் சட்டமூலம் புலிகளையோ ஏனைய தீவிரவாதக் குழுக்களையோ பாதிப்புக்குள்ளாக்கவில்லை.

மாறாக, புலிகளுக்கு பிரபலத்தைத் தேடிக்கொடுத்தது. தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஆயுதம் ஏந்திப் போராடும் அமைப்புக்களை இலங்கை அரசு இனி எதிர்கொள்ள வேண்டியேற்பட்டுவிட்டது என்ற செய்தியை அரசு மூலமாகவே அகில உலகமும் அறிந்துகொணடது.

பிரச்சனையின் மூலவேர் எது என்று கண்டறிந்து கொள்ளாமல், கிளைகளை வெட்டி விருட்சங்களை சாய்க்கலாம் என்று ஜே.ஆர்.நினைத்தார்.

அரசின் பொலிசாரும் தீவிரவாத இயக்கங்களின் மூலவர்களை கண்டறிய முடியாமல் மேடைகளில் முழங்கிய இளைஞர்களைப் பிடித்து சிறையில் அடைத்தனர்.

#### 26பேர் சரண்

புலிகள் தடைச் சட்ட மூலத்தை அடுத்து தேடப்படும் இளைஞர்களது படங்களோடு பொலிசார் சுவரொட்டி வெளியிட்டனர். அவர்கள் பற்றிய விபரங்களை தெரிவிப்பவர்களுக்கு சன்மானம் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பொலிசாருக்கு எதற்கு வீண் சிரமம் என்று தேடப்பட்ட இளைஞர்களில் 26 பேர் 1978 மே 26ம் திகதி சரணடைந்தனர்.

சரணடைந்தவர்களில் பலர் முன்பும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு சிறையில் இருந்தவர்கள்தான்.

காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா, வண்ணை ஆனந்தன், புஸ்பராஜா, பூ.நடேசானந்தன், சிறி சபாரத்தினம் (இவர்தான் பின்னர் ரெலோ தலைவராக இருந்து புலிகளால் கொல்லப்பட்டவர்) எஸ்.சபாலிங்கம், த.சந்ததியார் ஆகியோரும் சரணடைந்தவர்களில் அடங்குவர்.

(சிறி சபாரத்தினம் சரணடையவில்லை என்று முன்னர் தவறுதலாக குறிப்பிட்டிருந்தேன்)

சரணடைந்த இளைஞர்கள் 26 பேரும் 'தமிழீழ தேச பக்தர்கள்' என்று செய்தி வெளியிட்டது 'சுதந்திரன்' பத்திரிகை.

தாமாகவே முன்வந்து சரணடைந்த இளைஞர்களைக்கூட அவர்களது இரத்த உறவினர்கள் சென்று பார்க்கவும் அனுமதி மறுத்தது அரசு.

அவர்கள் 26 பேரும் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவலும் கூட பொலிசாரால் தெரிவிக்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டது.

மறுபுறம் 26 இளைஞர்கள் சரணடைந்து விட்டதால் தீவிரவாதம் கட்டுக்குள் வந்து விட்டது என்று அரசும் பொலிசாரும் சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டனர்.

அந்த நிம்மதி நீடிக்கவில்லை.

#### அதிகாரமுள்ள ஜனாதிபதி

1978ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஏழாம் திகதி ஜே.ஆர்.அரசு புதிய அரசியல் யாப்பை அறிமுகம் செய்தது.

சர்வ அதிகாரமுடைய ஜனாதிபதியாக ஜே.ஆர்.மாறினார்.

சிங்கள மொழிக்கும், பௌத்த மதத்திற்கும் விசேஷமான அரசியல் அந்தஸ்து அரசியல் சட்டத்தினால் வழங்கப்பட்டது. தமிழ் மொழி இரண்டாம் பட்ச நிலைக்குத் தள்ளப்பட்டது.

தமிழீழம் அமைப்பதற்கான ஆணை பெற்று பாராளுமன்றம் சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணி புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து மக்களை திரட்டிப் போராடத் தவறியது.

ஜே.ஆர்.ஜயவர்த்தனா, தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களை நண்பர்களாக நடத்தினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஜப்பான் 'ஜீப்'புக்களை இறக்குமதி செய்து கொடுத்தார்.

கூட்டணி பா.உக்களுக்கும் ஜப்பான் 'ஜீப்' கிடைத்தது.

அந்தச் சமயத்தில் யாழ்ப்பாணம் பொது மருத்துவமனை சுவரில் பெரிய எழுத்தில் சிவப்பு மையால் கோபம்கொண்ட இளைஞர்கள் சிலர் எழுதிய கோசம் இது:

**"கேட்டது தமிழ் ஈழம்.**
**கிடைத்தது ஜப்பான் ஜீப்!"**

'தம்பிமாருக்கு விவேகம் போதாது' என்றார் அமிர்.

அமுதர் சொன்ன தம்பிமாரில் சிலர் இப்போது பாராளுமன்ற உறுப்பினர்களாகிவிட்டனர். அவர்களும் 'பஜரோ' ஜீப்பில் செல்லும் இக்காலகட்டத்தில் அமுதர் உயிரோடு இருந்திருந்தால் இப்படிச் சொல்லியிருப்பாரோ:

**"தம்பிமாருக்கும் விவேகம் வந்துவிட்டது!"**

#### குண்டால் கண்டனம்

தமிழ் ஈழ தேசியப் பேரவையை உருவாக்கி தமிழ் ஈழ அரசியல் சட்டத்தை உருவாக்கப் போவதாக 1977 பொதுத் தேர்தலில் முழக்கமிட்டவர்கள் கூட்டணியினர்.

1978ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இலங்கை அரசின் புதிய அரசியல் சட்டம் கொண்டுவந்தபோது எதிர்த்துப் போராடாது அமைதி காத்தனர்.

இந்த நிலையில் எதிர்ப்பைக் காட்டும் திட்டத்தை வகுத்தது விடுதலைப் புலிகள் இயக்கம்.

தேசியப் பேரவை என்று அப்போது அழைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் புதிய அரசியல் அமைப்பு சட்டம் கொண்டு வரப்பட்ட நாளில்,

கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தை நோக்கி புலிகளது வெடிகுண்டு சென்றது.

குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கும் நேரக்குண்டு (TIME BOMB)அது.

இரத்மலானை விமான நிலையத்தில் 'அவ்ரோ' பயணிகள் விமானம் வந்து இறங்கியது.

பயணிகள் அனைவரும் வெளியேறிய பின்னர் விமானம் வெடித்துச் சிதறியது.


குறித்த நேரத்தில் வெடித்த அந்தக் குண்டுவெடிப்பு சம்பவத்தில் முக்கிய பங்கேற்றவர்கள் மூவர்- உமா மகேஸ்வரன், பேபி சுப்பிரமணியம், ராகவன்.

பேபி சுப்பிரமணியம் தற்போது புலிகள் அமைப்பின் கல்விப் பொறுப்பாளராக இருக்கிறார். முன்னர் புலிகள் அமைப்பின் அரசியல் துறை செயலராக இருந்தார்.

ராகவன் உள் முரண்பாட்டால் வெளியேறி வெளிநாடொன்றில் இருக்கிறார்.

புதிய அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்ட அதே தினத்தில் தலைநகரில் விமானம் தகர்க்கப்பட்ட செய்தி அரசுக்கு இடியாக அமைந்தது.

விமானத் தகர்ப்பிற்கு புலிகள் இயக்கம் உடனடியாக உரிமை கோரியது.



குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட 'அவ்ரோ' விமானம்

#### தத்துவ விளக்கம்

புலிகள் இயக்கம் மற்றும் குட்டிமணி- தங்கத்துரை குழுவினர் துரோகிகள் ஒழிப்பு, வெடிகுண்டுகளால் எதிர்ப்பு என்று செயற்பட்டுக் கொண்டிருந்தபோது,

இன்னொரு குழு வித்தியாசமாக பேசிக் கொண்டிருந்தது.

தனி நபர்களை சுட்டுக்கொல்வதால் எந்த பயனும் இல்லை என்று அக்குழு கூறியது.

துரோகிகள் ஒழிப்பை தனிநபர் பயங்கர வாதம் என்று அவர்கள் விளக்கம் சொன்னார்கள்.

ஆயுதம் ஏந்திப் போராடுவதே அவர்களது நோக்கமும் என்ற போதும் தமது வழிமுறைகள் புரட்சிகரமானவை என்று சொன்னார்கள்.

அக்குழுவின் பெயர் 'ஈழ புரட்சி அமைப்பாளர்கள்'- சுருக்கமாக 'ஈரோஸ்' என்று அவர்கள் தம்மை அழைத்துக் கொண்டார்கள்.

அந்த குழுவின் தலைவர் மற்றும் போஷகர் மற்றும் தத்துவ போதகன் இரட்ணசபாபதி.

லெனின் எழுதிய சிவப்பு நூல்களோடு இலண்டனில் இருந்து வந்தார் இரட்ணசபாபதி.

### சிவப்பு புத்தகத்தோடு ஒருவர் வந்தார்!

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில் இருந்து, அந்த இயக்கம் செயலிழந்த பின்னர் ஒதுங்கியிருந்த இளைஞர்களில் சிலரை இரட்ணசபாபதி சந்தித்தார்.

"அமருங்கள் தோழர்களே!" என்றுவிட்டு ஒரு படத்தைக் காட்டினார் இரட்ணசபாபதி.

அதில் ஈழம், சிறிலங்கா என்ற இரு நாடுகள் குறிப்பிடப்பட்டிருந்தன.

தமிழ் ஈழம் என்று கூட்டணித் தலைவர்கள் இலங்கை படத்தில் பிரித்து காட்டிய பகுதிகளைவிட இரட்ணா காட்டிய படத்தில் ஈழம் அகண்டதாக இருந்தது.

"நாடு பெரிதாக இருக்கிறதே!" என்று கேட்டார்கள் தோழர்கள்.

இரட்ணா விளக்கினார்:

**"ஆங்கிலம் பேசுவோர் வாழும் நாடு என்பதால் அமெரிக்காவை ஆங்கில அமெரிக்கா என்றா அழைக்கிறார்கள்? இல்லையே, அமெரிக்கா என்றுதானே அழைக்கிறார்கள்.**

**"அப்படித்தான் தமிழ் பேசுவோர் வாழும் நமது நாட்டையும் 'ஈழம்' என்று நாம் அழைப்போம்.**

**மொழி ரீதியான கோரிக்கையாக கருதப்படாமல் இருக்கவும் 'ஈழம்' என்ற பெயர் பொருத்தமாக இருக்கும்.**

**"ஈழம் என்றால் அதில் மலையகத்தையும் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதுதான் நமது ஈழப் படம் பெரிதாக இருக்கிறது.**

**"புரட்சி என்பது பாட்டாளி வர்க்கத் தலைமையில் மட்டுமே நடத்தப்பட முடியும்.**

**"பாட்டாளிகள் என்றால் இழப்பதற்கு எதுவுமில்லாதவர்கள், உடல் உழைப்பை மட்டுமே நம்பி வாழ்பவர்கள் என்று அர்த்தம்.**

**"மலையகத் தமிழர்களான தோட்டத் தொழில்துறை பாட்டாளிகள்தான் ஈழப் புரட்சியின் தலைமைச் சக்தி."**

என்றெல்லாம் புதிய விளக்கத்தை முன்வைத்தார் இரட்ணா.

ஈழப் புரட்சியை நடத்திச் செல்லும் ஒரு அமைப்பை, புரட்சிகர கட்சியை நாம் கட்டியமைக்கவேண்டும்.

அதற்கு முன்னோடியாக ஈழப் புரட்சி அமைப்பாளர்களாக நாம் செயற்படலாம். நாம் இப்போது ஒரு அமைப்பல்ல. அமைப்பாளர்கள் மட்டுமே. அதனால்தான் எமது பெயர் 'ஈழப் புரட்சி அமைப்பாளர்கள்' (ஈரோஸ்) என்றும் விளக்கம் சொன்னார் இரட்ணா.

யார் இந்த இரட்ணா? இவரது பின்னணி என்ன?

(தொடர்ந்து வரும்)

#### திருத்தம்

சென்றவாரத்தில் இரு தவறுகள் நேர்ந்துள்ளன. ஒன்று பக்க வடிவமைப்பாளர் செய்த தவறு; பஸ்தியாம்பிள்ளை, பேரம்பலம் ஆகிய இருவரது படங்களையும் வெளியிட இடப்பற்றாக்குறை- இடித்திருக்கிறது. அதனால் ஒரு படத்தை மட்டுமே வெளி யிட்டு அதன் கீழே பஸ்தியாம்பிள்ளை என்று குறிப்பிட்டுவிட்டார். ஆனால் அது சப் இன்ஸ்பெக்டர் பேரம்பலம். அவரும் கொல்லப்பட்ட பஸ்தியாம்பிள்ளை குழுவின ரில் ஒருவர்தான். இரண்டாவது தவறு என்னுடையது. பஸ்தியாம்பிள்ளை குழுவினர் கொல்லப்பட்டது 7.4.78 எனபதற்கு பதிலாக கவனக்குறைவாக 4.7.78 என்று குறிப்பிட்டுவிட்டேன்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட் (தொடர்ச்சி)

சம்பந்தப்பட்டதாக இருக்கிறது.

பேச்சை துரிதப்படுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்திருக்கிறார்.

புலிகள் உடன்பாட்டுக்கு வரமாட்டார்கள் என்ற நம்பிக்கை ஐ.தே.கட்சி வட்டாரங்களிடம் காணப்படுகிறது.

பேச்சு சரிப்பட்டு வராது என்று சொன்னால் குழப்பும் முயற்சியாகவே கருதப்படும். ஆகவே பேச்சை துரிதப்படுத்தச் சொல்லி முடிவை விரைவில் வெளிக்கொண்டுவர எதிர்கட்சி நினைக்கிறது.

பேச்சு தோல்வியில் முடிந்தால் அரசுக்கு எதிரான பிரசார ஆயுதமாகவே எதிர்க்கட்சி அதனைப் பயன்படுத்தும்.

அதனை முறியடிக்க பாரிய தாக்குதல் நடவடிக்கைகள் அரசிற்கு அவசியப்படலாம். அப்போது இந்தியாவின் மறைமுக உதவி நிச்சயம் தேவை.

எனவே- தற்போதைய பேச்சு முயற்சிகளில் இந்தியாவோடு புரிந்துணர்வை பேணிக்கொண்டுதான் புலிகளோடு அரசு பேச்சை நடத்தும்.

பேச்சு முயற்சிக்கு இந்தியாவே தடை என்ற பிரசாரத்தை பரவலாக்கிக் கொண்டபடிதான் புலிகள் இலங்கை அரசோடு பேச்சு முயற்சிகளை நடத்துகிறார்கள்.

தான் என்ன கூறினாலும் பேச்சுக்கு எதிரான முயற்சியாக கருதப்படும் என்பதால் இந்தியா பகிரங்கத்தில் எதையும் கூற முடியாது.

ஆனால், தனது உள்நாட்டு அரசியலிலும், வெளியுறவு கொள்கையிலும் தாக்கத்தை செலுத்தும் இலங்கை இனப்பிரச்சனை விடயத்திலும், புலிகள் விடயத்திலும் தனது கவனத்தை இந்தியா வைத்திருக்கவே செய்யும்.

இந்தியாவின் அணுகுமுறை பேச்சை நிறுத்துமாறு கோருவதாக இருக்காது. பேச்சை நடத்தி முடித்துவிட்டு இலங்கை அரசும் புலிகளை எதிர்க்கும் நிலைவரை பொறுத்திருப்பதாகவே இருக்கும்.

இந்தியாவை நல்ல நண்பனாக வரித்துக்கொண்டு, தமிழ் மக்களது அபிமானத்தையும் பெற்றுக்கொண்டு, புலிகள் உடன்பாட்டுக்கு வராவிட்டால் போரைத் தொடரவேண்டிய சூழலைச் சந்திக்கலாம் என்றே அரசாங்கம் நினைக்கும்.

பேச்சு முயற்சி எப்படியும் வெற்றியாகவே முடியும்; புலிகள் உடன்பாட்டுக்கு வருவது நடக்கும் என்று நூற்றுக்கு நூறுவீதம் அரசு நம்புவதாக இப்போது எவர் சொன்னாலும் அது கலப்படமற்ற பொய்.

பேச்சைத் தொடரவும், பேச்சு முறிந்தால் எதிர்கொள்ளும் சூழலுக்கும் அரசு தன்னை மெல்ல மெல்லத் தயாராக்கிவருவதே உண்மை.

புலிகளைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் மீது முற்றாக நம்பிக்கையிழந்தது போல பேசத் தொடங்கிவிட்டார்கள்.

சமாதானப் பேச்சு முறிந்ததுக்கான காரணம் தமது தலையில் விழுந்துவிடக் கூடாது என்பதில், இனப்பிரச்சனை விவகாரத்தில் சம்பந்தப்பட்ட சகல தரப்புக்களுமே விழிப்பாயுள்ளன.

சில சமயம் பேச்சு முறிந்தால் அதன் காரணம் புலிகள் என்று கூறுவதற்கு நியாயமான காரணம் இருக்கவேண்டும் என்று அரசு நினைக்கும்.

அரசுதான் காரணம் என்று கூற வேண்டும் என்று புலிகளும் காரணங்களை உருவாக்கி சேகரித்து வைத்திருப்பார்கள்.

ஆக, இனப்பிரச்சனை அரசியல் தீர்வு சதுரங்க நடுவிலே இருக்கிறது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# எட்டாவது

அலசுவது–இராஜதந்திரி

# தமிழாராய்ச்சி மாநாடும்-ஈழத்தமிழர்கள் பற்றிய தமிழக அரசின் தவறான ஆராய்ச்சியும்!

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய மூத்த மொழியே தமிழ் மொழி என்று தமிழின் பெருமை பேசப்படுவதுண்டு.

சங்கம் வைத்து ஆராய்ந்து இயல், இசை, நாடகம் என்று தமிழின் சிறப்பை மூதாதையர்கள் அழகுற வகுத்து அளவிலா படைப்புக்களையெல்லாம் தமிழ் கூறும் நல்லுலகுக்கு வழங்கியுள்ளார்கள்.

பெருங் கவிஞர்களாலும், புலவர்களாலும் மட்டுமல்ல ஞானிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சித்தர்களாலும் தமிழின் சிறப்புக் கட்டிக் காக்கப்பட்டுள்ளது.

முருகக் கடவுளை ஒரு தமிழ்க் கடவுள் என்று கூறுமளவுக்கு தமிழின் சிறப்பை தெய்வீக நிலைக்கு பண்டைத் தமிழர்கள் கொண்டு சென்றிருந்தனர்.

இத்தகைய ஈடில்லா சிறப்புக்களையும், மகிமைகளையும் கொண்ட தமிழ் மொழிக்கு தமிழகத்தின் தஞ்சைப் பெருநகரில் விழா எடுக்கப்பட்டது.

எட்டாவது தமிழாராய்ச்சி மாநாடாக இவ்விழாவை தமிழக மாநில அரசு நடத்தியிருக்கிறது. கோடிக்கணக்கான பொருட் செலவில் முதலமைச்சர் ஜெயலலிதா விழா ஏற்பாடுகளைச் செய்து, தஞ்சை மாநகரை விழாக்கோலம் பூணச் செய்துள்ளார்.

தஞ்சை மாநகரின் சிறப்பு வானளாவ உயர்ந்தது.

ராஜ ராஜசோழனால் கட்டப்பட்ட தஞ்சைப் பெருங் கோயில் தமிழர்களின் சமய, கலை, கலாசார, தொழில்நுட்பச் சிறப்புக்களை ஒருங்கே பிரதிபலிப்பதாக இருக்கின்றது.

சோழர்கால ஆட்சியே தமிழின் கம்பீரத்தை ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழன் போன்ற மாமன்னர்களினால் உலகறியச் செய்திருந்தது.

இவ்விரு மன்னர்களதும் ஆட்சிக்காலத்தில் தமிழின் பெருமை கடல் கடந்திருந்தது. தென் கிழக்காசியாவெங்கும் பரவியதோடு, இலங்கையிலும் சோழர் ஆட்சியின் செல்வாக்கு செறிந்திருந்தது.

இந்நிலையில் 'புலிக்கொடி' ஏந்தி பெரும் புவியரசர்களாக சோழ மன்னர்கள் அரசு செய்த தஞ்சைப் பெருநகரிலேயே எட்டாவது தமிழாராய்ச்சி மாநாடு இடம்பெற்றது.

வளங்கொளிக்கும் தஞ்சைப் பூமியில் அமைந்துள்ள தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகமே எட்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டின் பிரதான அரங்காக திகழ்ந்ததாக தமிழகத்திலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இருந்தபோதிலும் தமிழாராய்ச்சி மாநாட்டை இன்றைய தமிழக அரசு நடத்தியிருந்த பாணியே தமிழபிமானிகள், குறிப்பாக ஈழத் தமிழர்களுக்கு மிகுந்த மனக்கிலேசத்தைத் தருவதாக அமைந்துவிட்டது.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தமிழகத்திலேயே பெரும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் எட்டாவது தமிழாராய்ச்சி மகாநாட்டை ஏற்பாடு செய்திருந்தார்.

ஜெயலலிதாவின் அரசியல் எதிரிகள் மட்டுமல்ல, தமிழகத்தின் தமிழறிஞர்கள் பலரும் இந்த எட்டாவது தமிழாராய்ச்சி மாநாடு குறித்து அதிருப்தி கொண்டிருந்தனர்.

இம் மாநாடு உண்மையிலேயே தமிழபிமானம் கொண்டதாக இல்லை. இது வெறுமனே முதலமைச்சர் ஜெயலலிதாவின் படாடோபங்களைப் பறைசாற்றி, அவரது அரசியல் செல்வாக்கை கட்டியெழுப்பும் நடவடிக்கையே இத் தமிழாராய்ச்சி மாநாடென்று தமிழக அரசியலாளர்கள் பலரும் கூறுகின்றனர்.

தமிழை வளர்த்து, ஆராய்ந்து, அதற்காக தம்மை அர்ப்பணித்த பண்டைத் தமிழர்களெல்லோரும் மிடுக்கான, எந்தவொரு அற்ப, சொற்ப எதிர்பார்ப்புக்களுக்கும் அடிபணியாதவர்களாகவே இருந்தனர்.

சிவபெருமானையே எதிர்த்து நின்று "நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே" என்று நக்கீரர் தமது தமிழறிவை பறைசாற்றியதாக புராணக் கதைகள் கூறுகின்றன.

இவை தவிர நாயன்மார்கள், இறைவனையன்றி வேறெவரையும் போற்றிப்பரவாது தெய்வீக உணர்வுடன் தமிழை வளர்த்திருந்தனர்.

கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார், திருப்புகழைத் தந்த அருணகிரிநாதர், மற்றும் ஆழ்வார்கள், இராமாயணத்தை தமிழில் தந்த கம்பர் போன்றோர் தமிழை தெய்வீகத் தன்மையுடனேயே போற்றி வளர்த்திருந்தனர்.

இவை தவிர மனு நீதிகண்ட சோழன், குலோத்துங்கசோழன், ராஜராஜ சோழன் போன்றோர் எவ்வகையிலும் நெறி தவறாது மனு தர்மத்துக்கே இடந்தந்து சிறந்த தமிழரசர்களாக விளங்கினர்.

குறுநில தமிழ் மன்னரான பாரி, முல்லைக்கே தமது தேரைக் கொடுத்து தன்னுள் இருந்த மென்மையான, உன்னத சுபாவத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

திருக்குறளைத் தந்த திருவள்ளுவர், ஔவைப்பிராட்டியார் சரிதம் என்பன தமிழின் மகத்துவம் எத்துணை புராதனமானது என்பதைப் புலப்படுத்துகின்றன.

தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் இன்றைய தமிழாராய்ச்சி மாநாட்டின் முக்கிய அரங்காக நிமிர்ந்து நிற்கின்றது.

ஆனால் பல தசாப்தங்களுக்கு முன்னரே அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பணியை பிரமாண்டமான முறையில் முன்னெடுத்திருந்தது.

மிக அண்மைக்காலம்வரை அமரர் ராஜா சேர் முத்தையா செட்டியார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மேம்பாடுகளில் பெரிதும் தம்மை அர்ப்பணித்திருந்தார்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எட்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தியதன் மூலம் தன்னை ஒரு தமிழபிமானியாக வெளி உலகுக்குக் காட்டலாம்- ஆனால் ஜெயலலிதாவைவிட தமிழின் பண்பை, மகிமையை, பக்குவத்தை உணர்ந்தவர்கள் இம்மாநாடு குறித்து கொண்டிருந்த கண்ணோட்டமே அனைவரது கவனத்தையும் பெற்றிருக்கக் காணப்படுகின்றது.

எட்டாவது தமிழாராய்ச்சி மாநாடு குறித்து தமிழகத்தில் ஜெயலலிதாவுக்கு எதிராகப் பலர் போர்க் கொடி உயர்த்தியுள்ள இத்தருணத்தில், இலங்கையிலும் தமிழறிஞர்கள் பலர் எட்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்குபற்றும் வாய்ப்பை இழந்தவர்களாக இருக்கக் காணப்படுகின்றனர்.

தகுந்த காரணமெதுவுமின்றி இலங்கைத் தமிழறிஞர்களின் தமிழ்ப் பசிக்குத் தடை போடுவதாக எட்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டு நடவடிக்கைகள் விளங்கியிருந்தன.

அரசியலுக்கு அப்பாற்பட்ட விதத்தில் தமது தமிழ்ப் படைப்புகளைப் பறைசாற்றி தமிழகத்தில் கூடிய தமிழறிஞர்களுடன் உறவாடவே இலங்கைத் தமிழறிஞர்கள் விருப்பங்கொண்டிருந்தனர்.

ஆனால், அத் தமிழறிஞர்களின் கைகளில் இருப்பவை பேனாக்களல்ல, துப்பாக்கிகளே என்ற தோரணையிலேயே தமிழக அரசு இலங்கைத் தமிழபிமானிகள் தமிழகம் செல்லத் தடைவிதித்திருந்தது.

இன்றைய தமிழக ஆட்சியாளர்கள் தமது மண்ணிலுள்ள தமிழறிஞர்களையே சரிவரக் கௌரவிக்காத நிலையில் இலங்கைத் தமிழறிஞர்களுக்கு உரிய கௌரவத்தைக் கொடுப்பார்களென்று எதிர்பார்க்க முடியாது.

இலங்கைத் தமிழறிஞர்கள் தமிழகத்தில் வேண்டுவது ஜெயலலிதாவின் பட்டுப் பீதாம்பரத்தையோ அல்லது பொற்கிளியையோ அல்ல. நேர்த்தியான தமிழின்பத்தை நுகரவே அவர்கள் விருப்புக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் இலங்கைத் தமிழறிஞர்கள் மீதான ஜெயலலிதா அரசின் கதவடைப்பு, இன்றைய தமிழக ஆட்சியாளர்கள் இலங்கைத் தமிழறிஞர்கள் பற்றி சரிவரப் புரிந்துகொள்ளவில்லை என்பதனையே புலப்படுத்துகின்றது.

பல ஆண்டுகளுக்குமுன்னர் அமரர் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து யாழ் குடா நாட்டிலும் விரிவான பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

அப்பயணத்தின்போது யாழ்ப்பாணத்தில் 'கல்கி'க்கு சிறந்த வரவேற்பு வழங்கப்பட்டிருந்தது. அறிஞர்கள், கலைஞர்கள் என்று பலர் அவரைச் சூழ்ந்து நின்று தமது அன்பையும், மதிப்பையும் தெரிவித்திருந்தனர்.

கல்கி தமது இலங்கை விஜயம்பற்றி ஒரு அழகிய பயணக் கட்டுரையொன்றை எழுதியிருந்தார். அக்கட்டுரையில் யாழ்ப்பாண விஜயம் குறித்தும் அவர் விரிவாக விபரித்திருந்தார்.

யாழ்ப்பாண பயண அனுபவம் குறித்து அமரர் கல்கி எழுதிய கட்டுரையில் "யாழ்ப்பாணத்தில் கால்தடுக்கி விழ நேரிட்டாலும் ஓர் அறிவாளி மீதே விழமுடிகின்றது. அவ்வளவு தூரம் யாழ்ப்பாணத்தவரின் கல்வி அறிவு மேம்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆறுமுக நாவலர், ஞானப் பிரகாச அடிகளார், சோமசுந்தரப் புலவர், விபுலானந்த அடிகள், பண்டிதமணி சி.கணபதிபிள்ளை, குமாரசாமிப் புலவர், தனிநாயக அடிகள், புலவர் மணி பெரியதம்பிப் பிள்ளை உட்பட பெருந்திரளான இலங்கைத் தமிழறிஞர்கள் தமிழுக்காக தமது உடல், பொருள், ஆவி அனைத்தையுமே அர்ப்பணித்திருந்தனர்.

இவைதவிர தென்னிந்திய தமிழறிஞர்கள் இலங்கையில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் முன்பு பயணங்களை மேற்கொண்டு கலைப்பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டிருந்தனர்.

ஆனால் இன்று இலங்கைத் தமிழர்கள் முற்றிலும் புதிய சூழ்நிலைகளுக்கே முகங்கொடுத்துவரக் காணப்படுகின்றனர்.

இலங்கையில் தோன்றியுள்ள யுத்தக் கெடுபிடிகள் அவர்களது சிந்தனை செயற்பாடுகள், இலக்கிய நாட்டம் என்பவற்றில் பலமாற்றங்களைக் கொண்டு வந்திருக்கக் காணப்படுகின்றன.

சில மாதங்களுக்கு முன்னர் பிரபல தமிழக இலக்கியவாதியான 'சுபமங்களா' ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் யாழ்குடாநாட்டுக்கு விஜயம் செய்திருந்தார்.

அவர் அங்கே விரிவான பயணத்தை மேற்கொண்டிருந்தார். இன்றைய யாழ்ப்பாணம் இருக்கும் நிலமையையும், அங்குள்ளவர்கள் படும்பாட்டினையும், தாம் பின்னர் 'சுபமங்களா' சஞ்சிகையில் தொடர்ச்சியாக எழுதிய கட்டுரைகளில் ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் குறிப்பிட்டிருந்தார்.

பல வருடங்களுக்கு முன்னர் அமரர் கல்கி தமது யாழ்ப்பாண விஜயத்தைப்பற்றி விரிவாக எழுதிய பின்னர், யாழ்ப்பாணம் பற்றிய ஒரு விரிவான பயணக் கட்டுரையை எழுதிய முதலாவது தமிழக எழுத்தாளராக கோமல் சுவாமிநாதன் விளங்குகின்றார்.

கோமல் சுவாமிநாதனின் யாழ்ப்பாண பயணம் பற்றிய கட்டுரையில் அங்குள்ள தமிழ்ப் படைப்பாளிகளின் தமிழிலக்கிய ஆர்வம் எவ்வகையிலும் குன்றிவிடவில்லை என்றும், அந்த ஆர்வம் புதிய வடிவங்களைப் பெற்று எழில், நடைபோடுகின்றது என்றும் அவர் 'சுபமங்களா'வில் எழுதியிருந்தார்.

இவை யாவற்றுக்கும் மேலாக இருதசாப்தங்களுக்கு முன்னர்- 1974ம் ஆண்டு ஜனவரியில் 4வது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் வெகு கோலாகலமாக நடந்தேறியிருந்தது.

இலங்கைத் தமிழர்களும் தமிழை ஆய்வதில், அலங்கரிப்பதில், எவ்வகையிலும் தமிழகத்தவர்களுக்கு சளைத்தவர்களல்ல என்பதனை அம் மாநாடு உணர்த்தியிருந்தது.

இந்நிலையில் இன்றைய அரசியல் நிலமைகளை காரணம்காட்டி, இலங்கைத் தமிழறிஞர்களின் தமிழபிமானத்தின் ஆழ- அகலத்தை சரிவர எடைபோடாது ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு கொச்சைத் தனமாக நடந்துகொண்டிருக்கின்றது.

"தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாரதிதாசன் பாடியிருந்தார்.

இலங்கைத் தமிழர்கள் தமிழைத் தமது உயிருக்கு உயிராக நேசிக்கிறார்கள் என்பதனையே இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களின் இன்றைய நிலை பறைசாற்றுகின்றது.

இதனை முதலமைச்சர் ஜெயலலிதா உய்த்து உணர்ந்தவராயின் தமிழபிமானம் தொடர்பில் அவர் நிற்குமிடத்தை அவராலேயே நன்கு அறிந்துகொள்ள முடியும்.

எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த திருவள்ளுவர் மணி மண்டபம் மற்றும் அரங்கம்.





“ தமிழக முதல்வரின் படாடோபத்தை பறைசாற்றும் விழாவாகவே எட்டாவது தமிழாராய்ச்சி மா்நாடு நடத்தப்பட்டது. ”




“ ஈழத் தமிழறிஞர்களின் கைகளில் இருப்பது பேனாக்களல்ல; துப்பாக்கிகளே என்ற தோரணையில்தான் தமிழக அரசு நடந்துகொண்டிருக்கிறது. ”

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

அறிந்து கொள்ளுங்கள் — ஆரோக்கியம் பெறுங்கள் — ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ ✚ விந்தைகள்

## அகத்தின் நோய் நகத்தில் தெரியும்!



உடலின் உள்ளே உருவெடுக்கும் நோய்களை உங்கள் நகங்களே காட்டி விடுகின்றன. நகங்களின் உருவ அமைப்பு, அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியன உடலின் உட்புறம் தோன்றும் நோய்களை பிரதி பலிக்கின்றன என்று இத்துறையில் பல வருட ஆராய்ச்சி அனுபவம் பெற்ற டாக்டர் ஷெப்பட் ஆரோன்சன் தெரிவிக்கிறார்.

உரிய அளவிலும் வெண்மையாக உட்பக்கச் சதை ஓரளவு தெரியக் கூடியதாகவும், அதே வேளை உறுதியாகவும் காணப்படும் நகங்களை யுடையவர் சுகதேகியாவார் என்று கருதப் படலாம் என்கிறார் டாக்டர் அரோன்சன். "நகங்களைப் பார்த்த உடனேயே ஒருவருடைய நோய் இன்னதுதான் என்று கண்டுபிடித்து விடலாம்" என்று கூறும் அவர் சில உதாரணங் களைத் தந்துள்ளார்.

**1. கைக் கடிகாரக் கண்ணாடி போன்ற நகங்கள்:**

வட்ட வடிவமாக-கைக்கடிகாரக் கண்ணாடி போன்றதாகவும் தட்டையாக வில்லாமலும் உள்ள நகங்களுக்குரியவர், இருதயம் அல்லது நுரையீரல் தொடர்பான நோயாளராகத் தென்படுவார். ஈரலரிப்பு நோயோ அல்லது புற்றுநோயோ இவரைப் பீடித் திருக்கும் என்று கருத இடமுண்டு.

**2. கரண்டி போன்ற நகம்:**

இத்தகைய நகங்களை உடையோர் இரத்த ஓட்டம் தொடர்பான நோயாளிகளாக இருப்பர். அத்துடன் வெட்டை நோயாளிகளின் நகங்களும் இந்த வடிவத்தில் இருக்கும்.

**3. நகங்களில் வெள்ளை வரிகள்:**

நகங்களுக்குக் குறுக்கே வெள்ளை வரிகள் தென்படுமானால் இவர்களுக்கு போதுமான புரதச் சத்து இல்லை என்று கூறலாம். சிறுநீரகத்தில் தோன்றும் நோய்களுக்கும் நகத்தில் தோன்றும் வரிகளுக்கும் தொடர்பு உண்டு.

**4. நீலவர்ண நகங்கள்:**

உண்மையில் நகம் நீலமாக இருப்பதில்லை. நகத்தின் கீழுள்ள சதையே நீலமாகவிருக்கும். இருதயத்துடன் தொடர்புடைய நோய் இவரைப் பீடித்திருக்கும். இரத்த நாளங்கள் அல்லது நாடி நரம்புகளில் இரத்தம் உறைந்துபோகும் நிலையிலுள்ளோரின் நகங்களும் நீலமாகத் தென்படும்.

**5. மேலுயர்ந்த நகங்கள்:**

சாதாரண நிலையிலிருந்தும் நகம் சற்று உயரமாகத் தென்படுமானால் இவர் பூஞ்சனம் தொடர்புடைய தொற்றுக்காளாகி இருப்பார். அடிக்கடி இவருடைய உடம்பில் சிரங்குகள் தோன்றி துன்பப்படுத்தும்.

இத்தகைய ஆதாரங்களைக் கூறும் டாக்டர் அரோன்சன், வேறுபல காரணங்களாலும் நகங்களில் வர்ண பேதங்கள் ஏற்பட இடமுண்டு என்கிறார். இரசாயனக் கலவைகளுடன் தொடர்புடைய சிலருக்கு நக வர்ணமாற்றம் ஏற்படலாம். அத்துடன் நகப்பூச்சுக்களைப் பூசுவோருக்கும் ஏற்படலாம். இத்தகையோர் தங்கள் நகங்களில் செயற்கையாக ஏற்படும் மாற்றங்கள் பற்றி கவலைகொள்ள வேண்டியதில்லை என்கிறார்.

## உங்கள் உடலில் உள்ள சீனியின் அளவைத் தெரிந்துகொள்ளுங்கள்

மனித உடலுக்கு சீனி அதாவது குளுக்கோஸ் அதிகரிப்பு எந்த அளவு தீமையை ஏற்படுத்துகிறதோ இதனைப் போலவே சீனிக் குறைவும் உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இதன் ஏற்றத் தாழ்வுகளை ஆரம்ப கால கட்டத்தில் இனங்கண்டு கொள்ளப் படும் பட்சத்தில் இவற்றிற்கான வைத்திய சிகிச்சைகள் இலகுவாக அமையப்பெறும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

எனவே உங்களின் உடலில் கீழ்க் காணும் அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் உடனே வைத்தியரை அணுகி குருதியை பரிசோதனை செய்து உங்களின் உடலில் இருந்துவரும் சீனியின் அளவைத் தெரிந்து கொண்டு சிகிச்சையை மேற்கொள்வதற்கு முயற்சியுங்கள்.

**சீனிக் குறைவினால் தோன்றப்பெறும் அறிகுறிகள்–**

- இருதயத் துடிப்பில் அதிகரிப்பு ஏற்படுதல்
- உடலில் நடுக்கம் ஏற்படுதல்
- கண் பார்வையில் தெளிவின்மை
- பசி அதிகரித்துக் காணப்படுதல்
- தலைவலி தொடர்ச்சியாக ஏற்படுதல்
- அதிகமான வியர்வை தோன்றப் பெறுதலும், மயக்கம் ஏற்படுதலும்

**சீனி அதிகரிப்பினால் தோன்றப்பெறும் அறிகுறிகள்–**

- உடல் சோர்வு அதிகம் ஏற்படுதல்
- தாகம் அதிகரித்து காணப்படுதல்
- சிறுநீர்க் கழிவு அதிகரித்து காணப்படுதல்
- உணவில் விருப்பமின்மையும் வாந்திக் குணமும் காணப்படுதல்
- உடல் பாகங்களில் வலி தோன்றப் பெறுதல்
- அவயவ பொருத்துக்களில் உளைச்சல் ஏற்படுதல் போன்றவைகளாகும்.

## சூரிய ஒளி உதவும்



காலை உதயமாகி வரும் சூரியனின் ஒளியில் மனித உடலுக்கு தேவையான விட்டமின் 'டி' ஜீவ பதார்த்தம் கணிசமான அளவு அடங்கப்பட்டுள்ளதாக ஆராய்ச்சி யாளர்கள் கூறுகிறார்கள்.

மனித உடலுக்கு மிகுந்த பயன்பாட்டை தரவல்ல இந்த 'டி' விட்டமின் ஜீவ பதார்த்தம் நமது எலும்புக் கூறுகளை உறுதிப்படுத்த உதவுவதோடு புற்றுநோயை எதிர்க்கும் ஆற்றலையும் கொண்டுள்ளது.

நாளாந்தம் உதயமாகிவரும் இளஞ் சூரிய ஒளியை தினந்தோறும் அரை மணித்தியாலம் அனுபவிப்பதன் மூலம் நமது உடலுக்கு தேவையான விட்டமின் 'டி' ஜீவ பதார்த்தத்தை நாம் இலவசமாக பெற்றுக்கொள்ளமுடியும்.

இவற்றைத் தவிர, விட்டமின் 'டி' ஜீவ பதார்த்தம், முட்டை, மீன், ஈரல், இறைச்சி, போன்ற மாமிசங்களிலும் புதிய காய்கறி வகைகளிலும் அடங்கப்பெற்றுள்ளன.

## ஒரு உலகைக் கலக்கிய உளவுச் சதி

# அழகி- ஒரு அமைச்சர்- ஒரு டாக்டர்



கம்பீரமான கட்டிடங்கள், இயந்திர வேக மனிதர்கள்...இலண்டன் மாநகர் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது.

அமைச்சர் ஜோன் புரோஃபூமாவுக்கு அரசாங்க பைல்களை புரட்டிப் புரட்டியே விரல்கள் களைத்துவிட்டன.

அவருக்கு மாலையில் ஓய்வு தேவைப் பட்டது. உடம்பெல்லாம் உளைச்சலாக இருந்தது. சோம்பல் முறித்துக்கொண்ட போதுதான் டாக்டர் ஸ்ரீபன் வார்ட் என்பவரின் ஞாபகம் வந்தது.

டாக்டர் ஸ்ரீபன் வார்ட், தசைப்பிடிப் புக்களை பதமாக பக்குவமாக நீக்கி விடுவதில் கெட்டிக்காரர்.

பெரும் பதவிகளில் இருப்பவர்கள், தொழிலதிபர்கள் என்று பிரபலங்கள் பலர் அவரது வாடிக்கையாளர்கள்.

டாக்டர் ஸ்ரீபன் வார்ட் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளும் மனிதர். பெரும் புள்ளிகளது பலவீனம் புரிந்து பணம் கறக்கத் தெரிந்தவர்.

தசைப்பிடிப்பை நீக்கவரும் 'பெரிய மனிதர்கள்' தசைப்பிடிப்பை நீக்கியதும் சதைப் பசிக்கு இரை கிடைத்தால் வேண் டாம் என்றா சொல்லப் போகிறார்கள்?

எங்கெங்கே எந்த நரம்புகளில் தொட்டால் உணர்ச்சி ஜில்லென்று ஏறும் என்பது டாக்டருக்கு தெரியும். தொட்டு விடுவார். தொடப்பட்டவர்கள் தேடுவார் கள். டாக்டர் மருந்துக்குப் பதிலாக தன்னிடமுள்ள அழகான பெண்களை விருந்தாகக் கொடுப்பார். பதிலுக்கு பண நோட்டுக்களை அவர்கள் டாக்டரி டம் கொடுப்பார்கள்.

டாக்டர் ஸ்ரீபன் வார்ட்டின் மாளிகையில் இருந்த தொலைபேசி அழைப்பு விடுத்தது.

மறுமுனையில் அமைச்சர் ஜோன் புரோஃபூமா பேசினார்.

"உடம்பெல்லாம் அடித்துப்போட்டது போல் வலிக்கிறது டாக்டர்"

டாக்டரின் உதட்டில் மர்மப் புன்னகை. தன் எதிரேயிருந்த அழகியை கவனித்தார்.

அவள் பெயர்- கிறிஸ்ரீன் கீலர். பருவம் வழியும் 18 வயது. அன்று காலையில்தான் அவளை தன் மாளிகைக்கு அழைத்திருந்தார்.

அவள் காபரே நடனக்காரி. நீலக் கண்கள்- நூறு வீதமான போதையை உத்தரவாதம் செய்யும் கண்கள். லிப்ஸ்டிக் பூசிய இதழ்கள். பூசியிருக்காவிட்டாலும் கவனத்தை சிதறவைக்கும் இதழ்கள்தான்.

டாக்டர் ஸ்ரீபன் பல பெண்களைப் பார்த்திருக்கிறார். அதில் சிலரை அந்தரங்கமாகவும் ஆராய்ந்து பார்த் திருக்கிறார். முழுமையாக பார்த்தபோதுகூட ஏற்படாத ஒரு ஈர்ப்பு இவளிடம் மட்டும் இருந்தது.

முழங்காலுக்குமேல் உயர்ந்திருந்த ஸ்கேர்ட் கால்களின் பளீர் வெண்மைக்கு விளம்பரம் செய்தது. அவள் கால்களை ஆட்டிக்கொண்டிருந்தாள். வெண்மை மின்னி மின்னி மறைந்தது.

டாக்டர் திருப்தியாய் புன்னகைத்தார்.

உண்மைச் சம்பவத்தை தனது பாணியில் தருவது

**ரசிகன்**




'இவள்தான் சரியான பொறி' 'இவள்தான் சரியான தூண்டில்!' என்று மனசுக்குள் நினைத்துக்கொண்டார்.

மறுமுனையில் பேசிய அமைச்சர் ஜோன் புரோஃபூமா,

"என்ன டாக்டர் சத்தத்தையே காணோம்?"

"நோ.நோ. வேறு ஏதாவது நிகழ்ச்சிகள் இருக்கிறதா என்று யோசித்தேன்."

"நேரம் இல்லையா டாக்டர்?"

"இல்லைத்தான். ஆனால் உங்களுக்கு மறுத்தால் முடியுமா? நீங்கள் வாருங்கள் ஹொனேட் சேர்!"

றிசீவரை சாத்திவிட்டு அழகி கீலரைப் பார்த்து பல்லைக்காட்டினார் டாக்டர். எடுப்பாய் உயர்ந்து திரண்டிருந்த மார்புகள் டாக்டரையே கவிழ்த்துவிடும்போல மிரட்டிக் கொண்டிருந்தன.

"உனக்கொரு பெரிய வேலை. மிக முக்கிய வேலை. ஆனால் மாபெரும் இரகசிய வேலை ஒன்று தரப்போகிறேன்."

கீலர் கால்களை அசைத்தபடியே 'என்ன வேலை?' என்று கேட்டதுபோல விழிகளால் ஆச்சரியப்பட்டாள்.

"பல கண்கள் இரசிக்க ஆடைகளை தியாகம் செய்யவேண்டியிருக்காது. சில கண்கள் மட்டுமே இரசிக்க உன் ஆடைகளை இழந்தால் போதும். ஊதியம் மட்டும் நீ கனவில்கூட நினைத்துப் பார்த்திராத அளவில் உன் காலடியில் கொட்டப்படும். தேவையானது கொஞ்சம் சாகசம். கொஞ்சம் லாவகம்."

"விபச்சாரமா?"

கீலர் சூடாக கேட்டாள். டாக்டர் அவசரமாய் அவள் கேள்வியை மறுத்தார்.

"நோ மைடியர்! விபச்சரமல்ல. வியாபாரம். மிக உயர்ந்த வியாபாரம். உன் கட்டிலுக்கு வரப்போவது நாட்டின் ஆட்சிக் கட்டில் அமர்ந்திருக்கும் பெரிய மனிதர்."

"பெயர்?"

"அமைச்சர் ஜோன் புரோஃபூபா"

'வாவ்' கீலர் மனதுக்குள் வியந்தாள். சுலபமாய் பணம் சேரும். ஒப்புக்கொண்டாள்.

"ஓ.கே. இதில் நீங்கள் எங்கே வருகிறீர்கள் டாக்டர்? பணத்தில் பங்கு வேண்டுமா?"

"வேண்டாம் டியர். பணம் வேண்டாம்!"

"நான்?"

கண்ணடித்தாள்.

'தேவைதான்! ஆனால் அதைவிட முக்கியமான ஒன்று நீ பெற்றுத்தர வேண்டும். சுகத்தை கொடுத்து சுலபமாய் கறக்கவேண்டியது அது! உன் திறமைக்கே சவால்"

"திறமை? நிரூபித்துக்காட்டட்டுமா டாக்டர்? இப்போதே இந்த நிமிடமே- உங்கள் வசதி எப்படி?"

கீலர் சிரித்தாள். மது இதழ்கள் மலர மார்புகள் குலுங்கச் சிரித்தாள்.

"எட்டி நின்று பார்க்கும்போதே உன் திறமை தெரிகிறதே மை டியர். கட்டிலில்தான் நிரூபிக்கவேண்டுமா நீ? ஆனால் மை டியர் சந்தேகம் வராமல் கறக்க வேண்டும்."

"எதை?"

"விலை உயர்ந்த அரசாங்க இரகசியங்களை!"

"..........யூ மீன்?"

"ஐ மீன் பிரிட்டிஷ் அரசாங்க இரகசியங்களை ரஷியா அறிய ரொம்ப ஆசைப்படுகிறது. கறந்து கொடுத்தால் கத்தையாகப் பணத்தை நீட்ட தயாராக இருக்கிறது."

"அமைச்சர் இரகசியங்களை அவிழ்ப்பாரா டாக்டர்?"

"ஆடைகளை அவிழ்க்கப் போவது நீ. அதனால் அமைச்சர் இரகசியங்களை அவிழ்க்கப் போவதும் உறுதி."

"விழிப்பாக இருந்தார் என்றால்..?"

"வேறொரு திட்டம் வைத்திருக்கிறேன்"

"என்ன திட்டம்?"

"இப்போது வேண்டாம்; பின்னர் சொல்கிறேன்."

"சந்தேகமா?"

"நோ- சமயோசிதம்!"

அழகிய கீலர் எழுந்துகொண்டாள். டாக்டரும் தன் இருக்கைவிட்டு எழுந்துவந்து அவளின் தோளில் கைபோட்டு அணைத்துக் கொண்டார்.

"வா டியர்! உன் அறைக்குச் செல்லலாம்!"

அந்த மாளிகையிலேயே அவளுக்கென சகல வசதிகளுடனும் கூடிய அறை ஒதுக்கப் பட்டிருந்தது.

அந்த அறைக்குத்தான் அவளை அழைத்துச் சென்றார்.

"எல்லாவற்றிற்கும் வசதியான விசாலமான அறை இது. உனக்கும் பிடித்திருக்கிறதா கீலர்?"

அவள் பதில் சொல்லவில்லை. மகிழ்ச்சியின் முத்திரையாக டாக்டருக்கு அழுத்தமாய் ஒரு முத்தம் கிடைத்தது.

"அமைச்சர் வரும் நேரமாகிவிட்டது. நீச்சல் தெரியுமா உனக்கு?"

"ஒரு மீனிடமா இந்தக் கேள்வி?"

"குட்! நீ அமைச்சரை நோக்கி வலையை வீசப்போகும் இடம் நீச்சல் குளம்."

புரிந்தது என்று அடையாளமாய் தலை அசைத்தாள் அழகி கீலர்.

டாக்டர் அமைச்சரை வரவேற்க ஆயத்தமானார்.

□□

இலண்டனில் உள்ள சோவியத் யூனியனின் தூதரகம். யூஜின் இவானோவ் கடற்படை உதவி அதிகாரி.

இளைஞன்-கட்டுமஸ்தான அழகன். பெயர்தான் கடற்படை உதவி அதிகாரி. அவன் உண்மையான தொழில் உளவறிதல்.

அமெரிக்காவையும், அதன் நட்பு நாடுகளையும் கண்கொத்திப் பாம்பாக கண்காணிக்க சோவியத் யூனியன் ஒரு உளவு நிறுவனத்தை வைத்திருந்தது.

அதன் பெயர் சுருக்கமாக கே.ஜி.பி. என்ற மூன்றெழுத்தால் அழைக்கப்படும்.

கே.ஜி.பி.உளவாளிகள் பல்வேறு ரூபங்களில் சகல நாடுகளுக்குள்ளும் புகுந்துவிடுவார்கள்.

சோவியத் தூதரகங்களில் பணியாற்றும் அதிகாரிகள் போன்றும் அவர்கள் நாடுகளின் உள்ளே நுழைந்துவிடுவார்கள்.

அவ்வாறு நுழைந்து அந்த நாடுகளின் முக்கிய பிரமுகர்களது பலம்-பலவீனங்களை அறிந்து வலை விரிப்பார்கள்.

யூஜின் இவானோவ், டாக்டர் ஸ்ரீபன் வாட் பற்றித் தெரிந்துகொண்டான். டாக்டரின் பலவீனம் பணம்! டாக்டர்மூலம் பெரும் புள்ளிகள் பலர் அழகிகளை பெறும் விசயமும் அவனுக்குத் தெரியும்.

யூஜின் இவானோவ் இப்போது டாக்டர் ஸ்ரீபன் வாட்டின் மாளிகைக் குப் புறப்பட்டான்.

அதே சமயம் அமைச்சர் ஜோன் புரோஃபூமாவும் தனது இல்லத்திலிருந்து கிளம்பினார்.

டாக்டரின் மாளிகையில் அழகி கீலர் நீச்சல் தடாகம் அருகே வந்து தனது உடைகளை களைய ஆரம்பித்தாள்.

(மறுவாரமும் வரும்)

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தகவல் பெட்டி

## லெஃப்ற் ரைட் லெஃப்ற்

ஒரு வயதான இந்தப் பன்றிக் குட்டியாரின் பொழுது ஜாலியாகப் போகிறது. அமெரிக்க இராணுவத்தினர் அணியும் தொப்பியோடு ரோந்து வருகிறார் பன்றியார். அமெரிக்க இராணுவத்தை கிண்டல் செய்யும் முயற்சியாகத்தான் பன்றியின் தலையில் அவர்களது தொப்பியை போட்டு படமெடுத்திருக்கிறார்களோ என்று சந்தேகம் வருகிறது. சேச்சே அப்படியெல்லாம் ஒன்றுமில்லை வேடிக்கைக்குத்தான் இப்படி என்கிறார் பன்றிக் குட்டியை வளர்க்கும் ஜேம்ஸ்.



## என் பிள்ளை என்னோடுதான்!

குழந்தைகளை தோளில் தூக்கிச் செல்வதெல்லாம் மேலை நாடுகளில் பழைய கதையாகி வருகிறது. சக்கர வண்டியில் கொண்டு சென்றார்கள். அதனை தள்ளிச் செல்வதும் ஒரு தனிவேலை என்பதால் இப்போது தமது உடம்போடு குழந்தையைக் கொளுவிக்கொண்டு செல்லத்தக்க உடையை தயாரித்துள்ளார்கள். இதில் ஒரு வசதி என்னவென்றால் குழந்தை என்ன செய்கிறது, அங்கே இங்கே ஓடி ஏதாவது ஆகிவிடுமோ என்ற பயமோ கவலையோ இன்றி பெற்றவர்கள் தம் காரியத்தில் மட்டும் கண்ணாயிருக்கலாம். படத்தில் தந்தையார் மீன்பிடிக்கிறார். குழந்தை விளையாடிக்கொண்டு பத்திரமாக இருக்கிறது. குழந்தையின்மீது ஒரு கண் வைத்துக்கொண்டு மீன்பிடிக்கும் அவசியம் இல்லையல்லவா?



## உங்கள் கண்களையே உங்களால் நம்பமுடியாத காட்சி!



ஹொங்கொங்கில் நடந்த கண்காட்சிவிழா ஒன்றில் ஒரு சிறுவனும், சிறுமியும் அனைவரையும் வியப்பின் உச்சிக்கு கொண்டுசென்றுவிட்டார்கள். சிறுமியின் கரத்தில் ஒரு டென்னிஸ் மட்டை, அதன் மேல் பரிசுக்கோப்பை, அதற்கு மேல் டேபிள் டென்னிஸ் மட்டை, அந்த மட்டையின் மீது டென்னிஸ் பந்து பந்தின் மீது சமநிலை தவறாமல் ஏறி நின்றான் சிறுவன். உடல் வளையாமல் இருக்க மேலே நிற்கும் சிறுவனின் உடலில் இரும்புச் சட்டத்தை அமைத்து இருந்தார்கள். (2வது படத்தில் காட்டப்பட்டுள்ளது) அச்சமின்றி சாகசம். ஐந்தில் அஞ்சாதது ஐம்பதில் அஞ்சாது.

## உண்மையான இரட்டை வேடம்

சினிமாவில் இரட்டை வேடத்தில் ஒரு நடிகரே நடித்துப் பார்த்திருக்கிறோம். சமீபத்தில் வந்த ஹலோ பிரதர் படத்தில்கூட ஹீரோ அண்ணன்-தம்பி என்று இரட்டை வேடத்தில் வந்து கலகலப்பூட்டியிருந்தார்.

ஒருவரே இரட்டை வேடத்தில் நடித்து வெளியான படங்களைப் பார்த்த இரண்டுபேருக்கு ஒரு ஐடியா தோன்றியது. நாமும் படத்தில் நடித்தால் என்ன? நடிக்கலாமே என்றுவிட்டார் இயக்குநர். சரி. யார் அந்த இரண்டு பேரும்?

ஒருவர் ராம். மற்றவர் இலட்சுமணன். இவர்கள் இரட்டைப் பிறவிகள். இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். விஜயகாந்த் நடித்த பெரிய மருது படத்தில் இருவருமே வில்லன்களாக நடித்து வரவேற்பு பெற்றார்கள்.

இருவரும் ஏற்கனவே ரஜினிகாந்த்துடனும் உழைப்பாளி படத்தில் பயங்கரமாக மோதினார்கள்.

தொடர்ந்து நடிக்கப் போகிறார்கள். இருவருக்கும் ஒரு ஆசை, தாங்கள் மணமுடிக்கும் பெண்களும் இரட்டையராக இருக்கவேண்டுமாம். அதற்காகவே காத்திருக்கிறார்களாம்.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## கற்றுக்கொடுக்கும் பாட்டி...

பழம்பெரும் நடிகை செளகார் ஜானகி தனது பேத்தி வைஷ்ணவிக்கு சினிமா உலகில் முன்னேறுவது எப்படி என்று பாடம் நடத்திக்கொண்டிருக்கிறார். தான் நடித்த பழைய படங்களையும் வீடியோவில் போட்டுக் காண்பித்து வருகிறாராம். வைஷ்ணவி கற்றுக் கொண்டால் சரிதான்.

## ஆறு கோடி தேவைப்படும்

...இயக்கி தயாரிக்கவுள்ள 'மருதநாயகம்' படத்தை ஆரம்பிக்க 6 கோடி வரை தேவைப்படும். அதனால்தான் காலதாமதம் ஏற்படுகிறதாம்.

## ரோஜா மாறிவிட்டார்

ஒருவரிடம் எதையாவது தீவிரமாகப் பேசிக்கொண்டு இருக்கும்போது குறுக்கே பேசினால் அவர்மீது சற்றுக் கோபத்தைக் காட்டுவார் ரோஜா. அது இப்போது அல்ல. நடிக்க வந்த புதிதில் அப்படி நடந்து கொண்டார். ஆனாலும் இப்போது மாறிவிட்டார் ரோஜா. எதை வேண்டுமானாலும் கேட்கலாம். அவருடைய காதல் வாழ்க்கையைப் பற்றிக் கேட்டாலும் அவர் துளியளவும் கோபப்படுவதே கிடையாது. இதுபோல் அவரால் எப்படிப் பொறுமையாக இருக்க முடிகிறது? "எல்லாம் கடவுளின் அருள்தான். அதுமட்டுமல்ல- சினிமாத் துறை என்பது பத்துப் பேர் இணைந்து பணியாற்றக்கூடிய ஒரு துறை. இதில் அனைவருமே நமக்குச் சாதகமாகப் பேசுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக இருப்பார்கள். எனவே யாரிடமும் கோபம் காட்டாமல் பழக முயற்சித்தேன். நாளாக நாளாக அது எனக்குப் பழகிப் போய்விட்டது. என்னைப் பற்றித் தவறாகப் பேசுபவர்களை நேரில் சந்திக்கும்போது கூட அவர்களிடம் நான் கோபமாகப் பேசியது கிடையாது. இயல்பாகச் சிரித்து விடுவேன்" என்று ஒரு பேட்டியில் மனந்திறந்து கூறினார் ரோஜா.



வினிதா-அர்ஜுன்
படம்-கர்ணா

முகப்பில்
**ராதிகா**
படம்-சித்திரச்சோலை

## 9 அடி ராஜநாகம் ரெடி!

நாகதேவதைகளின் அபூர்வ செயல்களை சித்தரிக்கும் படம் 'நாகமணி'. இந்தப் படத்திற்காக ஒன்பது அடி ராஜநாகம் ஒன்று நடிக்க வைக்கப்படுகிறது. அதனோடு 500க்கு மேற்பட்ட பாம்புகளும் நடிக்கவுள்ளன.

5 ஆயிரம் பாம்புப் புற்றுகளும், நாகதேவதை கோவிலும் விசேஷமாக உருவாக்கப்பட்டுள்ளன. கதாநாயகன்-கதாநாயகி தேர்வு நடைபெற்று வருகிறது.

## வினிதா சொன்ன ஆசை

'பாட்சா' படப்பிடிப்பில் ரஜினிகாந்த்தை சந்தித்த வினிதா தனது ஆசையை அவரிடம் வெளியிட்டார்.

"உங்கள் படம் ஒன்றில் நடிக்க ஆசைப்படுகிறேன்" என்றார் வினிதா. சந்தர்ப்பம் வரும்போது பார்க்கலாம் என்று ரஜினி சொன்னாராம். அதே நேரம் தெலுங்கு நடிகர் மோகன்பாபு அவ்விடத்திற்கு வந்திருக்கிறார். அவரிடம் வினிதாவை அறிமுகப்படுத்திய ரஜினி "நல்ல நடிகை. உங்கள் படத்தில் ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்" என்று கூறினாராம். மோகன்பாபு சம்மதித்து தனது புதிய படம் ஒன்றில் வினிதாவுக்கு வாய்ப்பு கொடுக்கப்போகிறார். ரஜினி மூலம் சிபாரிசு பெற்ற வினிதா ரஜினியோடு நடிக்கப்போகும் வாய்ப்புக்காக ஏங்கிக்கொண்டிருக்கிறார்.

## மறுபடி வளரும் கருப்பண்ணசாமி!

ஆர்.பார்த்திபன் இயக்கி நடிக்கும் கருப்பண்ணசாமி படப்பிடிப்பு இடையே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது மீண்டும் படப்பிடிப்பு ஜரூராக ஆரம்பித்துள்ளது.

100 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு வீரனின் கதை என்பதால் அந்தக் கால ஆபரணங்கள், கலைப் பொருட்கள் போன்றவற்றை உருவாக்கி பிரமாண்டமாக படப்பிடிப்பு நடத்துகிறார் பார்த்திபன். 1000 சண்டைக் கலைஞர்கள் கலந்துகொள்ளும் சண்டைக்காட்சிகள் இரண்டு ஹெலிகொப்டர்களில் பறந்து படமாக்கப்பட்டன.

200 குதிரைகள், 50 யானைகள் பங்குகொள்ளும் சண்டைக் காட்சிகளும் படமாகியுள்ளன.

பார்த்திபன் கதாநாயகன். 'சரிகமபதநி' படத்தில் நடித்த சங்கீதா கதாநாயகியாக நடிக்கிறார். சில முன்னணி நடிகைகள் பாடல் காட்சிகளில் கவர்ச்சியாக தோன்றுவார்களாம்.

பார்த்திபன் படம் என்றால் கவர்ச்சிக்கோ பஞ்சம்?

தமிழ் புத்தாண்டுக்கு (ஏப்ரல்) படம் வெளிவரும்.

## நட்பு நடிகைகள்

கார்வண்ணன் இயக்கத்தில் உருவாகிவரும் 'தொண்டன்' படத்தில் முரளியின் ஜோடியாக ரோஹிணி நடிக்கிறார். மற்றொரு ஜோடி வினோதினி. வினோதினிக்காக கார்வண்ணனிடம் சிபாரிசு செய்து வாய்ப்பு வாங்கிக்கொடுத்தது ரோகிணிதானாம். இருவரும் நண்பிகள்.

## 'முருங்கைக்காய் இடுப்பழகி'

சட்டக்கல்லூரி மாணவி ராணியை அவள் காதலன் மருது வர்ணிக்கிறான். "ஆகா, அழகான உனது வளைந்து நெளிந்த முருங்கைக்காய் இடுப்பை இரு கையாலும் பிடித்து தூக்கி முத்தமிட முடியவில்லையே" ராணி வெட்கத்தோடு.

"அது என்னங்க முருங்கைக்காய் இடை?"

அதற்கு 'ஏ'ரக விளக்கம் ஒன்றும் சொல்வான் மருது. அது இங்கே வேண்டாம். மருதுவாக நடிப்பது ரகுமான். ராணியாக செளந்தர்யா. காட்சி இடம்பெறும் படம் 'டியர் சன்'.



பிரசாந்த்-கனகா
படம்-ஆணழகன்

## விழியில் ஏன்

மாதுரி டிக்ஷித் மீண்டும் அபாரமான கவர்ச்சிக்குத் திரும்பியிருக்கிறார். (படத்தைப் பார்த்தாலே தெரிகிறது என்கிறீர்களா?) ஜுஹி சாவ்லா, ரவீனா டாண்டன் போன்றோர் கவர்ச்சியை மூலதனமாக்கி முன்னேறுவதை முறியடிக்கவேண்டும் என்பதால் மாதுரி ஆடைகளை அலட்சியம் செய்யத் துணிந்ததுக்கான காரணமாம்.



ஏட்டிக்குப் போட்டி

மாதுரி டிக்ஷித்

## ரஜினிக்கு வைரமுத்து வைக்கும் 'ஐஸ்'

## 'பாட்சா' படப் பாடல்களில் அசத்தல்!

இளையராஜாவின் உறவு முறிந்தபோதும் கவிஞர் வைரமுத்து நிமிர்ந்துநிற்க தேவா மற்றும் ஏ.ஆர்.ரகுமான் போன்ற இசையமைப்பாளர்கள் உதவுகிறார்கள். அவர்களும் கவிஞர் வைரமுத்துவால் லாபமடைகிறார்கள். பரஸ்பர லாபம்.

வைரமுத்து ரஜினிகாந்த்தையும் கையுக்குள் போட்டு வைத்திருக்கிறார். 'அண்ணாமலை' படத்தில் ரஜினியையும் குஷ்புவையும் வைத்து "கூடையிலே என்ன பூ குஷ்பூ" பாடலை எழுதியிருந்தார்.

இப்போது 'பாட்சா' படத்தில் ரஜினியை உச்சத்தில் தூக்கிவைத்து பாடல் எழுதியிருக்கிறார்.

பாடலின் முக்கிய வரிகள் இவை:

பெண்: நீ நடந்தால் நடை அழகு
நீ சிரித்தால் சிரிப்பழகு
நீ பேசும் தமிழ் அழகு
நீ யொருவன் தான் அழகு.
குழு: அழகு... அழகு
நெற்றியிலே புரண்டு விழும்
நின் முடி அழகு
அந்த முடி கோதுகின்ற
அந்த விரல் அழகு.

இப்படித் தொடர்கிறது ஒரு பாடல். மற்றொரு பாடலில் ரஜினியையும் புகழ்ந்து நக்மாவையும் தூக்கிவிடுகிறார் வைரமுத்து.

பெண்: பச்சரிசி பல்லழகா-பால சிரிப்பில் கொல்லாதே
ஆண்: அழகு மணி தேரழகி- அசைய
விட்டே கொல்லாதே.
பெண்: நெத்தி தொடும் முடியழகா
ஒத்தை முடிகா ரழகா.
ஆண்: கத்தை மலர் குழலழகி-ஒத்தை
மலர் தாராயோ...

இப்படி அந்தப் பாடல் தொடர்கிறது. 'பாட்சா' படப் பாடல்கள் அநேகமானவை. ரஜினி புகழ் பாடும் பாடல்களாகவே இருக்கின்றன. ரஜினி இரசிகர்களுக்கு வெல்லமாய் இனிக்கும். இசை-தேவா.



ரஜினி-நக்மா
படம்-பாட்சா

# மினிசினி

www.padippakam.com

- பாரதிராஜா இயக்கத்தில் சிவாஜி-பிரபு நடிக்கும் 'பசும்பொன்' படத்தில் பிரபுவுக்குத் தம்பியாக நடிக்கும் விக்னேஷிற்கு ஜோடியாக யுவராணி நடிக்கிறார்.
- மணிரத்னத்தின் 'ரோஜா' இந்தியில் மொழிமாற்றப்பட்டு பெரு வெற்றி பெற்றது. இப்போது 'ஜென்டில்மேன்' புகழ் ஷங்கரின் 'காதலன்' இந்தியில் மொழிமாற்றப்பட இருக்கிறது.
- 'உளவாளி' படத்தை அடுத்து 'அமீன்கோட்டை' என்ற படத்திற்கு கதை, திரைக்கதை வசனம் எழுதுகிறார் கலைப்புலி சேகரன். இப்படத்தை ராமநாதர் என்னும் புதிய இயக்குநர் இயக்குகிறார்.
- மோகன்லால் நடிக்கும் 'மாந்திரிகம்' என்ற மலையாளப் படத்தில் நக்மா கதாநாயகியாக நடிக்கவிருக்கிறார். இந்தப்படம் நக்மா நடிக்கும் முதல் மலையாளப் படமாகும்.
- 'முதல் பாடல்' படத்தில் கதாநாயகனாக அறிமுகமான மது நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 'சின்னவங்க' என்ற படத்தில் நடித்து வருகிறார்.
- 'ஜல்லிக்கட்டுக்காளை' படத்தில் வில்லனாக நடித்த ஆனந்தராஜ் அலி வேடத்தில் நடித்திருக்கிறார். இதேபோன்று 'துறைமுகம்' படத்தில் விவிங்டன் அலியாக நடிக்கிறார்.
- 'இதயம்', 'என்றும் அன்புடன்' படங்களில் இணைந்து நடித்த முரளி-ஹீரா ஜோடி அடுத்து 'சந்தனக்கருப்பன்' படத்தின் மூலம் மீண்டும் ஜோடி சேருகிறார்கள்.
- தெலுங்கில் மம்முட்டி நடித்த 'ரெயில்வே கூலி' தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. இதில் மம்முட்டியுடன் மீனா-ரோஜா நடித்துள்ளனர்.
- 'நாட்டாமை' படத்தை அடுத்து சுப்பர் குட் நிறுவனம் அர்ஜுன் நடிக்கும் 'செங்கோட்டை' என்ற படத்தையும், பிரபுதேவா நடிக்கும் 'மிஸ்டர் ரோமியோ' என்ற படத்தையும் தயாரிக்கவுள்ளது.
- தெலுங்குத் திரையுலகின் முன்னணி இசையமைப்பாளர்களான ராஜ்-கோட்டி இரட்டையர்கள் சமீபத்தில் பிரிந்துவிட்டார்கள். இனிமேல் இருவரும் தனித்தனியாக இசையமைக்கத் தீர்மானித்துள்ளனர்.
- நாசர் இயக்கி, நடித்த 'அவதாரம்' படத்திற்கு இசையமைத்துள்ள இளையராஜா அதில் இடம்பெற்றுள்ள ஆறு பாடல்களையும் அவரே பாடி இருக்கிறார்.
- 'கட்டுமரக்காரன்' படத்தைத் தயாரித்த எம்.ஜி.பிக்சர்ஸ் நிறுவனம் அடுத்து சத்யராஜ் நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கின்றது. இப்படத்தை ராஜகபூர் இயக்குகிறார்.
- விக்ரமின் சிறந்த டி.பி.கஜேந்திரன் இயக்கிய 'வீடு, மனைவி, மக்கள்' படம் இந்தியில் தயாரிக்கப்படவுள்ளது. இந்திப் படத்தையும் டி.பி.கஜேந்திரனே இயக்குகிறார்.
- ரகுமான்-வாவண்யா நடிக்கும் 'பாட்டு பாடவா' படத்தில் கௌரவ வேடத்தில் குஷ்பு நடிகை குஷ்புவாக நடிக்கிறார்.

## எஸ்.வி.சேகர் திருடினாரா?

அமெரிக்க அதிபரையெல்லாம் சந்தித்தது போல படத்தை ஓட்டி வித்தை காட்டி கதைவிட்ட கெட்டிக்காரர் எஸ்.வி.சேகர். இப்போது அவர் பற்றி ஒரு கதை. அமெரிக்காவில் ஸ்டோர் லைட் திருடி மாட்டிக்கொண்டார். 12 மணிநேரம் அமெரிக்க சிறையில் அவரை பிடித்துப் போட்டுவிட்டார்கள். விசாவும் ரத்துச் செய்யப்பட்டுவிட்டது. இனி அமெரிக்கா பக்கமே அவர் தலைவைத்துப் படுக்க முடியாது. இது பற்றி எஸ்.வி.சேகர் என்ன சொல்கிறார்? அவரது விளக்கம் இதோ: "சமீபத்தில் எனது குழுவிலிருந்து கிருஷ்ணமூர்த்தி, சுந்தரராமன் என்ற நபர்களை நீக்கிவிட்டேன். அவர்கள்தான் என்மீது இப்படி அவதூறு பரப்பிவருகிறார்கள். நான் ஏப்ரல் மாதம் அமெரிக்கா போகப்போகிறேன்" என்கிறார் எஸ்.வி.சேகர்.

## கார்த்திக்கின் ஆராய்ச்சி

மீனாவின் இடையை கார்த்திக் 'டேப்' வைத்து அளவெடுக்கும் 'புத்திசாலித்தனமான சிறப்பான' காட்சி ஒன்று 'மருமகன்' படத்திற்காக படமாக்கப்பட்டுள்ளது.

கார்த்திக் தையல் கடைக்காரராக நடிக்கிறார். அவரிடம் ரவிக்கை, பாவாடை தைக்க வருகிறார் மீனா. ஒரு தடவையல்ல பல தடவை இடை அளவை கார்த்திக் எடுக்க, மீனா தெளிய 'கட்' சொன்னார் இயக்குநர்.

கார்த்திக்-மீனா ஜோடி நடிக்கும் புதிய படமான 'மருமகன்' மணிவாசகம் இயக்கத்தில் வளருகிறது. இசை-தேவா.

## 5 நட்சத்திரக் குடும்பம்

விஜயகுமார்-மஞ்சுளா தம்பதியினர் கொடுத்து வைத்தவர்கள். 5 நட்சத்திர குடும்பமாகியிருக்கிறார்கள் என்றால் சும்மாவா?

விஜயகுமார்-மஞ்சுளா ஆகியோரை அடுத்து அவர்களது மகள் பேபி ஸ்ரீதேவி நடிக்கவந்தார்.

கே.பிரபாகரன் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் கதாநாயகனாக நடிக்கும் அருண்குமாரும் அவர்களது பிள்ளைதான்.

அதுமட்டுமா 'கூலி' படத்தில் சரத்குமாருடன் முக்கிய வேடத்தில் நடிக்கும் கவிதாவும் அவர்களது மகள்தான்.

தாய்-தந்தை-மகள்கள், மகன் என்று 5 நட்சத்திரங்கள் உள்ள குடும்பம்.

## "உங்களால் முடியாது"

நடிகை லட்சுமி சொந்தப் படம் எடுக்கப் போகிறார். ஆனால் படத்தை இயக்கப் போவது அவர் கணவரும் இயக்குநருமான சிவச்சந்திரன் அல்ல. 'உங்களால் முடியாது' என்று சொல்லிவிட்டாராம் லட்சுமி. அதனால் சிவச்சந்திரனுக்கு சற்று வருத்தம்தானாம்.



## ஐந்து 'ஜொள்ளு' பாடல்கள்

'தாமரை' படத்தை இயக்கியவர் ராஜசிற்பி. அவர் தற்போது உருவாக்கிவரும் படம் 'டேக் இட் ஈஸி ஊர்வசி'.

படத்தின் தலைப்பே ஒரு பாடலின் வரிதான். அதனால் படத்திலும் ஹிட்டான பாடல்கள் அமையவேண்டும் என்பது ராஜசிற்பியின் ஆசை. இசையமைப்பாளர் சௌந்தர்யனிடமும், பாடலாசிரியர் கவிஞர் வைரமுத்துவிடமும் தனது ஆசையைச் சொன்னார் ராஜசிற்பி.

விரும்பியபடி வெளுத்து வாங்கியிருக்கிறார் வைரமுத்து. படத்தின் ஐந்து பாடல்கள் ஆரம்பமாகும் வரிகளைக் கீழே தருகிறோம்.

"ஜொள்ளு மன்னர்களின் சங்கமடா
நான் அதில் ஆயுள் மெம்பரடா.
...ஊட்டியில் பல மலருண்டு.
கலருண்டு. நம்ம ஊட்டியில் ஒரு
சுகமுண்டு. சுவையுண்டு....
(பாடியது சாகுல் ஹமீது குழுவினர்)

"இதயத்தில் இருப்பவனே
என்னைவிட்டுப் போவதென்ன
நதியை வெறுத்துவிட்டு மீன் மட்டும்
செல்வதென்ன?"
(உன்னிமேனன்-சொர்ணலதா)

"மஜா வேணுமா மாமா
மஜா வேணுமா மாமா
நான் உனக்கேதான்...உனக்கேதான்"
(சுபா-சொர்ணலதா)

"தொட வேண்டும் காற்றே தொடவேண்டும்
படவேண்டும் அதில் ஈரம் படவேண்டும்."
(எஸ்.பி.பி.ஜானகி)

"ஊர்வசி அழகே உனை மறவேன்
உயிர் பிரிகையிலும் உனை பிரியேன்"
(மனோ-சித்ரா)

வித்தியாசமாக இசை அமைத்திருக்கிறாராம் சௌந்தர்யன்

## ரஞ்சிதாவின் தா...ராளம்!

பாட்டு வாத்தியார் படத்தில் ரஞ்சிதா கதாநாயகி. படம் எடுத்த தயாரிப்பாளருக்கு திடீரென்று கையைக் கடித்திருக்கிறது. அதாவது பணப்பிரச்சனை. உடனே ரஞ்சிதா தனது மீதி சம்பளத்தை கேட்டு நச்சரிக்காமல் தாராளமாக விட்டுக்கொடுத்திருக்கிறார். படம் விற்பனையாகி லாபம் கைக்கு வந்ததும் பணத்தைக் கொடுத்தால் போதும் என்றுவிட்டாராம் ரஞ்சிதா. தயாரிப்பாளர் புல்லரித்துப் போயிருக்கிறார்.

## பிரபுவின் படங்கள்

பிரபு தற்போது நடித்துவரும் படங்கள், 'புரொபசர்', 'கட்டுமரக்காரன்', 'பசும்பொன்', 'பெரிய குடும்பம்'. கட்டுமரக்காரன் படத்தை இயக்கியுள்ள பி.வாசு புதிய படம் ஒன்றுக்கும் பிரபுவை ஒப்பந்தம் செய்து வைத்திருக்கிறார்.

ரஞ்சிதா-பிரபு-வினிதா
படம்-பெரிய குடும்பம்

## ஷர்மிலி சமாளித்தது எப்படி?

கவுண்டமணிக்கும் ஷர்மிலிக்கும் இடையே நல்லுறவில் ஏற்பட்ட இடைவெளி குறைந்துவருகிறதாம்.

ஷர்மிலி சமாதானத் தூதுவிட்டும் கோபமாக இருந்தார் கவுண்டமணி. ஷர்மிலி என்ன செய்தாரோ தெரியவில்லை தற்போது கவுண்டமணி கூலாகிவிட்டார். விரைவில் இருவரும் ஜோடியாக நடிக்கப் போவதாகவும் தகவல்.

## சத்யராஜ் பாடுவாரா?

வில்லனாக நடித்து கதாநாயகனாக உயர்ந்து இப்போது இயக்குநராக மாறியுள்ள சத்யராஜ் சொந்தக்குரலில் பாடுவாரா? நிருபரின் கேள்விக்கு சத்யராஜ் சொன்ன பதில்: "என்ன தலைவா கிண்டலா? நாம பாடினா அதை யாரு கேட்பாங்க.. நமக்கு ஏதேது ஒத்து வருதோ அதுலதான் ஈடுபாடு காட்டணும். சொந்தக் குரலில் பாடுறது பத்தி எல்லைக்குமே நினைச்சுப் பார்த்ததில்லை" என்கிறார் சத்யராஜ்.

## தமிழாராய்ச்சி மாநாட்டில் சோழன்

எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்காக கரிகால் சோழன் பற்றிய குறுந் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டது. கரிகால் சோழனாக நடித்தவர் கார்த்திக்.

## ஷங்கரின் புதிய படம்

'காதலன்' படத்தைத் தொடர்ந்து 'விஜயசாந்தி' படத்தை இயக்குகிறார் ஷங்கர். விஜயசாந்தியின் மனேஜரான ஏ.எம்.ரத்தினம் தயாரிக்கும் இப்படம் தமிழ்-தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் தயாராகும்.



கரிஷ்மா கபூர்-சல்மான்கான்

## குரு குரு ஊட்டியில் சுகன்யா!

சுக்கி என்று செல்லமாக அழைக்கப்படும் சுகன்யா தமிழ் நாட்டில் குரு குரு ஊட்டியில் ஒரு பங்களா வாங்கியிருக்கிறார். அவரது பிரியமான அமைச்சர் வாங்கிக் கொடுத்தார் என்றும் காற்றுவாக்கில் ஒரு தகவல். சுற்றிலும் புல்வெளி, தோட்டம், நீச்சல் தடாகம் எல்லாம் உண்டு. விலை, நம்நாட்டு பெறுமதிப்படி ஒரு முப்பது இலட்சம் மட்டும்.



மிதுன் சக்கரவர்த்தி-கௌதமி
படம்-தீஸ்ரா கோன்





# கண்ணுக்கு மை அழகு



**இ**யற்கையிலேயே பெண்கள் அனைவரும் அழகியர் தாம். ஆனால் அந்த அழகைக் காப்பாற்றிக் கொள்வதும், மேம்படுத்திக் கொள்வதும் பெண்கள் கையில்தான் உள்ளது. எனவே பெண்களுக்கு மட்டுமே உரித்தான அழகுக் கலையில் சில குறிப்புகளை நினைவில் கொண்டு அதன்படி நடந்து கொண்டால் அழகைக் காப்பாற்றிக் கொள்ளவும், அதிகரித்துக் கொள்ளவும் முடியும்.

பார்ப்பவர் கண்களில் முதலில் படுவது முகம்தான். எனவேதான் பெண்கள் தங்கள் முக அழகைக் காப்பதில் பெரும் நேரத்தைச் செலவழிக்கிறார்கள். முகத்திற்கு அழகு தருவது கண்கள். எனவே முதலில் கண்களின் பாதுகாப்பைப் பார்ப்போம்.

கண்களை தினமும் மூன்று முறை குளிர்ந்த நீரில் கழுவி வரவேண்டும். ஏதேனும் காரணத்தால் கண்கள் சிவந்து காணப்பட்டால் அளவான சூடு உள்ள நீரில் கண்களை கழுவினால் போதுமானது. வாரத்திற்கு இருமுறை சுத்தமான விளக்கெண்ணை இரண்டு சொட்டு விட்டு வரலாம்.

கண்களுக்குக் களைப்பாக உணர்ந்தால் பஞ்சினில் ரோஸ் வோட்டரை நனைத்து கண்களின் மீது வைத்து, சிறிது நேரம் ஓய்வெடுக்கலாம். அதிகநேரம் கண்விழித்தல், தொலைக்காட்சி நீண்ட நேரம் பார்த்தல், சத்தான உணவு சாப்பிடாமை, நீண்ட நேரம் படித்தல் போன்றவை கண்களுக்குச் சோர்வைத் தரக்கூடியவை. கண்களைப் பாதுகாப்பது மட்டுமன்றி கண்களுக்குத் தேவையான சத்தான உணவுகளையும், சாப்பிடவேண்டும். ஒரேஞ்சு, கரட் போன்றவைகளை அடிக்கடி சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். காலையில் சூரிய ஒளியில் நின்று கண்களுக்கான பயிற்சிகள் செய்வதும் கண்களைப் பாதுகாக்கும் சிறந்த வழியாகும். குறைந்த ஒளியில் படிப்பது, ஓடும் வண்டியில் படிப்பது போன்றவை தவிர்க்கப் படல் வேண்டும்.

கண்களுக்கு மையிட்டு வந்தால் கண்களுக்குக் குளிர்ச்சியாய் இருக்கும். ஆனால், அந்தமை தரமானதாய் இருக்கவேண்டும். மற்றவர்கள் உபயோகித்த மையையோ, மை பென்சிலையோ உபயோகித்தல் தவறானது. இதனால் அலர்ஜி போன்ற ஒவ்வாமை ஏற்படக்கூடும். மற்றவர்களுக்கு உள்ள கண் நோய் வரக்கூடும்.

எனவே சத்தான உணவு, அளவான தூக்கம், தூய்மையான பழக்க வழக்கங்கள் இவைகள் மூலம் கண்களைப் பாதுகாத்து வருதல் நம் கைகளில்தான் உள்ளது.

# முகம் சிறக்க-பளபளக்க

## -சின்னச்சின்ன யோசனைகள்-



**வெ**றும் மஞ்சளைப் பூசிக் குளிக்காமல் மஞ்சளையும், வேப்பிலையையும் நன்கு அரைத்து முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவி விட வேண்டும். இதனால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறைந்து விடுவதுடன் முகப் பருக்கள் வராமல் இருக்கும்.


முகத்தைச் சுத்தமாகக் கழுவித் துடைத்த பின் பாலாடையுடன் கூடிய கட்டித் தயிரை முகத்தில் பூசி 15 நிமிடத்திற்குப் பின் கழுவ வேண்டும். இதனால் முகச் சருமம் மென்மையாக இருக்கும்.

அதிகம் எண்ணெய் பசையுள்ள முகச் சருமம் கொண்டவர்கள் தினமும் எலுமிச்சை பழச்சாற்றை முகத்தில் தடவி பத்து நிமிடம் கழித்துக் கழுவ வேண்டும். பயித்தம் பருப்பு மாவைக் கொண்டு முகம் கழுவி வந்தாலும் முகத்தில் கரும்புள்ளிகளும் மறைந்து மென்மையாக மாறும்.


வறண்ட சருமம் கொண்டவர்கள் தேனைத் தடவி அரைமணி நேரம் ஊறவிட்டு, பிறகு குளிர்ந்த நீரால் முகம் கழுவிவர வேண்டும். கூடியவரை அடிக்கடி சோப்பு தேய்த்து முகம் கழுவுவதைத் தவிர்க்க வேண்டும்.

# நீங்களும் தைக்கலாம் எஸ்-எஸ்

## 5 வயதுப் பெண் பிள்ளைக்கான அழகிய சட்டை





படம்.1.





படம்.2.






படம்.3.




படம்.4.

**வெட்டும் முறைகள்:**

**மேற்சட்டையினை வெட்டும்முறை:**

மேற்குறிப்பிட்ட அளவிலான 2 துணியினை எடுத்து (படம் 1இன்படி) A,B,C,D எனக் குறித்துக் கொள்ளவும். குறித்த அப்பகுதியினை சமனாக மடிக்கவும். Aயிலிருந்து 3 அங்குலம் உள்நோக்கி அளந்து Eஎனக் குறிக்கவும். Eயிலிருந்து 3 அங்குலம் உள் நோக்கி அளந்து Gஎனக் குறிக்குக. Gயிலிருந்து 1 1/2 அங்குல வளைவில் அரைவட்ட வடிவில் வெட்டவும். (முன்பக்கத்திற்கு மட்டும்) பின்பக்கத்திற்கு 1/2 அங்குல பதிவில் 1 1/2 அங்குல விட்டத்தில் வெட்டவும். இந்த அரைவட்டப் பகுதியே கழுத்துப் பகுதியாகும். தோள் மூட்டுப் பகுதியை அரை அங்குலம் சரித்து வெட்டவும். Aயிலிருந்து கீழ்நோக்கி 4 அங்குலம் கைப்பகுதியை வெட்டவும். படத்தில் காட்டப்பட்ட A,E,F பகுதியை கவனத்தில் கொண்டபின்னர் வெட்டவும். F,C பகுதியை சிறிது சரிவாக வெட்டவும். சட்டையின் நாரிப் பகுதியை சிறிது வளைவாக வெட்டவும்.

**சட்டையுடன் பொருத்தவேண்டிய பாவாடையினை வெட்டும் முறை:**

1 1/2 மீற்றர் அளவிலான துணியினை எடுத்து சரிசமனாக மடித்துக்கொள்ளவும். மடித்த பகுதியினை படம் 2ல் காட்டியபடி மடிக்கவும். மடித்த அப் பகுதியில் பிள்ளையின் நாரியை அளந்து நான்காகப் பிரித்து அதற்குரிய அளவான இடத்தில் வைக்கவும். உதாரணமாக பிள்ளையின் நாரி 24 அங்குலமாயின் நான்காகப் பிரிக்கும்போது 6 அங்குலமாகும். அந்த ஆறு அங்குலத்தை அதற்களவான இடத்தில் அடையாளமிட்டுக்கொள்ளவும். அடையாளமிடப்பட்ட பகுதியில் இருந்து கீழ்நோக்கி 12 அங்குலம் நீளம் எடுத்து குடை வெட்டு வடிவில் சரியாக ஒழுங்காக வரைந்து அதன்பின்னர் வெட்டவும்.




படம்.5.

**எடுக்கப்படவேண்டிய அளவுகள்:**

சட்டையின் மார்புச் சுற்றளவு 15+15 அங்குலம்
சட்டையின் நீளம் 12 அங்குலம்
கையின் அகலம் 8 1/2+ 8 1/2 அங்குலம்
கையின் நீளம் 10 அங்குலம்
கீழ் பாவாடையின் அகலம் 3/4+3/4 மீற்றர்

**கையினை வெட்டும் முறை:**

கைக்கென மேலே குறிப்பிட்ட 17 அங்குல அளவிலான 2 துணியினை எடுத்து மடிக்கவும். மடித்த பகுதிகளில் A,B,C,D எனக் குறிக்குக. படம் 4இனை கவனத்திற் கொள்ளவும். கீழ்ப்பகுதியில் Cயிலிருந்து உள்நோக்கி ஒரு அங்குலம் அளந்து Fஎனவும் Aயிலிருந்து கீழ்நோக்கி 4 அங்குலம் அளந்து Eஎனவும் குறிக்குக. A,E,B பகுதியை வளைவுப் படத்துடன் ஒப்பிட்டு வெட்டவும். கையின் கீழ்ப்பகுதிக்கு சிறுசிறு சுருக்கிடவும். சுருக்கிட்ட பகுதியுடன் ஒரு அங்குல அகலமான துணியினை இணைக்கவும்.

**சட்டையின் தோற்றத்தை அழகுபடுத்தவேண்டிய பகுதி:**

15 அங்குல அகலமும் 6 அங்குல நீளமுமான ஒரு துணியினை எடுத்துக் கொண்டு சட்டையின் முன்பக்கம் வெட்டிய தைக்கொண்டு வெட்டவும். படம் 5ஐ கவனத்திற்கொள்ளவும்.

**பாவாடையின் கீழ்ப் பகுதியில் பொருத்தி அழகுபடுத்தவேண்டிய பகுதி-**

6 அங்குல அகலமும் 3 அங்குல நீளமுமான சதுரத் துணியினை எடுத்து அரைவட்டவடிவில் படம் 3ன்படி வெட்டவும். இவ்வாறு 18 அரை வட்டத் துண்டுகளை வெட்டி, அவற்றின் கீழ் ஓரங்களிற்கு சிறு லேஸ் வைத்து தைத்துக் கொள்ளவும். மேற்பகுதிக்கு சிறு சிறு சுருக்கிட்டு பாவாடையுடன் இணைக்கவும். விரும்பியபடி நீங்கள் அழகுபடுத்தலாம்.

குறிப்பு- சட்டையினை அழகுபடுத்தப்பட வேண்டிய பகுதிகளுக்கு தனிவர்ணத் துணி நன்று. நாரிப்பகுதி இறுக்கமாக இருப்பதற்கு எலாஸ்ரிக் வைத்து தைக்கலாம்.

# குழந்தை நலன்



**கு**ழந்தை பத்தாவது மாதத்தில் அடி எடுத்து வைக்க வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால், சில குழந்தைகள் பத்தாவது மாதத்தில் எழுந்து நடக்க முடியாமல் இருப்பதும் உண்டு. குழந்தையைச் சிரமப்படுத்தி நடக்க வைத்துப் பழக்கக்கூடாது. இதனால் குழந்தையின் கால் எலும்புகள் வளைந்து விடும். அதுவாகவே எழுந்து நடக்கும் வரையில் தாய் சற்றுப் பொறுமையாக இருக்கவேண்டும். சத்தான உணவுகளைக் கொடுக்க வேண்டும். குழந்தைகளைச் சிரமப்படுத்தக் கூடாது.

# சிலேடை கேளுங்கோ — இரண்டு கழுதைகள்

ஒரு ஜமீந்தாரிடம் விகடகவி ஒருவர் இருந்தார். அவ்வப்போது விகட கவியை மட்டம் தட்ட முயன்று தானே மாட்டிக் கொள்வார் ஜமீந்தார்.

ஒருநாள், ஜமீந்தார் அறையில் அவர் உடுத்திக் களைந்த ஆடைகளும், அவர் மகன் உடுத்திக் களைந்த ஆடைகளும் பெரிய பொதியாகக் கட்டி ஒரு ஓரமாக வைக்கப்பட்டிருந்தது.

ஜமீந்தார் அந்த மூட்டையை அதற்குரிய அறையில் கொண்டு போய்ப் போடுமாறு விகடகவியிடம் கூற, அவரும் அந்த மூட்டையைத் தன் முதுகில் தூக்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தார்.

அதைப் பார்த்து ஜமீந்தார் தன் மகனிடம், "இப்போது விகடகவி ஒரு கழுதை பொதியைச் சுமக்கிறார் இல்லையா?" என்று கேலியாகச் சொன்னார்.




அதற்கு விகடகவி, "இல்லை இல்லை... இரண்டு கழுதைங்க பொதியைச் சுமக்கிறேன்" என்று ஜமீந்தாரையும் அவர் மகனையும் பார்த்துக்கொண்டே நகர்ந்து விட்டார்.

# முரசின் பரிசு

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

**முரசின் பரிசு**
**கூப்பன் இல 23**
**உண்மை-நேர்மை-வெளிப்படைத்தன்மை**

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

# சமைப்போம் சுவைப்போம்

## தொகுத்துத் தருவது-சுகந்தினி

### கரட் கேஸ்ரோல்

**தேவையானவை:**

வேகவைத்த சாதம்-2 கப்
பால்- 1 கப்
கரட் (துருவியது)-200 கிராம்
முட்டை-2
பாண்தூள்-1/2 கப்
சாதிக்காய்-சிறிது
வெண்ணெய்- 2 தேக்கரண்டி
பாதாம் பருப்பு-சிறிது
சீனி-1 கப்

**செய்முறை:**

பாலை நன்றாகக் காய்ச்சி அத்துடன் வேகவைத்த சாதத்தைப் போட்டுக் கிண்ட வேண்டும். பால் சிறிது சுண்டியவுடன் கரட் துருவலைச் சேர்த்துக் கிளற வேண்டும். கரட் வெந்ததும் அடித்து வைத்த முட்டை, சீனி, வெண்ணெய், சாதிக்காய் ஆகியவற்றையும் சேர்த்துக் கிண்டி இறக்க வேண்டும். அடிபிடித்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

வெண்ணெய் தடவிய தட்டில், மேலே உள்ள கலவையைக் கொட்டி நன்றாகப் பரப்பி அதன்மீது பாண் தூளைத் தூவ வேண்டும். பாதாம் பருப்பை மேற்பரப்பில் வைத்து அழகுபடுத்தி பிரிட்ஜில் வைத்து குளிர்ந்தவுடன் பரிமாறலாம்.

**பரிசுக்குரியவர்களில் ஒருவர்**

எம்.சி.மன்சூரா
'மன்சூரா மன்சில்',
தண்ணீர் தாங்கி வீதி,
புதிய காத்தான்குடி.

தங்கநகைப் பரிசுத்திட்டத்தில் ஆறுதல் பரிசு பெற்றவர்களில் இவரும் ஒருவர். இவரது பெயரும் புகைப்படமும் பேனா நண்பர் பகுதியில் தவறுதலாக இடம்பெற்றதற்காக வருந்துகிறோம்.

# மனைவி வந்த நேரம்

**தெ**லுங்கு தேசம் கட்சி சமீபத்திய ஆந்திர மாநிலத் தேர்தலில் அமோக வெற்றியை அறுவடை செய்திருக்கிறது.

72 வயதான என்.டி.ராமராவ் திரையில் மட்டுமல்ல நிஜத்திலும் தனது எதிரிகளை அடித்து வீழ்த்திவிட்டார்.

இதற்கெல்லாம் தனது புதிய மனைவி பார்வதி வந்த நேரம்தான் காரணம் என்று நம்புகிறார் ராமராவ்.



தேர்தல் பிரசார நேரத்தில், ராமராவுக்கு வயதாகிவிட்டது. நோயாளியாக இருக்கிறார் என்று காங்கிரஸ் கட்சி கூறியது.

என்.டி.ராமராவ் என்ன செய்தார் தெரியுமா? தனது இளம் மனைவி பார்வதியை பொதுக் கூட்டங்களுக்கு கையோடு அழைத்துச் சென்றார்.

"நான் திடகாத்திரமாக, ஆண்மையோடு இருக்கிறேன் என்பதற்கு இவள்தான் சாட்சி" என்று சொன்னார் பாருங்கள்- கூட்டத்தினரே கிளு கிளுத்துவிட்டார்களாம்.

ஆட்சியைப் பிடித்துவிட்ட ராமராவ் அப்பாவாக தயாராகி வருகிறார். ஏற்கனவே 10 பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனால் ராமராவ் என்ன சொல்லுகிறார் தெரியுமோ? "என் புதிய மனைவி மூலம் பிறக்கும் குழந்தை உலகையே ஆளும்" என்கிறார். ராமராவ் கில்லாடிதான். கில்லாடித்தனம் ஆட்சிக் கட்டிலில் மட்டுமல்ல..!

# தயாராகும் அழகி



இந்திய அழகுராணிகள் இருவரை சென்ற ஆண்டு உலகம் வியந்தது. சுஷ்மிதா சென், ஐஸ்வர்யா ராய் வரிசையில் மூன்றாவதாக இடம்பிடிக்கும் ஆசையில் தயாராகிவரும் மற்றொரு இந்திய அழகி சீதல்.


20 வயதான சீதலுக்கு அழகுராணியாக வரத்தக்க உடற்கட்டு கச்சிதமாக அமைந்திருக்கிறது.

நீச்சல் உடையே அணிந்து பழக்கமில்லை என்று நெளிந்துகொண்டிருந்த சீதல் சென்ற ஆண்டு- 11.9.94 அன்று ஸ்பெயினில் நடந்த அழகுராணிப் போட்டியில் வெட்கப்படவே இல்லை. நீச்சல் உடை உட்பட பல்வேறு கவர்ச்சி உடைகளில் காந்தப் பார்வையோடு வந்து போஸ் கொடுத்தார்.

வெற்றிக்கனி கிடைக்காவிட்டாலும் தொடர்ந்து தளராமல் போராடப் போகிறார் சீதல்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தேன் கிண்ணம்



## புது வரவும் வசந்தமும்

'95'
'94த்தாயின்
முந்தானையிலிருந்து
முடிச்சவிழ்த்து
மூச்சுமுட்ட
ஓடிவந்த
உன் முகத்தை
பார்த்து
கோடி
முகாரிமுகங்கள்
புது வாழ்க்கைக்காய்
முகவரி எழுதி
உன்
அழகான
முன்னுரைக்காய்
புத்தகங்களை
திறந்தே
வைத்திருக்கிறார்கள்.

நீயும்
உன்
பழைய ஸ்நேகங்களை
போல
எல்லைக்காட்டி
போலியாய், இருக்கும்
நம்பிக்கை
வார்ப்பின் வார்த்தைகளையும்
வடித்தெடுத்து
போய்விடாதே.

இந்த
நிமிடத்தின்
பிரசவப்பிஞ்சே
உன்
பிறப்பில்
பூமகளின்
இதழில்
புன்னகை
இழையோடட்டும்;
காரிருளை
கட்டியணைத்து
பேய்விரதம்
பூண்ட
பிசாசுகள் அதில்
கண் மூடட்டும்.

வாழ்க்கை
இனிமேலாவது
இனிக்கட்டும்.
உன்
வசந்த
வரவினைக்கண்டு
வானம்
மலர்தூவி
வாழ்த்திடட்டும்.
யாவரும் நலமாய்
வாழ்க என்று!

'அல்க்கஹோ'லுக்குள்
அமிலத்தை கரைத்து
தொண்டைக்குள்
அரங்கேற்றிய
அந்த நாட்களும்
அந்தகார நினைவுகளும்
இந்த
நிமிஷத்தில்
அமுதத்தில்
தேன் சிந்தி
அழகழகாய்
புது விதிகளை
கவிகொண்டு
புனையட்டும்.

தற்காலிகத்தை
தரைதட்டிவிட்டு
நிரந்தரத்தை
உன்
நிழலாய்க்கொண்டு
ஊர்கோலம்
வா
அப்போதுதான்
மரத்துப்போன
மனுஷமனங்கள்
மீண்டும்
புதுத்துளிர்களை
ஜீவிதத்தில்
மீளக்குடியமர்த்தும்

கிண்ணியா சபருள்ளா.

## அணைப்பு!

பொழில் வழங்க மலரோடு கனியை! சாரல்
பூத்தூவ நீர்மணிகள் புரண்டு வீழ!
எழில் குலுங்க; வானுலவ மஞ்சு! கானில்,
ஏகாந்தம் குடிகொள்ள! இனிய வேளை,
நெளிகூந்தல் வஞ்சியுடன் ஆளன் ஆங்கே,
நிகழ்த்தியதோர் சுகப்பாடம் நினைவைக்கிள்ள
களிகொண்டு திளைத்திட்ட கன்னிமாதோ,
காதினிலே உரைபகர்ந்தான்! காளை கேட்டான்

"அத்தானே என்னிதய மஞ்சம் மீதில்,
அனுதினமும் துயில் கொள்ளும் ஆசையாலே,
பித்தாகி உங்களுக்கே என்னைத் தந்தேன்
பிரியமுடன் சுவைகாண்பீர்" என்றாள்! காளை-
முத்தங்கள் பரிமாறிக்கொண்ட பேறாய்,
முகம் சிவக்க வியர்வை மணி அரும்ப! மீண்டும்
"அத்தானே!" என்றவனை அணைத்துக்கொண்டாள்!
அழகிதழை அத்தானும் நனைத்துக் கொண்டான்!

அ.கௌரிதாசன்- ஆலங்கேணி கிழக்கு.

## ஊமை நோவுகள்!

வெண் நிலவுக்குள்
நிழல் மாதிரி
என்னுள் நீ-
புதைந்து கொண்டாய்..!

•

உன் விழிகளின்
ஸ்பரிசங்களின்
நினைவுகள் இன்னும்-
சமாதி ஆகவில்லை.

•

நாம்-
சந்திக்கும் அந்த,
சுவரடி இன்னும்-
இறந்து போகவில்லை!

•

உன்னுள்
வேர்பிடித்திருந்த
என்-
பருவ உயிர் அணுக்களில்-
எச்.ஐ.வி.கிருமிகள்
....!

•



நான் செத்து
என் நெஞ்சம்
வெடித்து விடும்.
உள்ளிருக்கும் நீயும்-
சிதறிவிடுவாய் என்பதால்
நான் இன்னும்
சாகவில்லை!

•

நீ இல்லாது
நீண்டுபோன இந்த
ராத்திரி வினாடிகள்
யுகங்களாக..!

•

ஸ்னேகிதி-!
உன் கூந்தல் முடி
ஒன்றாவது,
உன் தாவணித் துண்டாவது
எனக்காக வாழ்ந்து
செத்துப்போகும்
என்பதில்-
இன்னும் எனக்கு
நம்பிக்கை உண்டு!

•

உன்-
மடியில் சாய்ந்த
அந்த நாட்களில்
நான்-
விட்ட மூச்சுக்கள்
உன் சமாதிவரை
நீண்டு போயின..!

மு-அ தஸ்லீப்
அக்கரைப்பற்று-01.

## வாழை இலைக் கவிதை

அனேகமாய்
உறங்கியிருப்பர் சனங்கள்.

•

நீ-கூடத்தான்
யாரோ ஒருவனின் கனவுகளுடன்
மல்லாந்து படுத்திருப்பாய்.

•

நீ-வந்து நிற்கும்
தாமரைக் குளமும்
மாமர நிழலும்
எப்பவும் என்னை
வெட்டி எறியும்.

•

இந்த எட்டு மாதங்களில்
நான்-வாழ்ந்ததைவிட,
இறந்தது அதிகம்.

•

உன் மனசில்கூட-
அதிர்விருக்கவாம்
என்னைக்கொன்ற
உன் புறா விழிகளால்
அழுதிருக்கவாம்.

•

என் சிவப்புத் தாமரையே!
ஒரு வாழை இலையாவது
கிடைக்கவில்லையா
ஒரு கடிதம் எழுதி
என் முகத்தில் எறிய..?

ஒட்டமாவடி- அறபாத்.

## விடைபெற்ற நவரத்திலோவா



'டென்னிஸ் உலக ராணி' என்று அழைக்கப்பட்ட நவரத்திலோவா சென்ற ஆண்டுடன் ஓய்வுபெற்றுவிட்டார்.
1649 ஒற்றையர் போட்டிகளில் விளையாடிய நவரத்திலோவா 1438 போட்டிகளில் வெற்றிபெற்று டென்னிஸ் இரசிகர்களை தன்பக்கம் இழுத்தவர்.
20 ஆண்டுகள் ஓயாமல் விளையாடிய நவரத்திலோவா 381 வாரங்கள் முதல் இடத்தில் இருந்துள்ளார்.
அது அசாத்திய சாதனைதான்.
51 டென்னிஸ் வீராங்கனைகளை தோல்வியை தழுவச் செய்திருக்கிறார்.
விம்பிள்டன் போட்டிகளில் 9 தடவை வென்றுள்ளார். 12 தடவை சிகாகோ போட்டிகளில் வென்றிருக்கிறார்.
நவரத்திலோவாவின் அசத்தலான திறமையை வியந்த டென்னிஸ் உலகம் 1992ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ம் திகதியை நவரத்திலோவா தினமாக கொண்டாடியது.
18 ஒற்றையர் கிராண்ட்சிலாம் பட்டத்தையும், 37 இரட்டையர் கிராண்ட்சிலாம் பட்டத்தையும் நவரத்திலோவா தன் கரத்தில் எடுத்துக்கொண்டார்.
ஆண் டென்னிஸ் வீரரான ஜிம்மி கானருடன் நவரத்திலோவா ஒருமுறை மோதினார். ஜிம்மி கானர் மண்கவ்வினார். 'பெண் சிங்கம்' என்று புகழ் கிடைத்தது நவரத்திலோவாவுக்கு.
நவரத்திலோவா சம்பாதித்தது கோடி கோடியாக! ஆனால் அவரிடம் இப்போது மிஞ்சியுள்ள சொத்து மதிப்பு எவ்வளவு தெரியுமா? ஆக, 65 கோடி ரூபாய்.

## அந்த 7 வித்தியாசங்கள்?



மேலே உள்ள இரண்டு படங்களிலும் ஏழு வித்தியாசங்கள் உள்ளன. ஆகக் கூடியது 5 நிமிடத்திற்குள் கண்டுபிடியுங்கள். முடியாதவர்களும், விடையை சரிபார்க்க விரும்புபவர்களும் 18ம் பக்கத்திற்கு செல்லுங்கள்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(08.01.95 முதல் 14.01.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

தனு - சூரியன், புதன்
கும்பம் - சனி
மேடம் - கேது
சிம்மம் - செவ்வாய்
துலாம் - இராகு
விருட்சிகம் - வெள்ளி, வியாழன்

சந்திரன்-கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் சகாயம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- | அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், மனக்குறை. | காலை 7 மணி |
| புதன்- | செய்தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், பொருள் வரவு. | காலை 7 மணி |
| வெள்ளி- | செய்தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| சனி- | காரியத்தடை, மனக் கவலை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பொருள் வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும். | காலை 6 மணி |
| புதன்- | உறவினர் பகை, கடன் தொல்லை. | பி.பகல் 3 மணி |
| வியாழன்- | அந்நியர் சகாயம், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| சனி- | கடன் தொல்லை, மனப்பயம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்:

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | தொழில் விருத்தி, பொருள் வரவு. | மு.பகல் 11 மணி |
| புதன்- | வெளியிடப் பிரயாணம், உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| வியாழன்- | பொருள் வரவு, கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, மனக் குறை நீங்கும். | பி.பகல் 1 மணி |
| சனி- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், பொருள் வரவு குன்றும். | காலை 6 மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.பகல். 1 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, முன்னேற்றம். | காலை 7 மணி |
| புதன்- | அந்நியர் பகை, மனக்கவலை. | பகல் 12 மணி |
| வியாழன்- | பொருள் நட்டம், கடன் தொல்லை. | காலை 7 மணி |
| வெள்ளி- | வீண் தொல்லை, கோபமிகுதி. | காலை 9 மணி |
| சனி- | புதிய முயற்சி, கடன்படல். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, முன்னேற்றம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | வெளியிட பயணம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- | உயர்ந்த வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, காரியசித்தி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | தொழில் மந்தம், மனக் கவலை. | காலை 7 மணி |
| சனி- | காரியத்தடை, பொருள் இழப்பு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- | பொருள் நட்டம், மனக் கவலை. | காலை 6 மணி |
| செவ்வாய்- | இனசன விரோதம், வீண் மனஸ்தாபம். | பி.ப. 1 மணி |
| புதன்- | செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, மனக் கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| சனி- | தனலாபம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 7

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முன்னேற்றம். | காலை 6 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | தெய்வானுகூலம், பாராட்டு. | காலை 7 மணி |
| புதன்- | உயர்ந்தநிலை, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | மனக்குறை நீங்கும், செய்தொழில் விருத்தி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | காரியானுகூலம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| சனி- | புதிய முயற்சி, பணத்தட்டுப்பாடு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம் -8

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் பகை, மனக் கவலை. | காலை 7 மணி |
| திங்கள்- | பயனற்ற செயல், வீண் பிரயாணம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | துயர் அதிகம், பொருள் விரயம். | பி.ப. 1 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | காரியசித்தி, கடன் தொல்லை. | காலை 6 மணி |
| வெள்ளி- | உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- | தொழில் நிலை முன்னேற்றம், கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-9

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, பயனுள்ள செயல். | காலை 9 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | விண் குறை நீங்கும், பொருள் நஷ்டம். | காலை 8 மணி |
| புதன்- | தெய்வானுகூலம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- | அந்நியர் பகை, மனச் சஞ்சலம். | பி.ப. 2 மணி |
| சனி- | துயர் நீங்கும், பொருள் வரவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -7

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- | பயனற்ற செயல், கௌரவக் கேடு. | காலை 6 மணி |
| செவ்வாய்- | வீண் மனக் கவலை, செலவு. | பி.ப. 2 மணி |
| புதன்- | தனலாபம், காரியானுகூலம். | காலை 6 மணி |
| வியாழன்- | தொழில் விருத்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| சனி- | பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் பலிதம், காரியசித்தி. | காலை 9 மணி |
| திங்கள்- | துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | உறவினர்பகை, மனக் கவலை. | காலை 8 மணி |
| புதன்- | கௌரவம், செய்தொழில் விருத்தி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும். | காலை 6 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- | காரியசித்தி, பொருள் வரவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 6

### கன்னி:


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, எதிர்பார்த்த நன்மை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | மனக்குறை நீங்கும், செய்தொழில் விருத்தி. | காலை 6 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, காரியத்தடை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | பகமை நீங்கும், சுபகாரிய மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| சனி- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 4

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





## புத்தாண்டே வருக!

புத்தாண்டே! புத்தாண்டே! வருக! வருக!
புவியெங்கும் புதுப் பொலிவைத் தருக! தருக!
தித்திக்கும் தேன்பாகாய் வருக! வருக!
தெவிட்டாத நல்லமுதைத் தருக! தருக!

இத்தரையில் மாந்தரெல்லாம் எல்லாம் பெற்று
இன்பமுடன் வாழ்ந்திடவே வருக! வருக!
எத்திக்கும் புகழ் மணக்க வருக! வருக!
எல்லோர்க்கும் நிறைவினையே தருக! தருக!

இல்லாமை இல்லாமையென ஆக்க வருக!
எல்லோர்க்கும் எல்லாமே தருக! தருக!
கல்லாமை இல்லாமை ஆக்க வருக!
கண்ணிரண்டை எல்லோர்க்கும் தருக! தருக!

உள்ளத்தால் பொய்யாது ஒழுகுகின்ற
உயர் குணத்தை உவந்தளிக்க வருக! வருக!
தள்ளாமை தளராமை இல்லாதாக்கி
தளர்வறியா மனத்தினையே தருக! தருக!

ஸலீம் முஹம்மத் ஸாதாத்
ஹொறவபொதானை.

"அச்சமில்லை அமுங்குத லில்லை,
நடுங்குத லில்லை நாணுத லில்லை,
பாவ மில்லை பதுங்குத லில்லை,
ஏது நேரினும் இடர்ப்பட மாட்டோம்;
அண்டஞ் சிதறினால் அஞ்ச மாட்டோம்."
-சுப்பிரமணிய பாரதியார்-

### பாப்பா முரசு சிறுகதை

# முனிவர் சொன்ன நீதி

ஒரு காலத்தில் நீலகண்டர் என்ற முனிவர் வாழ்ந்தார். அரசர்களாலும், அறிஞர்களாலும் அவர் பெரிதும் போற்றப் பட்டார். அவருடைய அறிவுரைகளை அனைவரும் வேதவாக்காக நினைத்து ஏற்பார்கள்.

ஒருமுறை அந்நாட்டு மன்னர் கலைவாணர், முனிவரைச் சந்தித்துப் பேச அவரது ஆசிரமத்திற்கு வந்தார்.

"மகா சிரேஷ்டரே! எனக்கு இந்த ராஜ வாழ்க்கை வெறுத்துவிட்டது. நான் நாட்டு மக்களுக்காக எவ்வளவோ நன்மைகளைச் செய்கிறேன். ஆனாலும் அவர்கள் என்னை ஏதாவது ஒரு விதத்தில் குறை கூறிக் கொண்டே இருக்கிறார்கள். நான் என் மனைவி மக்களிடம் நிறைய அன்பு செலுத்துகிறேன். ஆனால், அவர்களும் என்னிடம் ஏதாவது குறை கண்டு என்னை ஏசுகிறார்கள். அண்டை நாட்டு மன்னர்களுடன் நட்புறவு கொண்டாடவே நினைக்கிறேன். ஆனால் அவர்களோ அது தெரிந்தும், என்னை வளைத்துப் பிடிக்கும் திட்டத்திலேயே இருக்கிறார்கள். நான் எந்தப் பக்கம் திரும்பினாலும், எனக்குச் சோதனையும், வேதனையுந்தான் மிஞ்சுகிறது. ஆகவே, நான் இத்தொல்லை கொடுக்கும் வாழ்க்கையை விட்டு விட்டு நிம்மதியான துறவு வாழ்க்கையை மேற்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்" என்றார் மன்னர் கலைவாணர்.

இவற்றைக் கேட்ட முனிவர் பெருமூச் சொன்றை விட்டு, கலைவாணரைப் பார்த்தார்.


"மன்னா! நான் உனக்கு ஒரு கதை சொல்லுகிறேன். அதைக் கேட்ட பிறகு நீ ஒரு முடிவுக்கு வா" என்று சொல்லத் தொடங்கினார்:

முன்னொரு காலத்தில் ஒரு ஊரில் நீதி தவறாத நீதிபதி ஒருவன் இருந்தான். அவன் ஒருநாள் இறந்துவிட்டான். அதன் பிறகு அவன் விதிதேவனிடம் கொண்டுபோய் நிறுத்தப்பட்டான். அவனை ஏற இங்கப் பார்த்த விதிதேவன், "இவன் நீதி நெறி தவறாத நீதிபதியாகவே பூவுலகில் வாழ்ந்திருக்கிறான். ஆனால் ஒரு சமயம் ஒரு வழக்கில் சில சாட்சிகளை நம்பி ஒரு நிரபராதிக்கு ஒருவாரம் சிறைத் தண்டனை அளித்துவிட்டான். ஆகையால் இவன் மீண்டும் மானிட ஜென்மம் எடுத்து, ஒரு வாரம் சிறைத் தண்டனை அனுபவிக்கட்டும்," என்று தீர்ப்புக் கூறினான்.

அதைக்கேட்ட அந்த நீதிபதி, "ஐயா விதிதேவரே! எனக்கு மறுபடி மானிடப் பிறவியைக் கொடுக்காதீர்கள். ஏதாவது ஒரு பிராணியாகப் படையுங்கள். சிறைத் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்கிறேன்" என்றான். "நீ எந்தப் பிறவி எடுத்தாலும், நீ அனுபவிக்க வேண்டிய தண்டனையிலிருந்து தப்பிக்கவே முடியாது" என்றான் விதிதேவன். "பிறவி எப்படி இருந்தாலும், சென்று சேரும் இடம் பெரிய இடமாக இருந்தால் தப்பித்து விடலாம். ஆகவே என்னை ஒரு ஜமீன்தாரின் வீட்டில் நாயாகப் பிறக்க வையுங்கள்," என்றான் நீதிபதி.

விதிதேவன், "உன் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன். ஆனால் நீ ஒருவார சிறைத் தண்டனையிலிருந்து தப்பவேமுடியாது," என்று அந்த நீதிபதியை பூலோகத்தில் ஒரு ஜமீன்தாரின் வீட்டில் நாயாகப் பிறக்க வைத்தான்.

அந்த ஜமீன்தாருக்குக் குழந்தையே இல்லை. ஆகவே, அந்த நாயைத் தன் குழந்தைபோல் நினைத்து வளர்த்து வந்தார். அது படுத்து உறங்கப் பட்டு மெத்தை, பால்சோறு உண்ண வெள்ளிக்கிண்ணம், கால்களுக்குத் தங்கக் கொலுசு, மாலை நேரத்தில் குதிரை வண்டியில் பொழுது போக்கு என்று அந்த நாய் ராஜபோக வாழ்க்கை வாழ்ந்து வந்தது.



ஒருநாள் ஜமீன்தாரின் ஆட்கள் அந்த நாயைக் குதிரை வண்டியில் அழைத்துக் கொண்டு உலாவுவதற்குச் சென்றார்கள். வண்டி ஒரு காட்டுப் பாதையில் சென்று கொண்டிருந்தபோது, ஒரு புதரில் இருந்து வெளிப்பட்ட ஒரு முயலைப் பார்த்துவிட்டது அந்த நாய். அவ்வளவுதான் அது குதிரை வண்டியிலிருந்து குதித்து முயலைத் துரத்திக்கொண்டு ஓடியது.

வண்டியில் இருந்த ஜமீன்தாரின் ஆட்கள் வண்டியை நிறுத்திவிட்டு, நாயைப் பிடிக்க அதன் பின்னே ஓடினார்கள். ஆனால் சிறிது நேரத்தில் நாய் கண்ணிலிருந்து மறைந்துவிட்டது. காடு முழுக்க அவர்கள் தேடியும் நாய் கிடைக்காததால், அவர்கள் ஜமீன்தாரிடம் வந்து விஷயத்தைச் சொன்னார்கள். அதன் மேல் உயிரையே வைத்திருந்த ஜமீன்தார், அந்த நாயை எப்படியாவது கண்டுபிடித்துக்கொண்டு வரும்படி பல பக்கங்களிலும் ஆட்களை அனுப்பினார்.

அதே சமயம், முயலைத் துரத்திக்கொண்டு ஓடிய நாய், முயலைக் காணாமல் ஏமாற்றம் அடைந்தது. பிறகு ஏதோ ஒரு பாதையில் சென்று வேறு ஊரை அடைந்தது. அப்பொழுது ஒரு வேட்டைக்காரன் அந்த நாயைப் பிடித்து அந்த ஊர்ப் பணக்காரன் ஒருவனிடம் அதை விற்றுவிட்டுப் போய்விட்டான்.

அந்த நாயின் தோற்றத்தைப் பார்த்த அந்தப் பணக்காரன், இது யாரோ ஒரு கோடீஸ்வரன் வீட்டு நாயாக இருக்க வேண்டும். யாராவது தேடி வந்தால் கொடுத்து விடலாம் என்று நினைத்து, அதை ஒரு அறையில் போட்டுப் பூட்டி வைத்தான்.

ஜமீன்தாரின் ஆட்கள் அந்த நாயைப் பற்றிப் பல இடங்களிலும் விசாரித்து, அதைத் தேடிக் கண்டுபிடிக்க ஒரு வாரம் ஆயிற்று. பிறகு அதை அழைத்துக்கொண்டு போய் ஜமீன்தாரிடம் சேர்த்தார்கள்.

"கதை இதுதான் மன்னா... ஒரு வார சிறைத் தண்டனையை அனுபவிப்பாய் என்று விதிதேவன் சொன்னான். அந்தத் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்காக நீதிபதியும் நாய்ப் பிறவி எடுத்தான். ஆனாலும் விதி அவனை விட்டதா? ஒரு பணக்காரனின் வீட்டு அறையில் ஒருவாரம் சிறை வைக்கப்பட்டான். இதைப்போல, நீ உன் அரச வாழ்க்கையைத் துறந்துவிட்டுத் துறவியானாலும் உன்னுடைய தலைவிதி உன்னை விட்டுப் போகாது.

"வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு மதி நுட்பத்தோடு தீர்வு காண வேண்டுமே தவிர, அதைக் கண்டு பயந்து பின்வாங்கக்கூடாது. இந்த நீதி உனக்கு மட்டுமல்ல, மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருமே கடைப்பிடிக்கக்கூடியது," என்று கூறினார் முனிவர்.

தனது மனக்குழப்பத்தை நீக்கித் தெளிவுபடுத்திய முனிவருக்கு நன்றி கூறி விடைபெற்றார் மன்னர் கலைவாணர்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 14.01.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 73
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 70

**பரிசுக்குரியவர்**
இ.வீரஸாகர்
இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி-திருகோணமலை.

**பாராட்டுக்குரியவர்கள்**
செல்வி.ஏ.எல்.பாத்திமா சக்கியா
தி/அந்நகார் மகளிர் ம.வி-மூதூர்.

அஷோக் ரஜீவ் குமார் கணநாதன்- கம்பளை.

கு.தவராஜா-பழுகாமம்-1.

ரஜீவ் தேவராஜன்-கல்கிசை.

எஃப்.ஜீஸன் ஜஸீம்-தெஹிவளை.

செல்வி.சிணோலக்சிக்கா செல்லத்துரை
விகாரமகாதேவி மகளிர் வித்தியாலயம்-கண்டி.

ம.புஸ்பேந்திரன்
நாமகள் வித்தியாலயம்-கல்குடா.

## விஞ்ஞான விளக்கங்கள்

1. **தயிரை நீண்ட நேரம் வைத்திருக்கையில் அது எப்படி புளிப்புச் சுவையுடையதாக மாறுகின்றது?**
- *நீண்ட நேரம் தயிரை வைக்கும்போது பக்றீரியாவின் தொழிற்பாடு அதிகரிப்பதன் காரணமாக பாலில் அடங்கியுள்ள இலற்றோசு வெல்லம் அமிலமாக மாறுவதனால் தயிர் புளிப்படைகிறது.*

2. **வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் பெரும்பாலான நோயாளிகளுக்கு 'சேலைன்' வழங்கப்படுகின்றதல்லவா? அது ஏன்?**
- *சக்தியை உடன் வழங்க சேலைன் வழங்கப்படுகின்றது. மருந்து கடத்தலுக்கு திறன்மிக்க ஊடகமாக இது அமைகின்றது.*

3. **வேளையுணவாக அப்பத்தை உண்ணும்போது கருப்பட்டித்துண்டுடன் உண்பதைவிட மீன் துண்டுடன் உண்பது போசணையடிப்படையில் மிகப் பொருத்தமானதாகும். அது ஏன்?**
- *அப்பம், கருப்பட்டி இரண்டும் காபோவைதரேற்றுக்களாகும். மீன் புரத உணவாகையால் மீனைச் சேர்க்கும்போது அது சமநிலை உணவாகிறது.*

எஸ்.ஐ.நிலாம்தீன்-கம்பிரிகஸ்வெவ.

## விடுகதைகளும் விடைகளும்

1. அண்ணன் சிலகாலம் வாழ்வான், தம்பி பல்லாண்டு வாழ்வான். யார் அவர்கள்?
2. பார்த்தால் பச்சைக்கிளி, பழுத்தால் மஞ்சள் கிளி, வெட்டினால் சிவப்புக் கிளி. அது என்ன?
3. உடலில்லாமல் ஓடுவான். சிறகில்லாமல் பறப்பான். உயிரில்லாமல் வாழ்வான். அவன் யார்?
4. தவறு செய்வான் ஒருவன்-தண்டிக்கப்படுவான் வேறொருவன். யார் அவன்?
5. மரம் ஒன்று, ஆனால் பூக்கள் மூன்று. அது என்ன?
6. அண்ணன் ஆலயம் செல்வான். தம்பி ஆஸ்பத்திரிக்குச் செல்வான். அவர்கள் யார்?
7. வெண்மையாய் இருக்கும்- பால் அல்ல. ஆனால் பறக்கும்- அது பறவை அல்ல. அது என்ன?
8. கோடு போடமாட்டாள். ஆனால் கோலம் போடுவாள். அவள் யார்?
9. கடைகளில் இருப்பாள். கைகளில் தவளுவாள். கண்ணிருந்தும் பார்க்கமாட்டாள். கற்பனைக்கு உயிரூட்டுவாள். யார் அவள்?

**விடைகள்**

1. ரூபாய் நோட்டு சில்லறை நாணயம்
2. தும்பங்காய் 3. தண்ணீர்
4. முட்டைப்பூச்சி
5. தென்னம்பூ, தேங்காய்பூ, தும்பு
6. தேங்காய், இளநீர் 7. பஞ்சு
8. நிலா 9. பேனை.

எம்.என்.றினூசா-யோனகபுர,திக்வெல்லை.


## அறிவோம் மனதில் பதிவோம்



ஐரோப்பாவிலுள்ள கறுப்பு மரங்கொத்திப் பறவைகள்தான் மரங்கொத்திப் பறவைகளிலே மிகவும் பெரியது. இவைதான் பெரிய சத்தமாக மரத்தைக்கொத்தும். இவை மரத்தைக் கொத்தும் போது அமைதியான சூழ்நிலையில் அந்தச் சத்தம் 3 கிலோமீற்றர் தூரம் வரை கேட்கும்.



விண்வெளியில் எந்த ஈர்ப்புச் சக்தியும் இல்லாததால் நம் உடல் எடையே அங்கு தெரியாது. அங்கு நடப்பவர்கள் மிதப்பது போலவே உணர்வார்கள். 1638ம் ஆண்டே- அதாவது மனிதன் விண்வெளிக்குச் செல்லுவதற்கு முன்பே இதைப்பற்றி எழுதினார் பிரான்ஸிஸ் கொட்வின் என்ற பாதிரியார்.



பென்குவின் பறவைகளில் 15 வகைகள் உள்ளன. இவை தென் துருவத்தில் அண்டாட்டிக்கா கடல் பகுதிகளில் மட்டுமே காணப்படுகின்றன. குளிர் மிகுந்த பகுதிகளில் மட்டுமே இவற்றால் வாழ முடியும். கும்பல் கும்பலாக வாழும் இவற்றின் முக்கிய உணவு மீன்.

## நியூஸிலாந்து

- நியூஸிலாந்து எங்குள்ளது ?
**பசுபிக் சமுத்திரத்தில் அவுஸ்திரேலியாவுக்குத் தென்கிழக்கே 1600கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது.**
- இந்நாட்டின் தலைநகரம் எது ?
**இரண்டு பெரிய தீவுகளும், ஏழு சிறு தீவுகளும் கொண்ட இந்நாட்டின் வடக்குத் தீவில் உள்ள வெலிங்டன் தான் இதன் தலைநகரம்.**




- நியூஸிலாந்தில் உள்ள பழங்குடியினரின் பெயர் என்ன?
**மொரிஸ்.**
- மொரிஸ் பழங்குடியினர் இப்போது எவ்வளவு பேர் உள்ளனர்?
**நியூஸிலாந்து சனத்தொகையில் 9 சத வீதம் உள்ளனர். இங்கிலாந்தில் இருந்து இங்கு வந்து குடியேறியவர்களின் சந்ததியினர்தான் அதிகம் உள்ளனர். நியூஸிலாந்தின் சனத் தொகை முப்பத்தைந்து இலட்சம்.**
- நியூஸிலாந்தின் பணவரவுக்குக் காரணமான முக்கிய விலங்கு எது ?
**ஆடு. ஆறு கோடி ஆடுகள் இங்கு இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. உலகிலேயே அதிக அளவில் கம்பளி தயாரித்து ஏற்றுமதி செய்யும் ஒரே நாடு நியூஸிலாந்து.**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# எழுதுவது யார்?

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் 'முரசு'க்காக எழுதும் தொடர் இது!

**யார் இந்த எழுத்தாளர்?**

**வாசகர்களின் ஊகிப்புத் திறனுக்கு சவால்!**

கண்டுபிடிக்கும் வாசகர்களில் பத்து அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான- பரிசுகள் காத்திருக்கின்றன-தொடர்ந்து வாசியுங்கள். நாம் கேட்கும்போது மட்டும் விடையை எழுதி அனுப்பினால்போதும்.

# மகாசூலம்

## 3

தன்னைச் சுற்றி ஏதேதோ சுகந்தங்கள் படர்ந்து வருவதைப்போலிருந்தது பாச்சுவுக்கு!

அவனது சுவாசம் கூடச் சுகந்த மாகவே இருந்தது! பன்னீர்ப்பூவின் நறுமணம்!

பாச்சு கேள்விப் பட்டிருக்கிறான்..

யக்ஷியும் கந்தர்வனும் ஒன்றுசேரும் நேரங்களில் இப்படி ஏதேதோ காட்டுப் பூக்களும், காலந்தவறி மலருகிறது உண்டாம்!

யோசித்துக்கொண்டே தான் நின்றிருந்தான் அவன்.

ஊருக்குள் எப்போதோ கேள்விப் பட்டது அவ்வளவும் ஞாபகம் வந்தன. அந்தக் காட்டுக்குக் கந்தர்வன் காடு என்று பிரசித்தி வந்ததே யக்ஷி-கந்தர்வர்களின் சரணாலயமாக அந்த இடம் அமைந்து விட்டதால் தானாம்!

புல்லரிக்குன்றில் வெகு நாட்களாகவே ஓர் ஐதீகம் உண்டு.

இரவுகளில் எவராவது ஊருக்கு வரநேரிட்டால், இந்தக் குறுக்கு வழியைத் தேர்ந்தெடுக்கவே நடுங்குவார்கள். இரண்டு கல் சுற்றிப்போனாலும்-கந்தர்வன் காட்டு வழிபோகக் கூடாது என்பது பலரும் சொல்லும் எச்சரிக்கை! குறிப்பாக செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் பகலிலும் அந்த வழியாக மனிதர்கள் போகப் பயப்படுவதுண்டு.

சொல்லியிருக்கிறார்கள் பலரும்!

அப்போதெல்லாம் பாச்சு கேட்டிருக்கிறான்; ஏன் ஏன்? போனா என்ன?" என்று பொத்தாம் பொதுவில் சாடுவான்!

"அந்த ரெண்டு உச்சி நேரத்திலேயும் வந்து அதுங்க உபத்திரவம் கொடுக்கும் பாச்சு!"

"எவனாவது யக்ஷியையோ கந்தர்வனையோ பார்த்ததுண்டா? அதுங்க எப்படிக் காதல் பண்ணுவாங்கன்னு யாருக்காவது தெரியுமா?" என்று அப்போ பாச்சு எதிர்க் கேள்வியும் எழுப்பியிருக்கிறான்.

"பார்க்கறதா? பாம்பும் அவுங்களும் இணைசேரும் நேரம் பார்த்தா கண் குருடு ஆயிடும் பாச்சு! விளையாடிறியா?"

"நான் எதுக்கு விளையாடணும்? நான் பாலேக்கல்மனை மாந்திரீகன் எடுபிடி! எனக்குத் திருமேனி வீட்டுப் பழக்கம்- மாடனையும், மதுரையையும் தெரியும். குட்டிச் சாத்தானைப் பார்க்கலேன்றாலும் அதோட கூப்பாட்டைக் கேட்டிருக்கேன்! ஆனா இந்த யக்ஷியும் கந்தர்வனையும்தான் இனியும் பார்க்கச் சந்தர்ப்பம் கெடைக்கலே!"

நக்கலாகவே சொன்னவன் பாச்சு!"

□□

இப்போது?

அதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருப்பதை உணர முடிந்தது! ஆனால் அப்போது பேசிய அந்தத் தைரியம் இப்போது இல்லை!

யக்ஷியும் கந்தர்வனும் உருண்டு புரளுவதைப் பார்த்தால் கண் குருடு ஆகிவிடுமோ என்கிற பயம்! புல்லரிக் குன்றில் இப்படிப் பார்த்துக் குருடானவர்கள் யாராவது இருச்கிறார்களா?

யோசித்தான்!

குருடர்கள் சிலர் உண்டு. ஆனால் அவர்கள் குருடு ஆனது இதனால்தானா என்பது பாச்சுவுக்கு உறுதியாகத் தெரியாது!

திருமேனி அவனிடம் சொல்லியிருந்தது..... "போனோமா... காரியம் பார்த்தோமா திரும்பினோமான்னு இருக்கணும். எனக்கு இன்னிக்கு ஒரு பூஜை இருக்கு!" என்பது!

பூஜைகள் இல்லாத போதும் இப்படித்தான்: "இதப்பாரு பாச்சு! எந்த வேலையாப் போனாலும் நீ இருட்டறதுக்கும் முன்னாலே வீடு வந்து சேர்ந்துடணும்! உனக்காக என்னைக் காத்திருக்க வைக்காதே! ராத்திரிகள் நம்மோடது அல்ல. அமானுஷ்யமான சில சக்திகளுக்கு சொந்தமான இருட்டிலே நாம முழச்சிருக்கக் கூடாது! ஞாபகம் வைச்சுக்க பாச்சு!" என்பார்.

அந்த நினைவும் இப்போது மனசுக்குள் வந்ததால் தான் பாச்சு லேசாக நடுங்க ஆரம்பித்தான்.

அமானுஷ்யங்களின் சக்தி பலமிழக்கிற நேரம் இரவுகளின் நாலாம் யாமம் தான் என்று திருமேனி சொல்லியிருக்கிறார்! ஆனால் பாச்சு வந்து கொண்டிருந்தது அமானுஷ்யங்களுக்கு உச்சகட்ட பலம் வருகிற இரண்டாவது மூன்றாவது யாமங்களில்!

மனதை அவன் தேற்றிக்கொண்டிருந்த போது-

மறுபடியும் சுகந்தங்களின் வீச்சு காற்றில் கலந்து பாச்சுவின் மூக்கை வருடியது! யக்ஷியும் கந்தர்வனும் ஒருவரை ஒருவர் துரத்திக் கொண்டு ஓடினர்.

அவர்களின் சிரிப்பொலி காடு முழுக்க ஆங்காங்கே அலைந்தது!

பிறகு?

பாதக் கொலுசு மணியின் நாத நயமும், பதனம் தப்பி வேகப்பட்ட காலடி லயமும் ஒன்றையொன்று விரட்டிக் கொண்டு காதுக்குக் கேட்க ஆரம்பித்தன!

'கடவுளே! காணக் கூடாத எதையும் என் கண்ணுக்குக் காட்டி குருடாக்கி விடாதே!' என்று அவன் மனம் விகசித்தது. ஓடியும், ஆடியும் விளையாடி முடித்த பிறகு.... ஒருவரையொருவர் நாடி அணைக்கிற வேகம் அந்த யக்ஷி- கந்தர்வருக்கும் வரலாம்! அப்போது அவர்களின் மோகத்தின் உச்சம்... மானிடர்களால் காண நேரிடும்போது கோபமும் சாபமும் வரச் சந்தர்ப்பம் உண்டு.

மனிதர்களையே அதுமாதிரி நேரம் பார்ப்பது ஆபத்துண்டாக்கக் கூடியது! இனி யக்ஷி- கந்தர்வர்கள் என்றால்? அது பேராபத்துத் தான்!

இரவிலே பூக்கிற பூக்கள் இவர்களுக்காகத் தானாம்!

அவை அத்தனையுமே மயக்கம் தருவது இது மாதிரி சமாச்சாரத்துக்காகத்தான்!

திருமேனி அவ்வப்போது சொன்னது பாச்சுவுக்கு நினைவில் வந்தது.

போயும் போயும் இந்த நேரத்தில் இப்படி ஒரு குறுக்குவழியாக வந்ததையும், வர நேரிட்டதையும் எண்ணி அவன் நொந்தான். ஆபத்து எதுவோ தலைக்குமேல் காத்திருப்பதைப் போன்ற அனுமானம். எவ்வளவு சீக்கிரம் இந்த வழியை ஓடிக் கடந்துவிட வேண்டுமோ கடந்தாக வேண்டும் என்று நினைத்தான் பாச்சு!

அப்போது ஓர் இளங்காற்று மெதுவாகக் காட்டுக்குள்ளே சுழிந்து மேலே வருவதைப் போல் உடம்பு சிலிர்த்தது. அங்கிருந்து தானா? அல்லது சுற்றிலுமே ஈரக் கதகதப்பு இருக்கிறதா? கந்தர்வன்காடுதான் இப்படி மூச்சு விடுகிறதா?

இல்லை.

சுற்றுப்புறச் சூழல் மொத்தமும் ஈரக் காற்று வீசுகிறது. மூன்றாம் யாமம் முடியப் போகிற நேரம் ஏற்படுகிற ஊதல் குளிர்.

கால் கொலுசுகள் குலுங்கும் சப்தம்! அத்தோடு கிசு கிசு மூட்டினால் சிரிக்கிற சிணுகல் சிரிப்பு! முக்கல்... முனகல்... மோகத்தில் ஏற்படுகிற போதைக் களிப்பு!

அவர்கள் அவர்களின் மும்முரத்தில். அந்நேரம் மனிதவாசனை கூடத் தெரியாது போலும்! பாச்சு அப்போதும் கண்களை இறுக மூடியபடியே நின்றான். கால்களுக்கு வந்த ஸ்தம்பிதம் திடீரென்று விடுபட்டாற் போலிருந்தது. பாச்சு அங்கிருந்து ஓட எத்தனித்தான்.

மரணப் பாய்ச்சல்!

விட்டால் போதுமென்று எடுத்த ஓட்டம்! சிறிது தூரம் போன பிறகுதான் நின்று மேல் மூச்சு வாங்கினான். அப்புறம் தான் திரும்பியே பார்த்தான்.

தூக்கி வாரிப்போட்டது.

அட கடவுளே!-அரண்டு போனான்......

கண்களை, அவை விரியும் வரை திறந்து பார்த்துகொண்டே இருந்தான்.

யக்ஷியும், கந்தர்வனும்!

அவர்களும் அதே வேகத்தில் ஓடி வந்து காட்டைக் கடந்து நின்றிருந்தனர். தலையிலிருந்து பாதம் வரை வெள்ளை ஆடை! இரண்டு பேரின் முகத்திலும் அழகுப் பிரகாசம்.

'இருவரின் கால்களும் நிலத்தில் தான் பதிந்திருக்கின்றனவா?' என்று கூர்ந்து பார்த்தான்! நிலத்தில்தான் இருந்தன நான்கு பாதங்களும்!

கந்தர்வன் யக்ஷியின் தோள்மீது கையைப் போட்டு அணைத்துக் கொண்டிருந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் தழுவியபடி நடந்துபோய் காட்டுக்குப் பின் பக்கமிருந்த வழியாகப் புகுந்து மறைந்த பிறகும் கூட......

பாச்சுவின் கண்களுக்குள் அந்த வெள்ளை ஆடையும் முக லாவண்யமும் அப்படியே படிந்து போயிருந்தன!

அவனுக்குக் கண்கள் குருடாகவேயில்லை.

மாடனையும், மதுரையையும் பார்த்தது போல் இந்த யக்ஷி-கந்தர்வனையும் பார்க்கிற சக்தி தனக்கு வந்துவிட்டிருப்பதாகப் பாச்சு கர்வப் பட்டான். மறுநாளே இதைப் பற்றி ஊர்முழுக்கச் சொல்லலாம்! நீலகண்டன் திருமேனியின் வேலைக்காரன் என்கிற கவுரவம்தான் கந்தர்வனும் யக்ஷியும் தன்னைக் கண்டும் காணாமல் விட்டுவிட்டுப் போனது என்று அளந்து விடலாம்! வேறு யார் பார்த்திருந்தாலும் கண்களைக் குருடு ஆக்கும் அந்த அமானுஷ்யங்கள், பாச்சுவின் மீது சிநேகமாகி எந்தத் தண்டனையும் சாபமும் தராமல் போனதற்குக் காரணமே தனது திருமேனியின் மந்திர பலம் தான் என்று பிரச்சாரம் செய்யலாம்.......

□□

பாலேக்கல் மனைக்கு ஓடிக் கொண்டிருந்த பாச்சு, ஏதோ ஒரு பெரும் பொக்கிஷம் தனக்குக் கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போயிருந்தான்! முற்றத்தில் அவன் நுழையும் போதே முகத்தில் சந்தோசக் கண் திறந்திருந்தது.

நீலகண்டன் திருமேனிக்கு சில கணங்கள் எதுவுமே புரியவில்லை! "ஏண்டா பாச்சு? என்ன உனக்கு ஆச்சு? பயந்துட்டியா?" என்றார் அவர்.

"பயமா? எனக்கா? என்ன திருமேனி? நான் சந்தோசமா இல்லே இருக்கேன்? ஏன் இப்படிக் கேட்கறீங்க?" என்றான் அவன்!

நீலகண்டன் தாடையைப் பரபரவென்று தேய்த்தார்.

தனக்குத் தான் தூக்கக் கலக்கமா? அல்லது பாச்சுவுக்கு ஏதாவது அதிர்ச்சியா?- புரியவில்லை அவருக்கு.

சாவதானமாகத் திண்ணையில் அமர்ந்து ஒரு தடவை வெற்றிலை போட்டுக்கொண்டு மெதுவாக விசாரித்தார்.

"போன காரியம் என்ன ஆச்சு?"

"முடிஞ்சுபோச்சு"

"அதான் சந்தோசமா?"

பாச்சு அப்போதும் மகிழ்ச்சியோடுதான் தலையை ஆட்டினான். "இல்லீங்க திருமேனி!"

"வேறை என்ன ஆச்சு உனக்கு?"

விவரித்துச் சொன்னான் பாச்சு. உடனே நீலகண்டன் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டார்.

"அட மண்டூகமே! அங்கே யக்ஷி-கந்தர்வர் வருவாங்கன்னு பலகாலமா ஒரு ஐதீகம் இருக்கு! அந்த வழியாப் போக ஜனங்களுக்கு அதனாலே பயமும் இருக்கு! ஆனா நீ உன் கண்ணாலே யக்ஷி- கந்தர்வரைப் பார்த்ததாகச் சொல்றதை நம்மாலே நம்பவே முடியலே!"

"திருமேனி! என்னிந்த ரெண்டு கண்ணாலேயும் பார்த்தேன் திருமேனி.... அவுங்க யக்ஷியும் கந்தர்வனும் தான்! என்ன ஒரு தேஜஸ்.... என்ன ஒரு ரூப லாவண்யம்?"

வெற்றிலை குதப்பியபடி வாயை அண்ணாந்து கொண்டார் திருமேனி.

"பார்த்திருந்தா உனக்கு ரெண்டு கண்ணும் இருந்திருக்காதே!"

"நேரில பார்த்தேன் திருமேனி!"

"இருக்காதுடா!"

"திருமேனி... அவுங்க ரெண்டுபேரும் ஒருத்தரை ஒருத்தர் கட்டிப் பிடிச்சுட்டு கந்தர்வன் காட்டுக்குப் பின்பக்கமாப் போற வரைக்கும் பார்த்தேன் திருமேனி! ஆனா அவுங்க என்னைப் பார்க்கலே! பார்த்திருந்தா ஒருவேளை நான் குருடாயிருப்பேனோ என்னவோ......! எல்லாம் உங்க மாந்திரீக பலம்."

"என்னடா சொல்றே?"

"உங்க மகிமை உங்களுக்கே தெரியலே திருமேனி!"

"அப்படியா?"-வியந்தார் நீலகண்டன்.

"சந்தேகமிருந்தா வாங்க-நீங்களும் பார்த்தப்புறம் சொல்லுவீங்க- இது நிஜம்தான்னு."

திருமேனி எதுவும் பேசவில்லை. எழுந்து போய் எச்சிலைத் துப்பிவிட்டு வந்தார். அப்போதும் அவருக்கு நம்பிக்கை வராததால்-

பாச்சு தனக்குள்தானே நினைத்துக் கொண்டான். 'உலகத்திலேயே பிரேதம்-பிசாசு- ஆவி-யக்ஷி-கந்தர்வன்னு ஒண்ணுமே இல்லையா? அதுகளை யாருமே பார்த்ததில்லையா? பார்க்காமலேதான் எல்லாரும் பயப்படறாங்களா?"

இத்தனை நாளும் வராத ஒரு சந்தேகம் பாச்சுவுக்குத் திடீரென்று மனசுக்குள் வந்தது.

நீலகண்டன் திருமேனி வெகுநேரத்துக்குப் பிறகு சிரித்தார்.

"ஏன் திருமேனி சிரிக்கிறீங்க?"

"அடேய்.....! துர்க்கதி ஏற்பட்டுச் செத்துப்போன ஆத்மாக்களுக்குத்தான் பிரேதம் பிசாசு ஆவி அது இதுன் னெல்லாம் பேரு. ஆத்மாக்கள் எப்பவும் அழியாது. நீரில கரையாது; நெருப்பில் வேகாது. காத்துல கலக்காதுன்னு பெரியவங்க சொல்லியிருக்காங்க. அதுக வெள்ளையா வேட்டியும் பொடவையும் கட்டிக்கிட்டு வந்தது... கால்லே கொலுசு போட்டிருந்தது... ரெண்டும் கட்டிப் புடிச்சுகிட்டு உருண்டதுன்னு நீ சொல்ற தெல்லாம்... ஆத்மாக்களோட வேலை யில்லே!"

பாச்சுவுக்கு இதைக் கேட்டதுமே பதறிப்போயிற்று.

"திருமேனி என்ன சொல்றீங்க?"

விளக்கிச் சொன்னார் நீலகண்டன்." ஆத்மாக்கள் உடலை விட்டுப்போனதுமே கதிதேடி ஏதாவது ஒரு உடம்புக்குள்ளே புகுந்துக்கும். அது புல்லோ பூண்டோ மரமோ மட்டையோ மனுஷனோ மிருகமோ எதுவாகவும் மறு உரு எடுக்கலாம். அப்படி எடுக்க முடியாமல் அலையற ஆவிகளுக்குத்தான் அலைச்சலும்... ஆதங்கமும்! அடைய ஒரு கூடு வேணும்னு தவிக்கிற ஆவிகள்... ஜீவனோட வாழ்ந்த காலத்தில் நிறைவேறாமப்போன ஆசைகளுக்காக பழிதீர்க்க ஆரம்பிக்கிறதும் உண்டு. அதுகளை நம்மைப்போல் மாந்திரீகர்கள் வருவிச்சு மேக்ஷனம் செய்றதும் உண்டு. நாமே அப்படிச் செய்துமிருக்கோம்.... ஆனா இப்ப எல்லாம் அப்படி ஒரு அவசியமும் வரலே! அதனாலே... உன்னைப் பயப்படுத்த யாரோ கந்தர்வன் காட்டுக்குள்ளிருந்து விளையாடியிருக்காங்க. அவுங்களை நீ ஆவின்னு நம்பிப் பதறிப்போயிட்டே! யக்ஷியும் கந்தர்வனும்'னு நம்பீட்டே! போய்ப் படு... வேறெதையும் போட்டு மனசிலே உருட்டாதே!"

சொல்லிவிட்டு எழுந்து போனார் நீலகண்டன் திருமேனி.

அவர் இப்படிச் சொன்னபிறகுதான் பாச்சுவுக்கே குஞ்சனை ஞாபகம் வந்தது. அவன் தன்னிடம் சவால்விட்டதும் ஞாபகத்துக்கு வந்தது! "சிரிடா சிரி! உன்னை இப்படியே நிரந்தரமாச் சிரிக்க வைக்க என்கிட்டே வேலையிருக்கு!" என்றவன் குஞ்சன்.

ஒருவேளை அதனால் தனக்கு அவ்வளவு சிரிப்பும் குதூகலமும் பொங்கி வந்ததா? யோசித்த பாச்சுவுக்கு அன்று இரவு முழுக்கத் தூக்கமில்லை!

□□

மறுநாள் மாலை. பக்டை மேடையில் குஞ்சனைச் சந்திக்கத்தான் போனான் பாச்சு! நிறைய ஆட்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். இந்த நேரம் அவனை எப்படி மிரட்டுவது என்று புரியவில்லை. கடைவீதி வரைக்கும்போய் விட்டுத் திரும்புவதற்குள் இருட்டாகிவிட்டது. பகடை மேடையில்...

குஞ்சனைக் காணவில்லை. அவன் வேகமாக வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து பாச்சுவும் பின்னால் போனான். அப்புறம்தான் தெரிந்தது....

குஞ்சன் போனது மேலிடம் மனைக்கு அல்ல!

கந்தர்வன் காட்டுவழியாக எங்கேயோ போனான் அவன். கூட்டிக் கழித்தான்-பாச்சு!

குஞ்சனுக்கு இருட்டோடு இருட்டு ஓர் 'இருட்டடி' கொடுத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்றது மனசு.

போகிற வழியிலேயே ஒரு மரக் கிளையை ஒடித்து வீசித் தாக்குகிற அளவுக்கு முறித்துக்கொண்டான் பாச்சு! அப்புறம் வேகமாகக் குஞ்சனைத் துரத்திக் கொண்டே போனான்.

குஞ்சன் இதைக் கவனிக்கவேயில்லை!

'இருட்டடி' கொடுக்கிறவன் தன்னை இன்னார் என்று காட்டிக்கொள்ளக்கூடாது! எனவேதான் அடர்ந்த ஒரு முக்குவரை அவன் பின்னாலேயே நிழலாகப் போனான்.

எதிர்பார்த்தபடியே அந்த முக்கில் முகம் தெரியாத இருட்டு.

நெருங்கிப்போனவன்- திடுக்கிட்டு நின்றான்!

நேற்று கந்தர்வ்ன் காட்டுக்குள் பார்த்த அதே யக்ஷியும் கந்தர்வனும்!

அவர்களின் நடுவே- குஞ்சன்! நடுங்கிப்போனான் பாச்சு!

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: மாசிலாமணி
வயது: 23
முகவரி: பூலாச்சேனை புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, கரப்பந்து விளையாடுதல்.



பெயர்: பி.கன்சல் மனான்
வயது: 20
முகவரி: ஏ/97, மரியாவத்தை கம்பளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம், வானொலி.



பெயர்: கே.மல்லிகாராணி
முகவரி: 442/22, ரெயில்வே லேன்,புவக்பிட்டிய.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி தையல்.



பெயர்: எம்.தனீலா
முகவரி: P.O.BOX-1171 FARWANIYA KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையான பொழுது போக்குகள்.



பெயர்: எஸ்.அருள் செல்வம்
வயது: 25
முகவரி: AL. HUDA ENGINEERING P.O.BOX NO-17015 DOHA,QATAR.
பொ.போ: வானொலி, கதைப் புத்தகம், தொலைக்காட்சி.



பெயர்: எம்.நிஸாம்
வயது: 24
முகவரி: P.O.BOX NO- 492 CODE. 83001 KHAITAN-KUWAIT.
பொழுதுபோக்கு: பேனாநட்பு பத்திரிகை.

பெயர்: கே.நாதன்
வயது: 25
முகவரி: P.O.BOX NO-1947 ALKHOBAR-31952 K.S.A.
பொ.போ: பேனா நட்பு, நண்பர்களுடன் அரட்டை, பத்திரிகை.

பெயர்: எம்.நஸ்றுல்லாஹ்
முகவரி: P.O.BOX-1172 JUBAIL. 31951 K.S.A
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: ஏ.லோறன்ஸ்
வயது: 22
முகவரி: 317/10, தொடங்வத்த-தியத்தலாவை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: எம்.பாஹிம்
வயது: 19
முகவரி: 164,168, இரண்டாம் குறுக்குத்தெரு, கொழும்பு-11.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: ஆர்.இராமகிருஷ்ணன்
வயது: 21
முகவரி: இராணிக்காடு, பொகவந்தலாவ..
பொ.போ: வழமையானவை.

பெயர்: ரி.இப்ராஹிம்
வயது: 16
முகவரி: இகல கொட்டியாவ, பரசன் கஸ்வெவ, அனுராதபுரம்.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, பேனா நட்பு.

# தாய்



**உ**ள்ளே பழைய திருட்டுப் புள்ளியான தனீலோவின் மகன் நிகலாய் விஸோவ்ஷிகோவ் வந்து சேர்ந்தான். நிகலாய் மனிதரை அண்டி வாழாத தனிக் குணத்தான். அந்தக் குடியிருப்பு முழுவதிலுமே பிரபலமான புள்ளி. அவன் எப்போதுமே யாரிடமும் ஒட்டிப் பழகுவதில்லை; எட்டியே நிற்பான். எனவே மற்றவர்கள் அவனைக் கேலிசெய்து வந்தனர்.

"உம், என்னது நிகலாய்?" என்று வியப்புடன் கேட்டாள் அவள்.

அவளுக்கு வணக்கம்கூடக் கூறாமல், அம்மைத் தழும்பு விழுந்த தனது அகலமான முகத்தை உள்ளங் கையால் துடைத்துவிட்டுக் கொண்டு வறட்டுக் குரலில் கேட்டான் அவன்: "பாவெல் இல்லையா?"

"இல்லை."

அவன் அந்த அறையை ஒரு பார்வை பார்த்துவிட்டு உள்ளே நுழைந்தான்.

"வணக்கம், தோழர்களே!" என்றான் அவன்.

"இவனும் கூடவா?" என்று வெறுப்புடன் நினைத்தாள் தாய். நதாஷா கொஞ்சமாயும், மகிழ்ச்சியுடனும் கரம் நீட்டி அவனை வரவேற்றது அவளுக்குப் பேராச்சரியம் விளைத்தது.

நிகலாயிக்குப் பின்னர் வேறு இருவர் வந்தனர்; அவர்கள் இருவரும் பருவம் முற்றாத வாலிபர்கள். தாய்க்கு அவர்களில் ஒருவனைத் தெரியும். கூர்மையான முகமும்; சுருண்ட தலைமயிரும், அகன்ற நெற்றியும் கொண்ட அந்தப் பையனின் பெயர் பியோதர்; தொழிற்சாலையின் பழைய தொழிலாளியான சிஸோவ் என்பவனின் மருமகன். அடுத்தவன் கொஞ்சம் அடக்கமானவன். அவன் தன் தலைமயிரை வழித்துவாரி விட்டிருந்தான். அவளுக்கு அந்தப் பையனைத் தெரியாது. எனினும் அவனைப் பார்த்ததும், அவளுக்கு எந்த பயமும் தோன்றவில்லை. கடைசியாக பாவெல் வந்து சேர்ந்தான்; அவனோடு, தாய்க்கு இனம் தெரிந்த வேறு இரு தொழிலாள இளைஞர்களும் வந்து சேர்ந்தனர்.

"நீ தேநீருக்குத் தண்ணீர் வைத்துவிட்டாயா?" என்று அன்போடு கேட்டான் பாவெல். "மிக்க நன்றி!"

"நான் போய்க் கொஞ்சம் ஒட்கா வாங்கி வரட்டுமா?" என்று கேட்டாள் அவள். காரணம் தெரியாத ஏதோ ஒன்றுக்கு தான் எப்படி நன்றி செலுத்துவது என்பது தெரியாமல்தான் இப்படிக் கேட்டாள் அவள்.

"இல்லை, தேவையில்லை" என்று அன்பு ததும்பும் புன்னகையோடு சொன்னான் பாவெல்.

அவளைக் கேலி செய்வதற்காகவே, தன் மகன் இந்தக் கோஷ்டியைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாய்க் கூறிப் பயங்காட்டிவிட்டதாக அவள் திடீரென நினைத்தாள்.

"அது சரி, இவர்கள்...இவர்கள் தானா, அந்தச் சட்ட விரோதமான நபர்கள்?" என்று மெதுவாகக் கேட்டாள் அவள்.

"இவர்களேதான்!" என்று பதில் கூறிவிட்டு அடுத்த அறைக்குள் நுழைந்தான் பாவெல்.

"ஐயோ!..." என்று அன்பு கலந்த வியப்புடன் சொன்னாள் அவள். பிறகு தனக்குள்ளே இளக்காரமாக நினைத்துக் கொண்டாள்: "இன்னும் இவன் குழந்தைதான்!"

□□□

**தே**நீர் தயாராகிவிட்டது. அதை எடுத்துக்கொண்டு தாய் அந்த அறைக்குள் நுழைந்தாள். விருந்தாளிகள் அனைவரும் மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். நதாஷா ஒரு மூலையில் விளக்கடியில் ஒரு புத்தகத்துடன் உட்கார்ந்திருந்தாள்.

"மனிதர்கள் ஏன் இப்படி மோசமாக வாழ்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால்..." என்று ஆரம்பித்தாள்.

"ஏன், அவர்களே மோசமானவர்களாக இருக்கிறார்கள்..." என்று குறுக்கிட்டான் அந்த ஹஹோல்.

"...அதற்கு, வாழ்க்கையை அவர்கள் எப்படித் தொடங்கினார்கள் என்று பார்க்க வேண்டும்...

"நன்றாய்ப் பாருங்கள், கண்மணிகளே, நன்றாய்ப் பாருங்கள்" என்று தேநீர் தயாரித்தபடி சொன்னாள் தாய்.

எல்லோரும் மௌனமானார்கள்.

"நீ என்ன சொல்கிறாய், அம்மா?" என்று முகத்தைச் சுழித்துக்கொண்டே கேட்டான் பாவெல்.

"என்னவா?" அவள் ஒரு பார்வை பார்த்தாள்; எல்லோரும் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். "என்னவோ நான் எனக்குள் பேசிக்கொண்டேன்." என்று குழறினாள் அவள்; "நீங்கள் நன்றாகப் பாருங்கள் என்று சொன்னேன்".

நதாஷா சிரித்தாள்; பாவெல் உள்ளுக்குள் கிளுகிளுத்தான்.

"தேநீருக்கு நன்றி, அம்மா?" என்றான் ஹஹோல்.

"தேநீரைக் குடித்துவிட்டு நன்றி சொல்லுங்கள்" என்றாள் அவள். பிறகு தன் மகனை லேசாகப் பார்த்துவிட்டு, "நான் உங்களுக்கு இடைஞ்சலாக நிற்கிறேனா?" என்று கேட்டாள்.

"விருந்து கொடுக்கிற நீங்கள் விருந்தாளிகளான எங்களுக்கு எப்படி இடைஞ்சலாக இருக்க முடியும்?" என்று பதிலளித்தாள் நதாஷா. "எனக்குக் கொஞ்சம் தேநீர் கொடுங்கள், உடலெல்லாம் ஒரேயடியாய் நடுங்குகிறது; கால்கள் ஐஸைப்போலவே குளிர்ந்துவிட்டன" என்று ஒரு குழந்தையைப்போலப் பரிதாபமாய்க் கேட்டாள் அவள்.

"இதோ, இதோ" என்று அவசர அவசரமாகக் கத்தினாள் தாய்.

நதாஷா தேநீரைப் பருகிய பின்னர், உரக்கப் பெருமூச்சு விட்டாள்; அவளது சடையைத் தோள்மீது இழுத்துப் போட்டுக் கொண்டு, தன் கையிலிருந்த மஞ்சள் அட்டை போட்ட படங்கள் நிறைந்த புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தாள். தேநீரை ஊற்றும் போதும், பாத்திரங்களை அகற்றும் போதும் சத்தமே உண்டாகாதபடி பதனமாகப் பரிமாறிக்கொண்டிருந்த தாய், நதாஷா வாசிப்பதையும் கேட்டுக்கொண்டிருந்தாள். அவளது மணிக்குரல், கொதிக்கும் தேநீர்ப் பாத்திரத்தின் ஆவி இரைச்சலின் மங்கிய ரீங்காரத்தோடு இணைந்து முயங்கி ஒலித்தது; ஒருகாலத்தில் குகைகளில் வாழ்ந்து, கற்களைக்கொண்டு வேட்டையாடிய காட்டு மனிதர்களைப் பற்றிய அழகான கதைகள் சங்கிலித் தொடர்போலப் பிறந்து, கட்டுலைந்து விரிந்து, அந்த அறை முழுதும் நிரம்பி ஒலி செய்ய ஆரம்பித்தன. இந்தக் கதைகளெல்லாம் தாய்க்குப் பாட்டி கதையைப்போல் இருந்தன. அவள் தன் மகனையே பார்த்துக்கொண்டிருந்தாள். இந்த மாதிரி விஷயங்களைத் தெரிந்துகொள்வதை அவர்கள் ஏன் தடை செய்யவேண்டும் என்பதைக் கேட்டுவிடவேண்டும் போலிருந்தது அவளுக்கு. ஆனால், நதாஷா வாசிப்பதைக் கேட்பதில் தாய்க்கு விரைவில் அலுப்புத் தட்டிவிட்டது; எனவே வந்திருந்த விருந்தாளிகளை, அவர்களோ அல்லது தன் மகனோ அறிந்துகொள்ள முடியாதபடி, கூர்ந்து நோக்கி ஒவ்வொருவரையும் அளந்து பார்த்துத் தனக்குத் தானே மதிப்பிட்டுக்கொண்டிருந்தாள்.

பாவெல் நதாஷாவுக்கு அருகில் அமர்ந்திருந்தான்; அங்கிருந்தவர்களுக்குள் அவனே அழகானவன். நதாஷா குனிந்து வாசித்துக் கொண்டிருந்ததால், அடிக்கடி முன்புறமாக வந்து விழும் தலைமயிரை ஒதுக்கிவிட்டுக் கொண்டிருந்தாள். படிப்பதை நிறுத்திவிட்டு, தலையை ஆட்டி, குரலைத் தாழ்த்தி, படித்த விஷயத்தைப் பற்றிய தனது அபிப்பிராயத்தையோ விமர்சனத்தையோ தனக்கு எதிராக இருப்பவர்களை அன்புடன் நோக்கி அவள் சொன்னாள். அந்த ஹஹோல் தனது மார்பை மேஜை விளிம்பின்மீது சாய்த்துக்கொண்டு, ஓரக் கண்ணால் தான் திருகி விட்டுக்கொள்ளும் மீசை முனைகளைப் பார்க்க முயன்றுகொண்டிருந்தான். நிகலாய் விஸோவ்ஷிகோவ் நாற்காலியில் கம்பு மாதிரி விறைப்பாக நிமிர்ந்து, கைகளால் முழங்காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்; மெலிந்த உதடுகள் கொண்ட அவனது அம்மைத் தழும்பு முகம், புருவமின்றி எந்த வித உணர்ச்சி பாவமும் இல்லாமல் ஒரு பொம்மையின் முகத்தைப்போலவே இருந்தது. பித்தளைத் தேநீர்ப் பாத்திரத்தில் தெரியும் தனது முகத்தின் பிரதிபிம்பத்தையே அவன் தன் குறுகிய கண்கள் இமைக்காமல் வெறித்துப்பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மூச்சு விடுகிறானா இல்லையா என்பதே சந்தேகமாயிருந்தது. சின்னவனான வியோதர் படிப்பதைக் கேட்கும்போது தன் உதடுகளைச் சப்தமற்று அசைத்துக்கொண்டிருந்தான்; புத்தகத்தின் வார்த்தைகளைத் தனக்குத்தானே திரும்பச் சொல்லிக்கொள்வது போலிருந்தது அந்த உதடுகளின் அசைவு. அவனது அடுத்த நண்பன் ஒரேயடியாய்க் குனிந்து குறுகி, முழங்காலின்மீது முழங்கையை ஊன்றி, முகத்தை உள்ளங்கைகளில் தாங்கி சிந்தனை வயப்பட்ட சிறு புன்னகையோடு அமர்ந்திருந்தான்.

## 7

## மக்சீம் கார்க்கி

பாவெலுடன் வந்த இளைஞர்களில் ஒருவனுக்கு சுருள் சுருளான செம்பட்டை மயிரும், களி துள்ளும் பசிய கண்களும் இருந்தன. நிலைகொள்ளாமல் அமைதியற்று நெளிந்து கொடுத்துக்கொண்டிருந்த அவன் எதையோ சொல்ல விரும்புவதுபோலத் தோன்றியது. இன்னொருவனுக்கு வெளுத்த தலைமயிர்; நன்றாக ஒட்ட வெட்டிவிடப்பட்ட கிராப். அவன் தன் தலையைக் கையினால் தடவிக் கொடுத்துக்கொண்டு தரையையே பார்த்துக் கொண்டிருந்தான்; எனவே அவனது முகம் சரியாகத் தெரியவில்லை. அந்த அறையில் ஏதோ ஒரு புதிய மங்களகரமான சூழ்நிலை குடிபுகுந்த மாதிரி இருந்தது. தாயின் உள்ளத்தில் இதுவரை தோன்றாத ஏதோ ஒரு அசாதாரண உணர்ச்சி மேலோங்கியது. நதாஷாவின் இனிய குரலின் பின்னணி இசையிலே, அவள் தனது குமரிப் பருவத்துக் கும்மாளங்களை, ஆபாச சல்லாபப் பேச்சுக்களை, வாயில் எப்போதும் ஒட்கா நாற்றம் அடித்துக்கொண்டிருக்கும் வாலிபப் பிள்ளைகளின் வம்புத் தனமான கேலிப் பேச்சுக்களையெல்லாம் சிந்தித்துப் பார்த்தாள். அந்த நினைவுகளால் அவளது இதயம் தனக்குத்தானே அனுதாபப்பட்டுக் கொண்டது.

தன் கணவனுக்குத்தான் எப்படி மனைவியானாள் என்ற விஷயத்தையும் அவள் சிந்தித்துப் பார்த்தாள். அந்தக் காலத்தில், இப்படிப்பட்ட கேளிக்கை விருந்தின்போது, ஒருநாள் இரவில், அவளை ஒரு இருளடைந்த வாசற்புறத்தில் அவன் வழிமறித்துப் பிடித்தான்; அவளது உடம்பைச் சுவரோடு சாய்த்து அழுத்தினான்.

"என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறாயா?" என்று முரட்டுத்தனமாகக் கேட்டான். அப்போது அவளது மனம் புண்பட்டு நொந்தது. எனினும் அவன் அவளது மார்பகத்தை வேதனை தரும் விதமாகப் பற்றிப்பிடித்துக்கொண்டு, ஆவி கலந்து வீசும் அவனது உஷ்ண சுவாசத்தை அவளது முகத்தின்மீது பிரயோகித்தான். அவனது பிடியிலிருந்து தப்புவதற்காக அவள் முரண்டு திமிறி ஒரு பக்கமாக ஒடப் பார்த்தாள்.

"எங்கே போகணும்?" என்று இரைந்தான் அவன். "பதில் சொல்லு– உன்னைத்தான்!"

அவள் எதுவுமே சொல்லவில்லை. தான் அடைந்த துன்பத்தாலும் அவமானத்தாலும் அவளது மூச்சே திணறிப் போய்விட்டது.

யாரோ கதவைத் திறந்துகொண்டு வாசல் பக்கமாக வந்தார்கள்; மெதுவாக அவன் தன் உடும்புப் பிடியை நெகிழவிட்டான்.

"ஞாயிற்றுக்கிழமையன்று கல்யாணப் பேச்சுக்கு அம்மாவை அனுப்பி வைப்பேன். ஆமாம்!" என்றான் அவன்.

அவன் சொன்னபடியே செய்துவிட்டான்.

தாய் தன் கண்களை மூடி, நெடுமூச்செறிந்தாள்.

"மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை நான் அறிய விரும்பவில்லை; மக்கள் எப்படி வாழவேண்டும் என்பதை அறிய விரும்புகிறேன்" என்று எதிர்வாதம் பேசும் குரலில் சொன்னான் நிகலாய்.

"அதுதான் சரி" என்று கூறிக் கொண்டே எழுந்தான் அந்தச் செம்பட்டைத் தலையன்.

"நீ சொல்வதை நான் ஒப்புக்கொள்ளவில்லை" என்று கத்தினான் பியோதர்.

வாக்குவாதம் பலத்தது, வார்த்தைகள் தீப் பிழம்புகள் போலச் சுழலத் தொடங்கின. அவர்கள் எதைப்பற்றி இப்படிச் சத்தம் போட்டுக்கொள்கிறார்கள் என்பது தாய்க்குத் தெரியவில்லை. எல்லோருடைய முகங்களும் உத்வேக உணர்ச்சியினால் இரத்தம் பாய்ந்து சிவந்துபோயிருந்தன. எனினும் எவரும் நிதானம் இழக்கவில்லை. அவளுக்குக் கேட்டுப் பழக்கப்பட்டுப் போயிருந்த எந்த ஆபாச ஏச்சுப் பேச்சுக்களையும் அவர்கள் பிரயோகிக்கவில்லை.

"இந்தப் பெண்ணின் முன்னிலையில் அப்படிப் பேசுவதற்கு அவர்கள் வெட்கப்படுகிறார்கள்" என்று தீர்மானித்துக் கொண்டாள் தாய்.

நதாஷாவின் முகத்தில் தோன்றிய உக்கிரபாவத்தைக் காண்பது தாய்க்குப் பிடித்திருந்தது. நதாஷாவோ அவர்கள் அனைவரையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள். இவர்கள் அனைவருமே இன்னும் குழந்தைகள்தான் என்று கருதிப் பார்ப்பது போலிருந்தது அந்தப் பார்வை.

(தொடர்ந்து வரும்)

**என்றும் முதலிடம்**

உலகில்
மிகச் சிறந்த நாவல்
எது?
ஒரே பதில்
தாய்! தாய்!! தாய்!!!

உண்மைகள்
எப்போதும் வசீகரமானவை
அதுதான்
'தாய்' நாவல்
எப்போதும்
முதலிடத்தில் இருக்கிறது!

தவறவிடாமல்
தொடர்ந்து வாசியுங்கள்!

ரகுநாதனின்
மொழி பெயர்ப்புநடை
பிரமாதப்படுத்துகிறது.

-ஆ.ர்.

# தம்பி ஊருக்குப் புது சு

சிலாபம் பொ.புஷ்பராஜு

**பா**லு இன்றுதான் முதன் முதலாக கொழும்பு மாநகருக்குத் தனியாகப் போகிறான். சிலாபம் கடலில் புதிய மீன்பிடி வள்ளம் வெள்ளோட்டம் விடுவதைப் போன்றுதான் பாலுவின் முதல் கொழும்புப் பயணம் அமைந்திருந்தது. கடந்த மூன்று நாட்களாக பிரயாண ஒத்திகையையும் செய்துபார்த்தான்.

இதற்கு முன் இவனது நண்பன் டிக்கோயா செட்டியுடன் ஆடிவேல் பார்க்கவும், 'எஸ்.பி.பியின் இன்னிசை வார்ப்புகள்' இசை நிகழ்ச்சியையும், வெசாக் பந்தல்களையும் பார்க்கப்போயுள்ளான்.

காலை ஆறு மணிக்கு சிலாபத்திலிருந்து 'இன்டர் சிட்டி' பஸ்சில் கொழும்புக்கு புறப்பட்டான்.

பஸ் வண்டியும் 7.30க்கு கொழும்பு எல்லையை வந்து சேர்ந்தது. 'தொட்டலங்க' பாலத்தை பஸ் கடக்கும்போது பாலுவுக்கு ஒருவிதப் பயம் மனதில் ஏற்பட்டது. 'கொழும்பு மாநகரம்' பெயர்ப்பலகை அருகில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட பொலிசார் துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தனர்.

மூன்று பொலிசார், வரும் வாகனங்களை 'செக்' பண்ணிக்கொண்டிருந்தனர்.

பாலு தன் சேர்ட்டின் உள் பாக்கட்டில் கையை வைத்து தடவிப் பார்த்தான். பாலுவுக்கு போன உயிர் மீண்டும் வந்தது. 'அம்மாடியோ! 'ஐடென்டி கார்ட்' மறக்காது கொண்டுவந்து விட்டேனே. அதுவே பெரிய காரியம். 'ஐடென்டி கார்ட்' இல்லாம பொலிஸ் புடிச்சு கூண்டுல போட்டா வீட்டுக்கு யாரிடம் சொல்லியனுப்புவது' என மனதிற்குள் பேசிக் கொண்டான்.

பஸ்சை பொலிஸ் அதிகாரி ஒருவர் நிற்பாட்டினார். எல்லோரின் 'ஐடென்டி கார்ட்'டையும் வாங்கிப் பார்த்தார். பஸ் வண்டியின் பின் ஆசனத்தில் உட்கார்ந்திருந்த பாலு பொலிசாரைக் கண்டதும் 'ஐடென்டி கார்ட்'டை கையில் எடுத்து வைத்துக் கொண்டான்.

மீண்டும் அவனது மனம் பேசியது. 'எதற்கு நான் பயப்பட, 'ஐடென்டி கார்ட்'டில் தான் பாலேந்திரன் என்பதற்குப் 'பாலேந்திர' என எழுதப்படிருக்கே; அதுவும் ஒரு பெரிய காரியம் மட்டுமல்ல. ஒரு திடீர் தற்காப்புக்கு பெரிய உதவியாகவும் இருக்கும். தன் பெயரில் உள்ள 'ம்'மன்னா எழுத்தை தின்றவனுக்கு மனதிற்குள்ளேயே ஒரு கும்பிடு போட்டான்.



பஸ்வண்டி மீண்டும் புறப்பட்டது. செட்டித்தெரு சந்தியை பஸ் வண்டி சென்றதும் நின்றது. "பஹின்ன கட்டிய பஹின்ட. ஆய் நத்தரக் கரான்னே பஸ் ஸ்டேன்டக்க" என நடத்துனர் கத்தித் தொலைத்தான்.

பாலுவும் பஸ்சை விட்டு இறங்கி செட்டித் தெரு சந்தியை உற்றுப்பார்த்தான். ஐந்து லாம்பைக் காணவில்லை. யோசித்தான்.......... 'மூன்று லாம்புதானே இருக்கு'. செட்டி என்னை ஏமாற்றி விட்டானே. பாவிப்பயல இன்றைக்கு ஒரு கை பார்க்கணும். ஐந்து லாம்பு சந்தியில இறங்கி மெயின் வீதிக்குப் போய், துறைமுக பஸ் ஸ்டாண்டில வெள்ளவத்தைக்கு பஸ் எடுக்கலாம் என எனக்கு கதை கட்டி, காதுக்குப் பூ வைத்துவிட்டானே பாவி. இந்த சந்தியில மூன்று லாம்புதானே இருக்கு.' தன் மனதில் செட்டியைத் திட்டிக்கொண்டே மெயின் வீதி வழியாக துறைமுக பஸ் நிலையத்தை சென்றடைந்தான்.

தெஹிவளைக்குப் போகும் பஸ்ஸில் ஒருவாறு தொத்திக்கொண்டான்.

பஸ் நிறைய சனக் கூட்டம். மூச்சு வெளியேறவும் வழியில்லை.

பாலுவுக்கு முன்னால் ஒரு அழகிய ரைற்ஸ்கேர்ட்டும், பட்டர் சில்க் பிளவுசும் போட்ட யுவதியும், பின்னால் 'அண்ணாமலை' சாரி உடுத்தி கருப்பு கண்ணாடி போட்ட ஒரு யுவதியும் பாலுவை முட்டி மோதிக் கொண்டிருந்தனர்.

பஸ் வண்டி வேகமாக ஓடி பழைய பாராளுமன்ற வீதி வளவை எட்டிக்கொண்டிருந்தது.

மெதுவாக பாலுவுக்கு முன்னாலிருந்தவள் பாலுவின் காலைத் தன் கால் பெரு விரலால் சுரண்டினாள். பாலு ஒன்றும் அறியாதவனைப்போல தன் காலை இழுத்தான். அவளும் விட்டபாடில்லை.

மீண்டும் ஒரு சரசம்.

'ஆ...என்ன...சுகம்...' பாலுவுக்கு.

திடீரென சாரதி பிரேக் போட்டான்.

'ஆ மீண்டும் ஒரு...சுகம்.'

பின்னால் இருந்தவளும் பாலுவை விட்டமாதிரி தெரியவில்லை.

அவளும் தன் காலால் பாலுவின் கால் பின் பகுதியை சுரண்டினாள்.

பாலு பின்னால் திரும்பிப் பார்த்து சிரித்தான். அவளும் சிரித்தாள். ஆகா.... மனதில் ஒரு கிளுகிளுப்பு.

முன்னால் இருந்தவள் பாலுவின் கையைப் பிடித்து கிள்ளிவிட்டாள். ஆகா... மீண்டும் மனதில் ஒரு கிளுகிளுப்பு.

பாலுவுக்கு அருகில் இருந்த சீட்டில் உட்கார்ந்திருந்த கிழவர் இந்த பெண்களின் சேட்டைகளைப் பார்த்துவிட்டு பாலுவிடம்:

"தம்பி ஊருக்குப் புதுசா?" என்றார். கிழவனின் கேள்வி பாலுவை தூக்கிவாரி வீசியது. கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

"கிழட்டு தாத்தா நீ ஊருக்கு புதுசா? வாயை தொடைச்சுக்க" என்றான் பாலு.

பாவம் கிழவன். பயந்தே போய்விட்டார்.

பஸ்வண்டி இப்போது பம்பலப்பிட்டியை அடைந்து முச்சந்தி பஸ்தரிப்பு நிலையத்தில் நின்றது. யுவதிகள் இருவரும் பஸ்வண்டியை விட்டு இறங்கி 'ஆட்டோ' ஒன்றில் ஏறினர்.

பாலுவும் அவர்கள் இருவரையும் வைத்த கண் மாறாது பார்த்துக்கொண்டிருந்தான்.

பஸ் வண்டியும் மெதுவாக நகர்ந்தது. பஸ் வண்டி வெள்ளவத்தை மார்க்கட் அருகில் நிறுத்தப்பட்டதும் பாலு இறங்கி 'வெளியூர் வேலை வாய்ப்பு ஏஜென்சி' பக்கம் நடந்தான்.

தண்ணீர் தாகம் அவனின் உயிரை வாங்கியது.

அருகில் இருந்த 'கூல் ஹவுசு'க்குள் நுழைந்தான்.

பணம் எடுப்பதற்காக கல்சானின் பின் பாக்கட்டில் வைத்திருந்த மணி பேர்சைத் தட்டிப்பார்த்தான்.

'ஆ..... பேர்ஸ் இல்லையே?' அந்த ரெண்டு குட்டிகளும் பாலுவுக்கு 'கேம்' கொடுத்துவிட்டுப் போய்விட்டார்கள். அவனின் மனம் உளறியது. 'பரவாயில்லையே பாட்டி கிழவி சொன்னது சரியாப் போச்சு. கொழும்பு ஊரு இவ்வளவு மோசம்னு இப்பத்தானே தெரியும்'.

இன்று காலையில் கொழும்புக்கு வர புறப்படுமுன் அவனது பாட்டி "அடேய் பாலு கொழும்புக்கு கவனமாய்ப் போடா. நீ கொழும்பு ஊருக்கு புதுசு. பணத்த சட்டை உள்ளுக்கு பையில வைச்சுக்கடா" என்று சொன்னது எவ்வளவு பாதுகாப்பாகிவிட்டது பாலுவுக்கு.

பாலு கூல் டிரிங்ஸ்சுக்கு சட்டைப் பையில் இருந்த பணத்தில் கொடுத்துவிட்டு கிழவிக்கு மனதில் ஒரு கும்பிடு போட்டான்.

www.padippakam.com



## பொங்கல் சிறுகதை

# இனியொரு..... பொங்கலா?

-திரு மலை சுந்தா-

என்னை நான்; ஒரு நிமிடம் மறந்தே போனேன். பத்து வயசு இருக்கும். ஸ்கொலஷிப் ஐந்தாம் ஆண்டு பாஸ் பண்ணின நேரம்.. அப்பா என்னை தூக்கி கொஞ்சியபோது....

என்னை நான்; ஒரு நிமிடம் மறந்திருந்தேன். இது சந்தோஷத்தின் எல்லையில் என்னை நான் மறந்த நிகழ்ச்சி. ஆனால் பயத்தில் என்னை நான் மறந்த சம்பவமும் இன்னும் என் மனதில் பசுமையாகவே இருக்கின்றது.

"கெதர கௌத...." பலமாக தகவு தட்டப்படும்போது- "யாரோ கள்ளங்கள்..." என்று சொல்லிக்கொண்டு அம்மா வீறிட்டு எழுந்தபோது... அப்பா எழுந்து கதவைத் திறந்தபோது..... ஏழெட்டு ஆமிக்காரன்கள் வேகமாக வீட்டக்குள் நுழைந்து.... "எங்க பெரிய தம்பி...." என்று கத்தியபோது....

என்னை நான் ஒரு நிமிடம் மறந்ததும் உண்டு. ஆனால் இன்று ஜெயராணி என்னிடம் இந்த செய்தியை கூறி; தனது தமையன் எழுதிய கடிதத்தை என்னிடம் விழித்து காட்டியபோது...

அப்படியே... அந்தக் கவலை-

என்னை நான் ஒருநிமிடம் மறந்தே போனேன்.

"கலா... சூரியகலா... என்னப்பா... என்ன...?" என்று என் தோழி என்னை தட்டி என்னை உணர வைத்தபோது... 'ஓ'வென்று அழுதேவிட்டேன். "இஞ்சாரும் அப்பா... நீர் மனசை விடமாட்டீர். தைரிய சாலி என்றுதான் உம்மட்ட இத சொன்னன். இல்லாட்டி பிறசரோடயும்; டையபிட்டிஸோட யும் அவதிப்படுற உம்மட ஃபாதரிட்ட சொல்லி இருப்பன்தானே? மனதை அலைய விடாதேயும். திடப்படுத்தும். எப்படியோ உங்கட குடும்பத்தில யாரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்காம சொன்னாச் சரி... அந்த சமார்த்தியம் உம்மட்ட இருக்கு என்றதால தான் அண்ணாச்சி எழுதினபடி உம்மட்ட நான் வந்து சொன்னன்."

ஜெயராணி கதைப்பது கனவில் கதைப்பது போலிருந்தது. வார்த்தைகள் ஆழமான கிணற்றில் இருந்து வருவது மாதிரி இருந்தது.

ஜெயராணியின் முகமும் சிவந்திருந்தது. அவளது கட்டுக்கோப்பான தடித்த உடல் நடு நடுங்கிக்கொண்டிருந்தது. சேலைத் தலைப்பால் தன் கண்களை ஒற்றி ஒற்றிக் கொண்டிருந்தாள்.

எப்படித்தான் என்னிடம் அந்த திடீர் ஆவேசம்; துணிச்சல் வந்ததோ? உண்மையில் ஜெயராணி சொன்ன மாதிரி நான் தைரிய சாலியோ?

என்னை நான் மறந்த அந்த ஒரு நிமிடத்தின் பின்....

அந்த மயக்கம் போய்க்கொண்டே இருந்தது.

"அழாதேயும்... எங்கட கையில் என்ன இருக்கிறது? எப்பவாகிலும் உயிர் என்ற ஒன்று போகத்தானே வேணும்? விபத்தில சாகிறம்...நோயில சாகிறம்..... சிலர் கடமையில் சாகிறார்கள். பெரிய தம்பி- அவன் பிறந்த மண்ணுக்காகப் போராடி மறைந்திருக்கிறான். அவ்வளவுதானே! சின்ன பாசம்... கூடிய வளர்ந்த வேதனை... வேறென்ன?"

சூரியகலா எப்படித்தான் பேசினாளோ?

இந்த வார்த்தைகளை எப்படித்தான் பொறுக்கி எடுத்தாளோ? அவள் உண்மையில் தகப்பனைப்போல; தமையன் பெரியதம்பி போல துணிச்சல்காரிதான்.

வேறு யாராவது இந்த செய்தியை கேட்டபின் இவ்வளவு துணிச்சலோடு சத்தியமாக இருக்கவே மாட்டார்கள். கத்தி; குளறி ஊரையே கூப்பிட்டு இருப்பார்கள். ஊருக்கே; வந்த செய்தியை பறை சாற்றி இருப்பார்கள்.

அதன் பின்விளைவால் வரப்போகும் பிரச்சனைகளை சிறிதும் யோசித்தே இருக்க மாட்டார்கள்.

தன் சேலைத் தலைப்பால் ஜெயராணி; சூரியகலாவின் முகத்தை துடைத்துவிட்டாள்.

"அண்ணாச்சி சொன்னது சரி... உம்மட வீட்ட போகாம உம்மை எங்கட வீட்ட கூப்பிட்டு சொன்னதும் நல்லதற்குத்தான்.." ஜெயராணி சொன்னாள்.

சூரியகலா தன்னை ஒருமுறை மறந்து சிரித்தாள். அந்த சிரிப்பிலும்....

ஜெயராணி அவளை அதிசயமாகப் பார்த்தாள்.

"என்ன பெண்ணோ?" சூரியகலாவை- அவளது அழகான தோற்றத்தை கண்ணால் படம் பிடித்தாள்.

நீளமான மூக்கும்... அந்த பூனைக் கண்களும்..விரிந்த நெற்றியில் குற்றுப்போல் போட்டிருந்த குங்குமப் பொட்டும்.... மேல் உதட்டில் உள்ள பூனை மயிர்களும்...

தான் எடுத்த படத்தை தனக்குள் பார்த்தாள் ஜெயராணி.

"கலா வீட்ட இந்த விஷயத்தை எப்படிச் சொல்லப் போகிறீர்? எப்படித்தான் அவர்கள் தாங்குவார்களோ?"



தான் எடுத்த படத்திற்கல்ல; தன் முன்னால் நின்ற சூரியகலாவிடம் கேட்டாள் ஜெயராணி.

"இஞ்சாரும்...இராசவள்ளி நிலத்துக்க அல்லவா போடுறது? உம்மட வீட்ட...இஞ்ச கொடியில ஒவ்வொரு கணு இடையிலயும் சின்னன் சின்னனாய் போட்டிருக்கே.."

சூரியகலா; ஜெயராணியின் முற்றத்தில் மதில் ஓரமாக நின்ற செவ்வரத்தையோடு ஒன்றி; படர்ந்திருந்த இராசவள்ளி செடியுடன்தான் தன் புலன்களை மாற்றிவிட்டாளோ?

"இஞ்சாரும் கதை மாற்றாதேயும். இராசவள்ளி கொடியில போடுறது எங்கயும் உண்டு. உம்மட விஷயத்துக்கு வாரும்"

"ஜெசிந்தா..." ஜெயராணியை கலா இப்படித்தான் கூப்பிடுவாள்.

"சொல்லும்?"

"பெரிய தம்பிக்கு... இராசவள்ளிக் கிழங்கு என்றால் நல்ல ஆசை. அம்மா எனக்கு கொஞ்சம் கூடப் போட்டுட்டா என்றதற்காக, இராசவள்ளிக் கிழங்கு இருந்த பானையை அப்படியே தூக்கி முற்றத்திலே எறிஞ்சுபோட்டான். "ஏண்டா எறிஞ்சனீ?" என்று அம்மா அடிக்கப் போகேக்க 'இவள் கலாவுக்கு உருண்டைக் கிழங்கு அவிச்சு; மிளகுதூள் போட்டு சாப்பிட ஆசை. நான் இதில போனனா? இராசவள்ளிக் கிழங்கு தின்ன எனக்கு ஆசை. எல்லோரும் எல்லாத்திலும் ஆசைப்படுறது சரியா அம்மா?" என்று கேட்டான். ஜெசிந்தா! அன்றில் இருந்து முதல் பெரியதம்பிக்கு போட்டபின்தான் நாம் சாப்பிடுவம். இதை நினைக்க..." கலா அழவில்லை.

"அம்மாவ்...அம்மாவ்..." பாத்றூமுக்குள் இருந்து சத்தம் வந்தது.

"கலா கொஞ்சம் இரும். அரை மணிக்கு முன்னால முழுகப் போனவள் பிரியா... பார்த்திட்டு வாரன்.." ஜெயராணி பாத்றூம் பக்கம் அவசர அவசரமாகப் போனாள்.

சூரியகலா பூஞ்சட்டி வைப்பதற்காக போடப்பட்டிருந்த கட்டில் அமர்ந்து கொண்டாள்.

அம்மா; அப்பா; தம்பி; தங்கைகள்; சித்திமார்; மாமாமார்...இத்தியாதி உறவுகள்.. வந்து போனார்கள். அம்மாவின் அப்பு இறந்த போது வீட்டில் நடந்த அந்த செத்த வீட்டு காட்சிகள் எல்லாம்..வந்து போய்க் கொண்டிருந்தது.

பெரியதம்பி கடல் சண்டையில காணாமல் போனதை எப்படிச் சொல்லலாம்? ஜெசிந்தா குடைகிறாள். நான் எப்படி சொல்லப் போறன். அந்த தைரியம்... மனோபலம்... என்னிடம் உள்ளதா? சொல்லித்தானே ஆகவேண்டும். கலா....

திரும்பவும் அந்த கடிதத்தை படித்தாள்.

'....பெரியதம்பி...கடல் சண்டையில வீர மரணம் ஏய்திவிட்டான். அவன் கொண்டுபோன படகு மோதித்தான் அந்த பெரிய கப்பல் சுக்குநூறானதாம். சந்தி எங்கும் பெரிய தம்பியின் படமாய் போட்டிருக்கு. உங்களுக்கும் தகவல் வந்திருக்குமென நம்புகின்றேன். மற்ற விஷயங்களை பிறகு எழுதுகின்றேன். மேலும்....'

கடிதத்தை மடித்தாள் சூரியகலா.

ஜெயராணி தன் மகளுக்கு தலையைத் துவட்ட முற்றத்துக்கு கூட்டி வந்தாள்...

"ஆ...கலா அன்ரியா.." ஜெயராணியின் மகள் பிரியா கலாவை ஆசையாக அழைத்தாள்.

கலா மௌனமாக சிரித்துக்கொண்டாள்.

"அன்ரி என்ன ஒரு மாதிரியாக இருக்கிறீங்க..? என்ன நடந்தது?"

"ஒன்றுமில்லை..... இந்த முறை பொங்குறதா...இல்லையா என்று யோசிக்கிறன்..." கலா கதையினை மாற்றினாள்.

"ஏன் பொங்குறதுங்கு என்ன? வழி இல்லையோ?"

ஜெயராணியின் பத்து வயது மகள் கேட்டாள்.

கலாவுக்கு பதில் உடன் வரவில்லை. கதையை மாத்தப் போய் அம்பிட்டு விட்டோமென அவள் மனம் சொன்னது.

"கலா அன்ரி இந்த முறை பொங்க மாட்டினம். நீ கேள்விமேல் கேள்வி கேட்காமல் தலையை குனி..." தன் மகளை அதட்டி தலையை குனிய வைத்தாள் ஜெசிந்தா.

"அவளை ஏன் அதட்டுறாய்...? அவள் கேட்கிற கேள்விக்கு நான் பதில் சொல்ல வேண்டும். அப்பதான் நான் எல்லோருக்கும் பக்குவமாக இந்த விஷயத்தை சொல்லலாம்."

"அப்ப சொல்லு.."

"இந்த நாட்டில சமாதானம் வர வேணும்... அப்படி நிலையான சமாதானம் வந்தாத்தான்... உண்மையான மகிழ்ச்சியோட எங்கட கொண்டாட்டங்களை கொண்டாடலாம். இப்ப எங்க பார்த்தாலும் ஒவ்வொரு குடும்பத்திலும் இந்த சண்டையால வெறுமை தான் மிஞ்சிக்கொண்டு போகுது.

மனிசர்கள் சீவிக்கிற காலம் குறைவு. இதுக்குள்ள சண்டையை பிடிச்சு எங்களை நாங்களே மிருக சாதிகள் போல அழிச்சுக் கொள்கிறதென்றால்... **இனியொரு... பொங்கல்...** எங்களுக்குத் தேவைதானா..?

சூரியகலா ஆத்திரத்தோடு அல்ல.. அவதானமாகத்தான் சொன்னாள்.

அவளோடு அவள் அண்ணன் பெரிய தம்பி மட்டுமல்ல எத்தனையோ பெரிய தம்பிகள் அவளைச் சூழ்ந்து... பேச வைத்துக்கொண்டிருந்தார்கள்.

சூரியகலா இன்னும் பேசிக்கொண்டிருந்தாள். ●

# காலத்தின் கோலங்கள்

-ஷர்மிளா இஸ்மாயில்-

வளைந்து வளைந்து நீண்டு போகும் மலைப் பாதையில் பஸ் குலுங்கியபடி சென்றுகொண்டிருந்தது. ஈரம் தடவிய காற்று முகத்திலறைய அவன் சற்று இமைகளை மூடித் திறக்கிறான். பக்கத்திலிருந்த வயதான பாட்டி 'அச்'என தும்மி கஷ்டப்படவே ஜன்னல் கண்ணாடியை இழுத்து மூடி சாய்வாக அமர்ந்து மனக் கண்களைத் திறந்தான்.

ஒன்றா, இரண்டா வருடங்கள்? மொத்தமாக இருபது வருடங்கள் ஊர் பக்கம் எட்டிப்பார்க்காத அவன்- பத்து வயதில் குடும்பத்தாருடன் பிறந்த ஊரை விட்டு வந்தது வந்ததுதான். இன்று முப்பது வயதில் இரண்டு பிள்ளைகளுக்கு அப்பாவாகி, குடும்பஸ்தனாகிவிட்டபின் இயந்திர கதியில் ஓடும் நகர வாழ்க்கைத் திரையைக் கிழித்து, ஒரு நாளாவது பிறந்த மண்ணைப் பார்த்து வருவோம் என எண்ணிய நிமிஷங்களில் மனைவி சொன்னாள், "சொந்தம் பந்தமென்று அங்க இப்போ யாருமில்ல. திரும்ப அங்கபோய் யாரைப் பார்க்குறது? அனாவசிய செலவும் பயண சிரமமும்." அவன் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான். உண்மைதான். உறவு சொல்ல ஒருவருமில்லை. ஆனால் உறவென்றில்லாது நட்பின் நாமத்திலான, பழக்கத்திலானவர்கள்- ஒரு சிலராவது இன்று அவனை நினைத்திருக்கக்கூடியவர்கள் இருப்பார்கள். நிச்சயமாக அந்த சிம்பு...! சிம்புவை நினைத்த கணங்களில் மனம் சுருங்கிய வேதனையுணர்வும், மலர்ந்த சந்தோச உணர்வும் ஒருங்கேயமைய, சற்று சிலிர்த்துக்கொண்டான். ஆமாம். அவனுடனேயே பாடசாலைக்குப் போய், பக்கத்தில் அமர்ந்து, ஆற்றில் ஒன்றாக நீந்தி, களவாய் மாங்காய் பிடுங்கி, பம்பரம் விட்டு விளையாடி, தும்பிக்கு நூலில் கல் வைத்து வாலில் கட்டி...பத்து வயதுக்குள்ளாக அவனுடன் அந்தந்த வயதுக்குரிய சுட்டித்தன செயல்களை ஒன்றுவிடாது செய்து மகிழ்ந்திருந்து...

'சிம்பு எப்படியிருப்பான்? என்னைப் போலவே உயரமாய், பருமனாய் பிள்ளைகளுக்குத் தந்தையாய்.. கடைசியாய் அவனைப் பிரிந்தபோது என்னுடன் கோபமாயிருந்தான். அரைக்காற் சட்டையும் வெளிர் சிவப்பு ஷேர்ட்டுமாக நின்றவன் கண்களில் கோபம் தெறித்தது. கையிரண்டும் பறித்த மாங்காய்களை பற்றிப்பிடித்திருக்க அவனை 'பெரியவர்' கை சந்தால் பற்றியிருந்தார். கையிலொரு பிரம்பிருந்தது. "சொல்லுடா யார் யார் வந்து மாங்காய் களவா பறிச்சீங்க?



சொல்லு, நீ மட்டுமா? மத்தவங்க எங்கே ஒளிஞ்சிருக்காங்க?' 'பெரியவர்' அவனை இரண்டு தட்டு தட்டினார். வலித்திருக்க வேண்டும். கையிலிருந்த மாங்காய்களை கைவிட்டு கண்ணீர்விட்டான். "நாய்ப் பயலுங்க. திரும்ப காலடி எடுத்து வையுங்க, காலை ஒடச்சு கையில தந்திடுவேன் ஆமா!" 'பெரியவர்' அவனை விட்டு நகர்ந்தார்.

காலின் கீழே கிடந்த காயை வேகமாய் எட்டி உதைத்தவன் தோட்டத்தைவிட்டு வெளியே வந்தவன்-இவனைக் கண்டு கொதித்தான். "ஏன்டா, பெரியவர் வர்றதை கண்டுட்டு எனக்கு சொல்லாமலே ஓடி வந்துட்டே. நீயெல்லாம் ஒரு நண்பன்! டீச்சர் சொன்ன கரடி கதைல வர்ற மாதிரி; இனிமே என்னோட பேசாதே."

சிம்பு விடுவிடென நடக்க இவன் பின்னால் ஓடினான். "மன்னிச்சிடு சிம்பு. அந்த நேரத்துல என்னால என்ன செய்யுறதுன்னு தெரியல. அதான் ஓடி வந்துட்டு, பிறகுதான் யோசிச்சேன்..." இவன் கெஞ்சினான், மன்றாடினான். சிம்பு பேசவேயில்லை.

இரண்டு நாள் கழித்து மீண்டும் சிம்புவும் இவனும் 'மறப்போம், மன்னிப்போம்' பாணியில் தோளில் கை போட்டபடி,

'பெரியவரை' நினைத்தபோது அவரது பெரிய மீசைதான் முதலில் நினைவுக்கு வந்தது. ஊரிலேயே பணம் நிறைய வைத்திருப்பவர். கர்வம், திமிர் உடைய மனம். செயல்களும் அந்த மாதிரிதான். மா, தென்னை, பலா, கோப்பி, கராம்பு, வாழை என ஏக்கர் கணக்கில் தோட்டத்து சொந்தக்காரர்; நெல் வயல்களும் அனேகம். தமிழ் சினிமாவில் வரும் ஜமீன்தார்போல. ஆயிரக் கணக்கில் பழமாக விளைந்திருந்த அந்த மாங்காய்த் தோட்டத்தில் இரண்டு காய்கள் பிடுங்கிய குற்றத்துக்காக சிம்புவை பிரம்பால் அடித்த கல் மனம். இவனால் மிகவும் வெறுக்கப்பட்டவர்களில் 'பெரியவருக்கு' முதலிடம் கொடுக்கலாம்.

இவனது அப்பாவுக்கு அரசாங்க உத்தியோகம். காலத்துக்கு காலம் இடம் மாற்றுவார்கள். அப்படித்தான் அந்த ஊரிலிருந்த போது இவன் பிறந்தான். பத்து வயதாகும்போது மீண்டும் இடமாற்றம். அதன்போதுதான் சிம்பு மற்றும் ஊரைவிட்டு விலகி வரவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அரசாங்க உத்தியோகத்துக்காரரான அப்பாவிடம் பெரியவருக்கு மதிப்பிருந்தது. இவனைக் கண்டால் 'பயலே' என்றபடி அருகில் வருவார். "அப்பாவைக் கேட்டேன்னு சொல்லு." அவர் சொல்வதை கண் மூடாமல் பார்த்திருப்பான். முன் வரிசை பற்களில் முதல் இரண்டும் பெரிதாக, காவி படிந்து- உதட்டின் மேல் மீசை-மேல் போய் கீழிறங்க- மீசையால் பேசுவதைப் பார்க்க வேடிக்கையாகவிருக்கும். சரியென்று சொல்ல இவனுக்கு மனசு வராது. தலையை மட்டும் ஆட்டியபடி ஓடுவான். பெரியவருக்கு 'சிம்புவை' பிடிக்காது. தன் வயலில் வேலை செய்து தகராறொன்றில் கோபித்துப்போய் அடுத்த ஊரில் வேலை தேடிய சிம்புவின் அப்பா மீது கடுங்கோபம். அதை பையன் மீதும் காட்டுவார்.

நினைவுச் சுழலில் இருந்து அவனை விடுவித்தது பஸ்ஸின் நிறுத்தம். இறங்கியவன் தடுமாறிப் போனான். இருபது வருடத்திய மாற்றங்கள்! பழையன கழிதலும் புதியன புகுதலும்-மாற்றங்களை ஏற்படுத்தியதான காலத்தின் சுழற்சி.

கடைவீதியில் தென்பட்ட மனிதர்களில் ஒருவரைத் தட்டி சிம்பு பற்றி விசாரித்தபோது புன்னகைத்தார். "வாங்கோ" என கையோடு கூட்டிப்போனார். என்ன இது! திகைத்துப் போனான். 'பெரியவரின்' பெரியவீடு. முன்பைவிட அழகாக.. கவர்ச்சிகரமாக.. வாசலில் இரண்டு லொறிகளுடன் நின்றது. 'இங்கேதான் சிம்பு..வேலை செய்கிறானோ? பெரியவருக்கு அவனை ஆகாதே! சிம்பு படிக்கலியா? தொழில் ஏதும் தேடிக்கவில்லையா? இடைக் காலங்களில் விட்டுப்போன தொடர்பு. எதுவுமே சரியாத் தெரியலையே!' மனதுக்குள் எண்ணங்கள் பலவிதம்.

சிம்புதான்- விலையுயர்ந்த கருங்காலி நாற்காலியில் உட்கார்ந்தபடி, பக்கத்தில் 'பெரியவரின்' ஒரே மகள் ராணி. உருண்டோடிய நிமிஷங்களில் சிம்பு சொன்னகதை வியப்பில் ஆழ்த்தியது. நோயில் நொடிந்து வைத்திய செலவில் செல்வம் கரைய 'பெரியவர்' தராதரம் இறங்கி இறந்துபோக, படித்து உரிய தொழில் செய்து பணம் சேர்த்த சிம்பு, அவர் மகளைக் கைப்பிடிக்கும் வாய்ப்புக் கிட்ட...சிம்பு தட்டில் வெட்டி வைத்த சுவைமிகு மாங்காயைப் பார்த்தபடி இவன்! ●



# பிரிவுக்கு நன்றி

அலைகள் மீது புரண்டுவந்த ஈரத்தென்றல் கூந்தலை கோதிவிட்டுச் சென்றது.

அவள் அருகே இருந்தவனுக்கோ அந்த தென்றல்மீது கோபம் வந்தது.

வாய்விட்டுச் சொன்னான்,

"தென்றலும் வில்லன்தான்."

கூந்தலை தன் பட்டுவிரல்களால் தொட்டுச் சரிப்படுத்திக்கொண்டு, சற்றே முகம் திருப்பி, மொழி உதிரும் இதழ் திறந்து,

"யாரை வில்லன் என்றீர்கள்?"

"தென்றலை!"

"தவறு!"

"என்ன தவறு?"

"சேவகனைப் போய் வில்லன் என்று சொல்வது தவறுதானே!"

பொறாமையாகப் பார்த்தான். எச்சரிக்கும் மீசைக்கு கீழே இருந்த தடித்த உதடுகளில் புன்னகைக்குப் பதிலாக புகைச்சலான வார்த்தைகள் உற்பத்தியாகின.

"எந்தனுக்கு சொந்தமான உன்னை தீண்டுவதற்கு தென்றலுக்கு உரிமை யார் கொடுத்தார்?"

சினக்கவைத்து ரசிக்க நினைத்தாள். எனவே சொன்னாள்:

"யாரும் கொடுக்கவில்லை. நான் தான் கொடுத்தேன் அந்த உரிமையை!"

பதில் கேட்டதும் சில நொடிகள் உதடு துடிக்க, விழிகள் உருட்டி முறைத்தான். அதன் பின்னர் சொன்னான்:

"தவறு என்மேலே தானடி!"

"அது என்ன தவறாம்?"

"சென்ற இடத்திலே தேவ மங்கையர். நான் மட்டும் நினைத்திருந்தால் அந்த சுந்தரிகள் என்னை தூக்கியே சென்றிருப்பர் சொர்க்கலோகத்திற்கு!"

அவள் இதழ்களால் கேலிக் குறி காட்டினாள்.

"இவர் ஒரு மன்மதன். இவர் பின்னால் பித்தாகி அலைவார்களாக்கும் பெண்கள்."



# இலக்கிய நயம்



## தருவது ரசிகன்

"அதிலென்ன சந்தேகம்? விழி யசைத்தால் போதும் பருவ எழில் அசைத்து என் பின்னால் வர காத்திருந்தனர் கட்டழகிகள் பலர். நெய் உள்ள பாத்திரத்தை சுற்றிவரும் எறும்புகள் போல என்னையே சுற்றிச் சுற்றி வந்தனர் இதழ்களில் அரும்பும் புன்னகையோடு பூந்தளிர் மேனியர் பலர்!"

"கைக்கெட்டியபோதும் வேண்டாம் என்று தட்டிவிட்டு ஓடி வந்துவிட்டீர்களாக்கும்."

"உண்மை!"

"போனால் போகட்டும் என்று காதலித்து தொலைத்தேன் நான் என்றால், அவர்களுக்குமா கண்கள் இல்லாமல் உங்கள் பின்னால் வரப் போகிறார்கள்?"

கேலி செய்து குலுங்கிச் சிரித்தாள். தென்றல் வீசியதில் மேலாடை சற்று விலகிவிட, அங்கே அவன் விழிபட்டு சிந்தையிலே மோகத் தீ விழித்தது.

அவன் விழிகள் தடுமாறும் நிலை கண்டு மேலாடையை சரிசெய்து கொண்டாள். அவனுக்கோ ஏமாற்றம்.

"பசியிருந்த கண்களுக்கு திரை போட்டு தடை எதற்கு?"

"சென்ற இடத்திலெல்லாம் பசியாறும் கண்களுக்கு இனி என்ன வேலை இங்கு?"

"கையிலே உண்டு வெண்ணெய் என்று நெய் தேடி அலையாமல் நீண்டநாள் விரதமிருந்து, அழகு ரதம் காண ஓடிவந்த எனக்கெதற்கு தண்டிப்பு?"

"நம்பமாட்டேன்!"

"நான் தாங்க மாட்டேன்!"

"மினுக்கி வந்த தளுக்குக்காரிகளை விழி திறந்து ரசிப்பதிலேதான் திரும்பிவர ஆனதுவோ நீண்டநாட்கள்?"

நகர்ந்து சற்றுத் தள்ளி அமர்ந்தாள். அவன் தானும் நகர்ந்து அவளை நெருங்கி அமர்ந்தான். அவள் கோபம் போல மேலும் தள்ளி விலகி அமர்ந்தாள்.

அவள் கரம்பிடித்து தடுத்தபடி அவன் நெருங்கி அமர்ந்தான். அவள் விரல்களை தன் விரல்களால் நீவியும் விட்டான்.

அவள் கேட்டாள்,

"இப்படித்தான் அந்த மாயவிழிக்காரிகளின் விரல்களுக்கும் வித்தை காட்டினீர்களாக்கும்."

அவள் முறைத்தாள்.

"காய்ந்த மாடு எங்கு விழும்?"

"கம்பிலே விழும்!"

"அப்படியானால் நான் என்ன கம்போ? கண்டவள் அழகையெல்லாம் கண்ணாரப் பருகிவிட்டு என்னை கம்பென்றோ கருதிவிட்டீர்?"

உதவியாய் அமையும் என்று சொன்ன உதாரணம் உபத்திரவமாய் போய்விட்டதை அறிந்து அவன் கலக்கமுற்றான்.

"கனிமரத்தை கம்பென்று சொல்ல மனம் வருமோ? கண் உணடு. களிக்கின்ற மனம் உண்டு. பழிக்கின்ற மொழி வருமோ என் உதட்டில்?"

தோளில் தொட்டான். தொட்ட கரம் சற்று இறங்கியது தவழ்ந்து.

கரத்தை தடுக்கவில்லை அவள்! அவன் கருத்தை மட்டும் மறுத்துரைத்தாள்.

"காரியம் ஆவதற்கு ஆரியக்கூத்து ஆடுவீர்கள். உதடெல்லாம் பொய்!"

"நான் சொன்னால் நம்பமாட்டாய். நீயே கேட்டுப்பார் உன் இதழால்"

அவன் சொன்னதின் பொருளை அவள் உணரமுன்னரே, அவளின் முகம் திருப்பி இதழ்களை தன் உதட்டால் எடுத்துக் கொண்டான்.

மறுப்பில்லை. அவன் பின்தலையில் தன் இரு கரங்களால் அமுத்திக்கொண்டாள். மேல் இதழ் பிரித்து அவன் உதட்டை விசாரித்தாள்.

வரவேற்பு உண்டு என்று இதழ் ஏற்பு சாட்சி சொல்ல, அவன் கரம் எழுந்து மேலாடை திரை விலக்கியது.

அவள் இதழ் சிவப்பு அவன் உதட்டில் இடம்மாறியதோ என்று நினைக்கும் விதமாக அமுதுண்டு முடித்துவிட்டு,

சங்கு கழுத்தில் இறங்கிய உதடுகள் மெல்லத் தவழ்ந்து இரு மலைகளது இடையினிலே இறங்கி விஷமம் செய்ய,

நெருமூச்சு அவள் விட்டு, அவன் முதுகின் மத்தியிலே தன் இருகரமும் கோர்த்து இறுகணைத்தாள். இதழ் துடிக்க முகம் உயர்த்தி வான் பார்த்தாள்.

"அய்யய்யோ இல்லை இல்லை."

"அப்படியானால் அங்கு வேறு வித்தையாக்கும்."

"சத்தியமாய் நான் சொன்னதெல்லாம் பொய்!"

"எப்படியாம் நம்புவது?"

"காய்ந்த மாடு போல நான் வந்து விழும் இந்த நிலையே போதுமன்றோ நீ நம்புவதற்கு!"

அங்கு நிலவிருந்தது. அவர்கள் நிலை ரசித்துக்கொண்டிருந்தது.

"சீ..... போ....."

என்றாள் வெட்கத்தில் தனை மறந்து நிலவைப் பார்த்து.

பின் முகம் கவிழ்ந்து அவன் கழுத்தில் இதழ் பதித்தாள். மறு நொடியே அவன் விஷமம் தாங்காது கூச்சத்தால் உடல் நெளிந்து அவன் காதுமடல் பிடித்துத் திருகினாள்.

அவன் நிமிர்ந்து,

"என்ன?"

என்றான் கிறக்கத்தில் செருகிய விழிகளுடன்!

"காய்ந்த மாடு உதாரணம் சரிதான்."

என்றாள் மோக நெருப்பை வளர்த்து விடும் வண்ணமாக குறும்புப் புன்னகையோடு.

"பிடிக்கவில்லையா?"

என்றான்.

பதில் பேசாமல் இருந்தாள்.

"அப்படியானால் சரிதான்."

அவன் விலகுவது போல் நடித்தான். அவள் கரம்நீட்டி அவனை தன்னை நோக்கி இழுத்து,

"கோபமா?"

என்று கேட்டாள்.

"எனக்கு மட்டும்தான் தாகமா?"

என்று அவன் கேட்டான்.

"இதற்குப் பதில் தேவையா?"

அவள் வினா தொடுத்தாள்.

"ஆம்!"

"சொல்லமாட்டேன்!"

"ஏன்?"

"பதில் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை!"

"வேறெப்படித் தெரியுமாம்?"

"பரிமாறும் விதத்தில் தெரியும்!"

"தெரியவில்லையே!"

"இப்போது தெரியும்!"

வண்டை மூடியது மலர். திண்டாடிப் போனது வண்டு.

பிரிவின் இடைவெளிதான் மலரின் நாணத்திரை விலக காரணம்.

பிரிந்திருந்த இத்தனை நாட்களும் தனித்திருந்த உடல் மாறியது நிறம். தவித்திருந்த மனம் தாகம் தீர தாவிக் கொண்ட இந்தப் பொழுதுதான் இதம்.

எப்போதும் சேர்ந்திருந்தால் உள்ள சுகத்தைவிட, இடையிலே பிரிந்திருந்து தவிப்பில் விழுந்திருந்து மீண்டும் சேரும் சுகம் கோடி பெறும்.

ஆல மரம், வளர்வதுபோல காதலின்பம் வளர்வதற்கு பிரிவொன்றே சிறந்த வழி.

மலரின் சிறைக்குள் மாட்டிக் கொண்ட வண்டின் மனம் தனக்குள்ளே மகிழ்ந்து நினைத்தது.

இதனைத்தான் 'நாலடியார்' என்னும் கடைச்சங்க காலத்து தமிழ் நூலில் ஒரு பாடல் விளக்கி நிற்கிறது. அந்தப் பாடல் இதுதான்:

**முயங்காக்கால் பாயும் பசலைமற்று ஊடி**
**உயங்காக்கால் உப்பின்றாம் காமம்-வயங்கு ஒதம்**
**நில்லாத் திரையலைக்கும் நீள்கழித் தண்சேர்ப்ப**
**புல்லாப் புலப்பதோர் ஆறு."**

அதிகாரம்-40, பாடல்-391.

## குறுக்கெழுத்துப் போட்டி இல—83

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | ■ |
| | ■ | 3 | | | ■ | 4 |
| 5 | 6 | | | ■ | 7 | |
| ■ | | ■ | 8 | | | ■ |
| 9 | | ■ | | ■ | | ■ |
| | ■ | 10 | | | | |
| 11 | | | ■ | 12 | | |

### இடமிருந்து வலம்

1. கட்டிடத்தின் உறுதிக்கு இது அவசியம்.
3. வெற்றிலையோடு இது கூட்டுச் சேர்ந்தால் சுவைதான்.
5. மனிதர்களுக்கும் இதற்கும் ஒரு வரலாற்றுத் தொடர்பு இருக்கிறது.
8. இது நின்று விட்டால் உயிர் போச்சு என்பார்கள்.
10. இசைவு தெரிவிப்பதை இப்படியும் அழைக்கலாம்.
11. கத்தியைத் தீட்டுவதற்குப் பதிலாக இதனைத்தான் தீட்ட வேண்டும் என்பார்கள்.
12. இலங்கையின் இனப்பிரச்சனை தொடர்பான பேச்சுவார்த்தை இங்கும் நடந்திருக்கிறது.

### மேலிருந்து கீழ்

1. இது ஒரு தொழிலாளகவும் நடத்தப் படுகிறது.
2. வழக்கிற்கு இதுவும் உதவும்.
4. உயரச்செல்ல இதுவும் உதவும்.
6. குழப்பம் என்பதை இப்படியும் அழைக்கலாம்.
7. சுத்தத்தின் எதிரி.
9. இதுவும் ஒரு ஆபரணம்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 14.01.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-83**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல. 1772**
**கொழும்பு.**

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-81க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 நா | ண | ல் | ■ | 2 ப | க் | 3 தி |
| ர | ■ | 4 க | ட | ப் | பா | றை |
| 5 த | ட | ங் | க | ல் | ■ | ■ |
| ர் | 6 ப | கை | ■ | ■ | 7 ஆ | 8 வி |
| ■ | ண | ■ | 9 பூ | ச் | சா | டி |
| 10 கு | ய | வ | ன் | ■ | ■ | ய |
| 11 கை | ம் | மை | ■ | 12 கு | டி | ல் |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.81இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. எஸ். பிரேமானந்தன் வவுனியா.
2. பாத்திமா பாயிஸா கல்பிட்டி.
3. எஸ்.எம். யூசுப் நமுனுகுல.
4. திருமதி. ஆர்.சுஜாதா ஹெந்தளை.
5. நிர்மலா செல்வரெட்ணம் கொழும்பு-15.
6. வி.குருநாதன் ஆலங்குடா.
7. ஏ.எம். றிஸ்வானா பாணந்துறை.
8. ஏ.ராஜமலர் திருமலை.
9. செல்வி. ஐ.சுபீலா நுவரெலியா.
10. கே. சதீஸன் அக்கரைப்பற்று-8.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

சமீபத்திய இடைக்கால தேர்தல் தோல்வியால் இந்திய பிரதமர் நரசிம்மராவின் தலைமைக்கு ஆபத்து ஏற்படுமா?

சுப்பையா கலைசந்திரன்-கந்தப்பளை.

எதிர்வரும் மார்ச் மாதம் 5 மாநிலத் தேர்தல்கள் அவர் தலைமைப் பதவிக்கு மேலே தொங்கும் கத்திகள் போல காத்திருக்கின்றன. தோல்வி ஏற்பட்டால் அந்தக் கத்திகள் நேரே இறங்கும்.

••

சமீபத்தில் தாங்கள் ரசித்த அரசியல் ஜோக் என்ன?

ஆர்.மர்சூக்-கல்முனை.

அரசும்-புலிகளும் பாதைத் திறப்பு விடயத்தில் விட்டுக்கொடுப்போடு நடந்துகொள்ள முன்வந்துள்ளதாக தெரிகிறது. புலிகள் ஆனையிறவு இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டும் என்று மட்டுமே கூறுகிறார்கள். அரசு அதற்குத் தயாராக இல்லை என்று தெரிகிறது. இவ்வாறான அர்த்தத்தில் முன்னுக்குப்பின் முரணாக வெளிவந்த பத்திரிகைச் செய்தி ஒன்று ரசித்து சிரிக்கக் கூடியதாக இருந்தது.

••

கதாநாயகன் சத்யராஜ், வில்லன் சத்யராஜ், காமடி சத்யராஜ் மூவரில் யாரை உங்களுக்குப் பிடிக்கும்?

எஸ்.சந்திரகலா-கண்டி.

கதாநாயகத்தனத்தோடு, வில்லனுக்கு வில்லனாய் வேகம் காட்டும் அதிலும் நகைச்சுவையைப் பூசி மெருகேற்றும் சத்யராஜ் என்றால் பிடிக்கும். உதாரணமான படங்களில் ஒன்று ஏர்போர்ட்.

••

## எட்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டின் சாதனை?

சமீபத்தில் வெளியான பாடல்களில் தங்களை கவர்ந்த பாடல் வரி எது?

ஆர்.உதயச் சந்திரன்-அவிசாவளை.

கவர்ந்தது- அவருக்கு நான் அழகு
கவராதது- விடியும் வரை பெண்ணழகு.

••

டியர் சிந்து, வடக்கு பேச்சுவார்த்தையைப் பற்றிய உமது கருத்தென்ன?

எஸ்.ஐ.நிலாம்தீன்-கம்பிரிகஸ்வெவ.

"நடக்கும் என்பார் நடக்காது, நடக்காது என்பார் நடந்துவிடும்."

••

காதல் தோல்விகள் ஏன் ஏற்படுகின்றன?

வி.ஆமிஷா-ஹட்டன்.

சோகம் நிரம்பிய காப்பியங்கள், கதைகள், கவிதைகள் போன்றவற்றை உற்பத்திசெய்ய கருவேண்டுமல்லவா அதற்காக!

••

உதைபந்தாட்ட வீரர் மரடோனா இப்போது என்ன செய்கிறார்?

மா.குலேந்திரன்-மட்டக்களப்பு.

புதிய வீரர்களுக்கு பயிற்சியளிக்கிறார். உள்ளூர் போட்டிகளில் கூட அடிக்கடி அபராதம் கட்டிக்கொண்டிருக்கிறார். மரடோனா என்றால் பிரச்சனை என்று அர்த்தமாகிவிட்டது.

••

தற்போதைய படங்கள் நூறு நாட்கள் ஓடுவதே கஷ்டமாகிவருவது ஏன்? ரசிகர்கள் திரையரங்கம் செல்வது குறைந்து வருவதனாலா?

எஸ்.செபஸ்டின்-நீர்கொழும்பு.

'ஜுராசிக் பார்க்' கொழும்பில் இருநூறு நாளைத் தாண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. இப்போதும் கூட்டம் அலைமோதுகிறது. மக்களுக்கு பிடித்தமான முறையில் படம் எடுத்தால் திரையில் நிலைத்து ஓடும். இல்லாவிட்டால் திரையரங்கை விட்டு ஓடும்.

••

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் நம் நாட்டவர்களுக்கு புறக்கணிப்பு நடந்தது ஏன்?

ஆர்.தாமோதரன்-திருக்கோணமலை.

தமிழாராய்ச்சி மாநாடு தமிழக முதல்வரின் புகழாராய்ச்சி மாநாடு என்று அங்குள்ளவர்கள் நினைத்ததுதான் காரணம். அதனை நியாயப் படுத்தி பேசவும் இங்கு சிலர் இல்லாமல் இல்லை.

••

எட்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டின் சாதனை என்ன?

ஏ.ஜேக்கப்-கொழும்பு-7.

எட்டாத உயரத்தில் தமிழக முதல்வரின் 'கட்அவுட்'டுக்கள்.

••

புத்தாண்டு சமாதானத்தை கொண்டுவருமா?

கே.மாதவி-குருணாகல்.

அது ஆண்டின் கையில் இல்லை. ஆள்பவர்களின் கையிலும், அரசியல் தலைமைகளின் கையிலும்தான் இருக்கிறது. அவர்கள் மனம் வைத்தால் வரும், சமாதானம்!

••

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தொடர்ந்து நடிப்பாரா?

எம்.கேசவன்-கண்டி.

அந்த சிங்கத்துக்கு தீனி போடத்தான் பாரதிராஜா 'பசும்பொன்' படத்தில் நடிக்க வைத்திருக்கிறாரே!

**பக்கம் 13ல்—**
**அந்த 7 வித்தியாசங்கள்**

1. ஆணின் முடி
2. சட்டையில் உள்ள எழுத்து
3. விளம்பர டிசைன்
4. பெண்ணின் செயின்
5. ஆணின் புருவம்
6. பெட்டியின் டிசைன்
7. மேசையின் பிடி

www.padippakam.com


# மகாபாரதம்

அங்கம் 62

**இவ்வாரம் (08.01.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்:
ஒருவர் தன் கடமையை உணர்ந்து கொள்ளுதல் பெருமை தருவது பேராளர்க்கே! திருதராட்டிரன் மன்னவர்க்குரிய மாண்பினைத் தன் மகன் துரியோதனன் தன் பாசப் பிணைப்பினில் புதைத்து விட்டதனால் பண்பும் துறந்தனன்; பாதை பிழைத்தனன். உண்மை நிலையினை உணர்ந்த உத்தமி காந்தாரியாமவள் கண்ணியமானவள்; பாண்டவர் தம்மை தன் மகன் துரியன் வேண்டி விளைத்த கொடுமைகளுணர்ந்து நீதியும் நேர்மையும் நிலைபெறத் துடிப்பவள்; தந்தையும் மைந்தனும் தீமை புரிவதைத் தடுத்திட முடியா(து) தனித்தேங்குகிறாள்!

–காட்சி தொடக்கம்–

திருதராட்டிரரிடம் விதுரர் வருகிறார்.

விதுர: வணக்கம் மன்னவ! இல்லம் செல்வழி இடையினில் தங்கள் தகவலறிந்துடனோடி வந்துள்ளேன்!

திருத: முக்கிய தகவல் இருப்பதனால்தான் உடனே அழைத்தேன், இருக்கையில் அமரும்!

விதுர: தாங்கள் அமரா நிலையில் நானிங்கு அமருதல் நலமோ?

திருத: சம்பிரதாய முறைகளைத் தவிர்த்து அமர்ந்து கொள்ளும், தம்பியின் மைந்தன் யுதிஷ்டிரன் இங்கே தானே வராமல் தூதனை அனுப்பிய காரணம் எதுவோ?

விதுர: தங்களுக்கேதும் தடுமாற்ற உணர்வு தலைதூக்காமல் இருப்பதற்காகவும் இருக்கலாமன்றோ?

திருத: முன்பவர் சூதில் இழந்தவையெல்லாம் பின்பு நான் அவரிடம் சேர்த்தவன் தான் ஏன் தடுமாறப் போகிறேன்?

விதுர: திரௌபதி தன் துகில் களைந்ததன் போது தடுத்திடத் துணியா திருந்ததனாலே அன்னவள் சாபம் அளித்திடலாமெனும் அச்சமும் தோன்றியிருக்கலாம் அல்லவா?

திருத: தம்பியென்பதனால், தரமற்ற வார்த்தை பிதற்றிய உன் தலை கொய்யாதிருந்தேன்! பாரத வம்ச மன்னவனான என்னைக் கோழை என்றா நினைத்தாய்?

விதுர: இந்த நாட்டின் உயர்வினை உன்னியே உண்மையை உரைப்பது மந்திரியாகிய எந்தன் கடமை! அஸ்தினாபுரியின் நலன்தான் தங்கள் நலனதுவாகும் என்பதை நினைத்தே நடப்பது தங்கள் நற்கடனதுவாகும்!

திருத: மன்னவர்க்குரிய கடமை உணர்வேன்; தந்தையின் நிலையினில் மைந்தனுக்கும் அவர் சொந்தக் கடமையும், இருப்பது பொய்யா?

விதுர: மன்னவன் ஒருவன் தன் மகன் போலவே குடிமகனெவனையும் கருதுவ தவசியம்! பாண்டு மன்னவன் உயிருடனிருந்தால் இந்தச் சிக்கலுக்கிடமேயில்லை. இன்றுள்ள நிலையினில் யுதிஷ்டிரன்தான் நம் குலத்தினில் மூத்தவன். அன்னவன் அனுப்பிய தூதுவன் கூறும் கூற்றுகள் அறியுமுன், அன்னார் தம்மை அன்புடன் அழைத்து, இந்திரப் பிரஸ்தம் தன்னையும் அளித்து, அமைதி நிலை பெற அருவழி தேடுக!

திருத: யுதிஷ்டிரன் நேராய் இங்கு வந்துற்றால் அதுவே எந்தன் ஒரே முடிவாகும். தூதனை அனுப்பி வேவு பார்த்ததால் தீர்க்கமுடன் நான் துருவி ஆய்ந்தபின் உரிய முடிவினை உரைக்கிறேன் பாராய்!

–காட்சி மாற்றம்–

பீஷ்மரின் அரண்மனை–விதுரர் வருகிறார்.

விதுர: தாத்தா ஏனோ தூக்கமதின்றி தவிக்கின்றீர்கள்?

பீஷ்: அஸ்தினாபுரத்தின் அமைதி வாழ்வினில் அக்கறை கொண்ட எவரும் இன்று நிம்மதியாகவே உறங்கிட முடியுமா? யுதிஷ்டிரன் தூதனை அனுப்பிய சம்பவம் எதேஷ்டையான இயல்புடைச் செயலா? நம் நாட்டினை நாடியே நாச ஒலியது நகர்ந்தே வருவதை நானுணர்கின்றேன். மாண்டு வீழ்ந்துற்ற மனிதப் பிணங்களின் மத்தியில் நிற்பதாய் என் மனம் தோன்றுது. நாட்டுப் பற்றுள்ள நம்மவர் தம்மை ஒதுக்கியே வைத்திடும் நிலை நலமானதா? இந்த வேளை நீ எங்கே சென்றாய்? என்பதைக் கூறு.

விதுர: அவசரமாக அரசர் அழைத்தார்; யுதிஷ்டிரன் தன் முன் தான் வந்திருந்தால் இந்திரப் பிரஸ்தம் அளித்திருப்பாராம்! தூதனை அனுப்பிய காரணத்தாலே தாமதமாகவே முடிவெடுப்பாராம்!

பீஷ்ம: தாமதமாவதில் தீதே விளைந்திடும்! கவுரவ குலத்தின் தலைமகன் நான் எனப் பெயரால் மட்டுமே எனக்குள்ள பெருமை! என்னை எவரும் மதிப்பதேயில்லை! பாலைவனத்திலே பேரொலி போன்றே என் குரல் ஒலிக்கும். அஸ்தினாபுரத்தைக் காப்பதற்கின்று காவலரெவரும் களத்தினிலில்லை!

–காட்சி மாற்றம்–

திருதராட்டிரருக்கு தோழி அலங்கரிக்கும் வேளையில் காந்தாரி வருகிறார்.

காந்: (தோழியிடம்) தனிமையில் எங்களை விடுத்துடன் நீங்குக!

திருத: அவர்களையெல்லாம் அனுப்பிவிட்டாலென் சிரசினில் கிரீடம் சரியாயிருப்பதை யாரறிந்துரைப்பார்?

காந்: தங்கள் தலையினில் கிரீடம் நிலைத்தே தங்கியிருக்குமா என்பதை எண்ணுக! துரியோதனனவன் எம் மகனாவான். பிள்ளைப் பாசம் எனக்குமுண்டு. யுதிஷ்டிரனுக்கு முன்னவனாக இவன் பிறந்திருந்தால் சிக்கலேயில்லையே! தங்கள் தலையினில் தரித்துள்ள கிரீடம் தம்பி பாண்டுவின் தனிச் சொத்தல்லவா? இந்த உண்மையை உணர்ந்தே தாங்கள் எந்த முடிவையும் ஏற்பதே அறமாம்! எம்முன்னோர் வகுத்த வழிமுறை தவிர்த்து பின்னே தோன்றும் வரலாறு தூற்றும் நெறிகளை நாடுதல் நன்மை எதையும் நல்கிடா துணர்க!

திருத: எதற்காக நீ இதனைச் சொல்கிறாய்? இப்போதெந்த வழிமுறைதன்னை நானேற்க வேண்டுமோ?

காந்: எத்தகை முடிவினை அளிக்கவுள்ளீரென நினைத்ததனாலென் தூக்கமும் மறந்தேன். குந்தியின் மைந்தரை அழைத்தவர் நாடாம் இந்திரப் பிரஸ்தம் தனைக் கொடுத்தாலும், மைந்தர் தம் மனையாள் திரௌபதி மானம் பறித்த துயரினை என்றுமே அவர் மனம் மறந்திட முடியுமோ? எப்படியாயினும் இவ்விழி செயலினை மறந்து எம் புதல்வரை மன்னிக்க வைக்கும் மார்க்கம் தேடுதல் முக்கியமாகும்!

–காட்சி மாற்றம்–

அஸ்தினாபுரி அரசவை.

திருத: என் மகன் யுதிஷ்டிரர் ஏவிய தூதரை இங்கே அழைத்து வருக இப்போது.

தூதர் வந்து வணக்கம் தெரிவிக்கிறார்.

தூதர்: வாழ்க மன்னவ! வாழ்க நன் மக்கள்! பாஞ்சால நாட்டின் தலைமைக் குருநான்! பாண்டுமாமன்னவன் மூத்த திருமகன் யுதிஷ்டிரன் வாழ்த்துடன் வந்துள்ளேன் யான்.

திருத: என்னுடை வாழ்த்தையும் அன்னவர்க் களித்திடும். என் மகன் சொன்ன செய்தியைக் கூறுக!

தூத: பன்னிரண்டாண்டுகள் கானகம் சென்றும் பதின்மூன்றாமாண்டினில் மறைவினிலிருந்தும் பகடையில் சொன்ன நிபந்தனை முழுவதும் முடித்துள்ளனராம். மீண்டும் வந்து தங்களின் ஆசியைப் பெற்றபின் அவருடை இந்திரப் பிரஸ்தம் ஏகிடத் தங்கள் அனுமதி கோரியே எந்தனை அனுப்பினர்.

துரி: ஆட்சியை மீட்டிட அருகதை எதுவும் அவர்களுக்கில்லை. கரந்துறை காலக் கெடுவது முடியுமுன் சமரிட வந்தான் அர்ச்சுனன்; அதனால், மீண்டும் கானகம் ஏகிட ஏற்றதே அவர் நிலை! மதிப்பையும் மானந் தன்னையும் மறந்தவர் தூதனாய் உம்மை அனுப்பி வைத்தனரோ?

தூத: அரசரே உங்கள் ஆணைதான் தேவை!

திருத: அஞ்ஞாத வாச கால முடிவினை நிர்ணயிப்பதில்தான் சிக்கலெழுந்தது. காலக் கெடுவது நீங்கிய பின்னரே போர்முனை மோதல் எழுந்தது என்று கூறுவர் சிலரும், மாறுபாடான கணக்கினைக் கூறி அதுவே சரியென வாதிப்பவரும் மோதுகின்றனர் முடிவெதுமின்றி!

தூத: கங்கையின் மைந்தரும் குலகுரு கிருபரும் கருதுவதெதுவோ?

துரி: தூதுவராக வந்துள்ள உமக்கு ஏதுவானதோர் காரியம் இதுவோ?

பீஷ்: வயதினில் முதிர்ந்தவர், அறிவினில் சிறந்தவர், சான்றோரான பெரியவர் தம்மை இழிவது செய்திடல் ஏற்புடைத்தன்று. மன்னருடன் அவர் உரையாடுகையில் இப்பின்னவர் புகுதல் போற்றலுக்குரிய பண்பதுமல்ல.

தூத: பண்பு என்பது பரம்பரை சொத்தோ?

கர்ண: தூதுவனாக வந்த நீர் அந்தணன் என்பதால் உம்முயிர் தப்பிப் பிழைத்தீர்! பட்டத்துக்குரிய மன்னவர் புதல்வனை மதியாதிழிவு செய்த உம் சிரசினை தூதுவனென்பதால் காத்திட முடிந்தது. பாண்டவர் மீண்டும் கானகம் ஏகிட காலம் தாழ்த்தாதேகிட நாங்கள் பணித்துவிட்டதாய் அவரிடம் கூறுக...

தூது: மன்னரே! தங்கள் முன்னிலை தன்னில் மற்றவர் பேசிட மௌனம் காக்கிறீர்! மத்சய நாட்டுப் போரினில் பாண்டவர் கவுரவ வீரரைக் காண்பதன் முன்னரே கரந்துறை காலம் கழிந்தே ஒழிந்தது. கங்காபுத்திரர், துரோணாச்சாரியார், குலகுரு கிருபாச் சாரியாருடனே விதுரர் மகாத்துமன் ஆகிய அறிஞர்கள், அஞ்ஞாதவாச காலக்கெடுவது முடிந்திலை என்றால் பாண்டவர் மீண்டும் கானகமேகிட தயங்கிடமாட்டார்.

திரு: குலகுரு கிருபாச் சாரியாரவரே நிலை எது சரியென இயம்பிடவேண்டும்!

கிரு: சூரியசந்திரர் காலக் கணக்கினில், கவுரவ சேனை காண்டீபன் கணையினை காண்பதன் முன்னமே கரந்துறை காலக் கெடுவும் முடிந்தது!

துரி: உணவினை ஊட்டும் கரத்தினைக் கடிக்கும் கயமைத் தனமதாய் குலகுரு கூறும் கூற்றினை இந்தக் கோமகன் ஏற்கப் போவதேயில்லை! அஞ்ஞாத வாச காலக் கெடுவது அற்றுப்போய் விட வில்லை என்பதே என்னுடை கணக்கின் உண்மையுமாகும்!

தூத: அரசே! தங்கள் அவையினில் கேட்ட புனைகதை தானோ தங்களின் பதிலாய் பாண்டவரிடம் நான் சென்று உரைப்பது?

திரு: அவ்வாறெதுவும் அவரிடம் கூறுதல் அர்த்தமதாகா! என்னுடை பதிலுடன் பின்னொரு தூதனை அனுப்பி வைப்பேன் யான்!

–காட்சி மாற்றம்–

திருதராட்டிரன் அரண்மனை–மன்னவரின் தேரோட்டி சஞ்சயன் வருகிறான்.

திரு: வாரும் சஞ்சய! வரவினை நானே எதிர்பார்த்திருந்தேன்!

சஞ்: தங்களை வணங்கி முகமுன் கூறிட வாய்ப்பெனக்கில்லையோ?

திரு: சம்பிரதாய சடங்குகளுக்கு காலமும் பொழுதும் கரைந்திடலாகா! என் தலைக் கிரீடம் அகன்றிடும் காலம் அருகே வருவதை அவதானிக்கிறேன். என் துணையாக அருகினிலிருக்க உன்னைத் தவிர வேறுயிரில்லை! அஸ்தினாபுரத்தின் அரியணை எனக்கே சொந்தமானது என்பதை மறந்தே பலரும் பலப்பல அர்த்தம் புகன்றிடத் துணிந்தனர் இன்று. எந்தன் வாரிசு எந்தன் மைந்தன் துரியோதனனே ஆட்சிக்குரியவன்.

சஞ்: இவ்வாறு கூறுதல் ஏனோ மன்னவ? கங்கையின் மைந்தர், துரோணர், கிருபர், அஸ்வத்தாமன் ஆகிய இவரெலாம் அருகினிலிருக்கையில் அஞ்சுவதேனோ அரசர்க்கரசே!

திருத: இப்பெரு வீரர்கள் விராட நாட்டினில் விஜயனின் கணைகளை எதிர்த்திட முடியாதோடி ஒளிந்தனர்! போரென்று வந்தால் நேராக எம்மவர் நின்றுமே போரிட முடியாதவர். துரியோதனனை சகுனியும் கர்ணனும் சார்ந்துமே நின்று தூபமிடுகிறார். என் மகன்மீது நான் கொண்ட பாசம் அவனது ஆசையை வளர்க்கவே உதவும். போரினைத் தொடுக்கவே என் மகன் துணிவதை என்னால் என்றும் பொறுத்திட முடியா! பாண்டவருடனே பார்த்தனினொரு மகன் அபிமன்யுவும் அருந்திறல் வீரன். சுதர்சன சக்கரமேந்திய கண்ணனின் பக்கபலமும் அவர்களுக்குரியது. இந்நிலைதனிலே போரினைத் தவிர்ப்பதே சாலச் சிறந்தது. சஞ்சயா! நீயுன் தேரினிலேறியே மத்சய நாட்டில் மைந்தன் யுதிஷ்டிரன் முன்னிலை சென்று எந்தன் கருத்தினை எடுத்தியம்பிடுக! திக்கற்ற நிலையில் தவிக்கும் எந்தனை இக்கட்டெதுவும் அணுகாதிருந்திட மேலும் சில நாள் ஒதுங்கியே இருப்பது நலமெனக் கூறி, அவரிங்கு வருவதைத் தாமதப்படுத்துக. நீதி, நேர்மை, நன்னெறி தனையே நல்வழியாக வாழ்ந்திடும் பாண்டவர் என்னுடை எண்ணம் என்றுமே மதிப்பவர். இத்தகை உதவியை இயல்புடன் செய்வதில் வல்லவன் நீயே என்பதால் உன்னையே தூதுவனாக அனுப்பிட நினைத்தேன்!

சஞ்ச: மன்னவ! தங்கள் அன்பின் கட்டளை ஏற்றேன்; இன்றே சென்று வருகிறேன்.

–காட்சி மாற்றம்–

மத்சய நாடு–விராட மன்னன் அவையில் பாண்டவர், கிருஷ்ணன், பலராமன் ஆகியோர் உள்ளனர். அங்கு சஞ்சயர் வருகிறார்.

யுதிஷ்: வாழ்த்துக்கள் கூறி வரவேற்கிறோம்! சஞ்சயரே! வாரும் அமரும், வந்ததோர் காரியம் கூறுக இனிதே! பெரியப்பாவும் பெரிய தாயாரும் நலமாயுளரா? இன்றெமதிடையே வாட்டிடும் மாயை என்று தானகலுமோ? அன்னவர் தம்மை என்று காண்போமோ...?

சஞ்ச: இத்தகை வினாக்களுக்குற்ற பதிலினை இறைவனே அறிவார்! மன்னவர் மற்றும் அங்குள அனைவரும் நலமே உள்ளனர். மன்னவர் தமது வாழ்த்தினைக் கூறிட என்னிடம் சொன்னார்!

யுதிஷ்: எத்தகை கசப்புகள் உசுப்பியபோதும் பெரிய தந்தையார் வாழ்த்திட நினைத்தமை எம் பேரதிஷ்டமே! பெரியம்மா நலமாயுள்ளாரா என்பதை அறிந்திட ஆவல் எழுகிறதந்தோ!

சஞ்ச: அவரும் நலமே! ஆனால் தங்கள் அன்னையாம் குந்தி தேவியின் நலனினை அறிய ஆவல் எழுவதாயில்லையே?

யுதிஷ்: பாரத வம்ச மருமகளான அன்னை அவர்க்கு எதுவுமே ஆகா தென்பதென் துணிவு. பிதாமகர் போன்ற பெரியோரெல்லாம் இருப்பதால் அங்கு அன்னையின் நலனில் அக்கறை காட்டுவர்! பிதாமகர் மற்றும் ஆச்சாரியருடன் விதுரர் மகானும் எவ்வாறுள்ளனர்? மூட மதியாளரால் கூடிக்கெடும் எம் தம்பியாம் துரியன் எவ்வாறிருக்கிறான்?

சஞ்ச: அஸ்தினாபுரத்தின் அரசரைத் தவிர அங்குளோரெல்லாம் நலமே உள்ளனர். கவுரவ குலத்தில் கிளர்ந்துள்ள சிக்கலே அரசரை வாட்டுது.

யுதிஷ்: கவுரவ குலத்தினை கவலையிலாழ்த்திடக் காரணம் நாமென கூறிட முடியுமா?

சஞ்ச: காரணம் யாரோ எவராயிருப்பினும் பாரதூரமாய்ப் பிளவு விரிந்ததே!

பீமன்: துரியோதனன்தான் எதற்கும் காரணம். அவனை முடிப்பதே அனைத்தையும் காத்திடும்!

கிருஷ்: அமைதியை நாடியே தூதனை யுதிஷ்டிரன் அனுப்பியும் வைத்தனன். அண்ணன் அமைதியை நாடிடும்போது பின்னவன் அதனையே ஏற்றிட வேண்டும்!

யுதிஷ்: கண்ணன் கூற்றதே உண்மையதாகும்! சஞ்சயரே நீர் அஸ்தினாபுரத்து மன்னவர் கூறிய பதிலினைக் கூறும்!

அர்ச்: சஞ்சயர் பதிலினை ஏற்பதன் முன்னர் அத்தகை பதிலினை அளித்தவர் யாரென அறிவது முறைமை! துரியோதனனதும் துச்சாதனனதும் தந்தையா அந்தப் பதிலினைக் கூறினார்? அஸ்தினாபுரத்தின் மன்னரா அன்று, எம் தந்தையின் தமையனாரான திருதராட்டிரரா தூதனை அனுப்பினார்? இதனை அறிவதே முழுமுதற் கடமை!

கிருஷ்: அர்ச்சுனன் கூற்றது முற்றிலும் சரியே! பாண்டுமாமன்னனின் அண்ணனே திருத ராட்டிர மன்னவர் என்றிருந்திருந்தால் காந்தார மன்னவன் சகுனியால் விளைந்த வினைதனைத் தடுத்தே நிறுத்தியுமிருப்பார். துரியோதனனின் தந்தை என்பதே அவருடை முதல் நிலை! நாட்டைப் பிரித்ததும் தன் மகன் பாசமே! தன் மகன் பாலவர் கொண்ட பாசமே, திரௌபதி துகிலினை பறித்திடும்போதும் மௌனமாய் அவரை இருந்திட வைத்தது. துரியோதனனின் தந்தைதானின்று அஸ்தினாபுரத்தின் அரியணை மீதினில் அமர்ந்தே இருப்பதால் அர்ச்சுனன் விடுத்த வினாவுக்கான விடையும் தேவையே!

சஞ்ச: தேவகி நந்தனா, கிரிதார மூர்த்தியே! தங்களின் கேள்வியால் திணறிப் போகிறேன்! இந்த வயோதிபன் கண்களின் முன்னால் எந்த நலனும் ஏற்றதாய்க் காண்கிலேன்.

கிருஷ்: சஞ்சயா! உந்தன் கருத்தினைக் கூறுக...!

சஞ்ச: பயங்கரப் போரினைப் பார்க்கிறேன் என் முன்! தங்களின் துணையுடன் பாண்டவர் படையும்– பாஞ்சால நாட்டின் பெரும் படையுடனே அணியணியாக வருவதைக் காண்கிறேன். காண்டீபமேந்திய பார்த்தன் ஒருபுறம்; கதாயுதம் தாங்கிய பீமன் மறுபுறம்; நகுலனும் சகா தேவனும் ஒன்றாய் யுதிஷ்டிரர் தலைமையில் களம் புகும் சிறப்பினை காண்கின்றேன் கண் முன்! எதிர் திசை நோக்கின் கங்கையின் மைந்தர், கிருபாச் சாரியார், துரோணாச் சாரியார் அசுவத்தாமன் ஆகியோருடனே கவுரவ படையும் வருவது காண்கிறேன். என்னுடை நோக்கினில் எவரும் வெல்வதாய் எனக்குத் தெரியலை. பிதாமகர் பீஷ்மர் தனி மனிதராய் நிற்பதைக் காண்கிறேன். வேறெவர் தானும் உயிருடனிருப்பதை என்னால் காண்பது அரிதாய்த் தோணுது.

யுதிஷ்: போரென்று வந்தால் எவரோ ஒருவர் வெற்றியை அணைப்பார்! தோல்வியை மற்றவர் தேடியே தீருவர்!

சஞ்ச: சின்னஞ் சிறிய பாலகராக சிரித்து மகிழ்ந்த அரச குமாரர் அங்கம் பிளந்து அலங்கோலமாய் அமரினில் அழிவதை என் கண் என்றும் காணவே துணியா!

யுதிஷ்: போரினைப் பற்றி எவருமே இங்கே பேசிடப் போவதேயில்லை ஈதறிவாய்! இந்திரப் பிரஸ்த நாட்டினை எமக்கே திருப்பித் தந்திடில் நிம்மதி பிறக்கும். எமக்கவரிழைத்த எந்தக் கொடிய விளைவுகளதனையும் என்றுமே நினைக்கா திருப்போம் நாமே!

பீமன்: ஆனால் அண்ணா..!

யுதிஷ்: அண்ணன் உரையினை இடையினில் மறிப்பது தம்பி உமக்கு கண்ணியமாகுமா? சஞ்சயா! போரை நாங்கள் விரும்பியேயிருந்தால் அஸ்தினாபுரத்தினை என்றோ தாக்கி வென்றேயிருப்போம்! தூதனை அனுப்பி பேசியிருப்போமா? பெரியப்பா என்ன சொல்லி அனுப்பினார் என்பதைக் கூறும்!

சஞ்ச: வாழ்த்தினை மட்டுமே கூறி அனுப்பினார். சிறந்த கொள்கையும் பண்பும் நிறைந்த நீவீரனைவரும் இன்றுள்ளதுபோல் என்றும் மகிழ்வுடன் வாழ்வதை விரும்பி வாழ்த்தினைக் கூறிட என்னைப் பணித்தார்.

யுதிஷ்: மகிழ்வுடன் அன்னவர் வாழ்த்தினை ஏற்கிறோம்! இந்திரப் பிரஸ்தமே எங்களின் உயிராம். அங்கு செல்வதே எங்களின் மகிழ்ச்சி. தாங்கள் கூறிய வீரர்களெல்லாம் மதிப்பினிலுயர்ந்த மாண்புறு வீரர்தாம். இருப்பினும் விராட நாட்டினில் நடந்த போரினில் பார்த்தனால் விரட்டியடித்தே வீழ்த்தப்பட்டனர். அப்பெரு வீரர்கள் பெருமைக்குரியரே! அவருடன் நெருங்கி உறவு கொண்டதால் எமக்கும் பெருமை என்பதே தெளிவு! ஆனால் அவரோ தீய வழியினைத் தேடியே செல்கிறார். எமதுரிமைகளை விட்டுக்கொடுப்பது என்றுமே எமக்கு ஏற்புடைத்தல்ல. துரியோதனனோ எனக்கும் இளையவன். இந்திரப் பிரஸ்த நாட்டினை தன்னிடம் தரும்படி என்னிடம் கேட்டேயிருந்தால் கொடுத்தேயிருப்பேன்! பிதாமகர் பீஷ்மர், துரோணர் கிருபாச் சாரியார் எவரது பெயர்களைக் கூறி எமதுரிமைகளைப் பறித்திட நினைப்பது பொருந்திட முடியாதென்பதே எமது முடிவென அஸ்தினா புரத்தின் மன்னவர் தம்மிடம் கூறி வைப்பதும் கடனாம்! மன்னவர் தம்பியின் மைந்தர்கள் நாங்கள்– அமைதியாய் எமது நாட்டினைத் தரும்படி கேட்கிறோமன்றி போருக்கு வரும்படி கோரவேயில்லை. இதுவே உண்மை!



<u>பின்னணிப் பாடல்:</u>

**அமைதி வழியின் அருமையும் பெருமையும்**
**அறிந்த நற்பெரியோர் அறத்தையே துறந்ததால்**
**அமர்க்களம் போவதா; அவனியிலமைதியை**
**அரியணை அமர்த்திட அறவழி தேர்வதா?**

**அன்பையும் பண்பையும் அறிவையுமிணைத்தே**
**அணிகலனாகவே அணிந்தவன் தருமன்**
**ஆய்ந்தெவ்வழியினை அணுகுவ தறியா**
**ஆழ்துயர்க் கடலினில் அமிழ்ந்துலைகின்றனன்.**

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்




வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

436331



Kala



JEWELLERY


புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

433686



[illegible] 'உரிய அளவில்' இருக்கிறதா என்பதில் [illegible] வேண்டும். இந்த வகையில் ஒருவருடைய வயிறு அவருடைய மார்பின் அளவுடன் இரு [illegible] வைத்துக்கொண்டால் அவரை எந்தப் பிணியும் அணுகப் போவதில்லை. வயிறும் இடையும் →

# உறுதியான உடல்





[illegible]



[illegible]

'V' பயிற்சி

[illegible] மூச்சு வெளியிட வேண்டும். மூச்சினை உள்ளே இழுத்தவண்ணம் மெதுவாக இரு உறுப்புகளையும் பழைய நிலைக்குக் கொண்டு வரவும். இதேபோன்று 10 முதல் 20 தடவைகள் வரை செய்யலாம். கால் இடைவெளி ஒரேசீராக இருத்தல் வேண்டும். அவயவங்கள் மேலே உயர்த்தப்பட்டவாறு 3 முதல் 20 நொடிகள் வரை நீடித்திருக்க வேண்டும்.

குறிப்பு: 'V' பயிற்சியினை எடுத்த எடுப்பிலேயே 20 தடவை செய்யவோ, மேல் நிலையில் 3 நொடிகளுக்கு மேல் தாமதிக்கவோ கூடாது. சிறிது சிறிதாக அதிகரிக்க வேண்டும்.

வாரமலர் தினமுரசு

# நேசமும்-நாசமும்

கென்யா காடுகளில் உள்ள புலிகள் வித்தியாச ரகம்.

நீளம் மட்டும் 8 அடி. பார்த்தாலே பயங்கரமாக இருக்கும். எடை நூறு ராத்தல். தமது குட்டிகளுக்கும் பாயும் வித்தையை கற்றுக்கொடுத்து விடுகின்றன. கற்றுக் கொடுக்கும் விதமே தனிதான்.

படத்தில் ஒரு ஆட்டின்மீது பாய்ந்திருக்கிறதல்லவா குட்டிப் புலி! குட்டிப் புலியிடம் இந்த ஆட்டை வேட்டையாடிப் பிடித்துக் கொடுத்தது தாய்ப்புலி.

ஆட்டை அடித்து உயிரை எடுத்துவிட்டு குட்டிப் புலியிடம் விட்டுவிடும் தாய்ப்புலி. குட்டிப் புலி செத்த ஆட்டின்மீது பாய்ந்து வேட்டையாடும் பயிற்சியைக் கச்சிதமாகக் கற்றுக்கொள்ளும்.

[illegible] பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும். பாயும் புலியை செத்த ஆட்டோடு விளையாடுவதில் தெரியுமோ?





மிருகங்கள் ஆபத்தானவை.

அதேசமயம் உரிய முறையில் வளர்த்தெடுத்தால் நேசம் காட்டுவதிலும் முன்நிற்பவை.

காட்டுக்குள் கர்ஜித்து மிரட்டும் சிங்கக்குட்டி சிறுவன் ஒருவனோடு சீண்டி விளையாடுகிறது. சிறுவனுக்குப் பயம் கிடையாது. சீறும் சிங்கத்தோடு சிநேகம்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே"

இது மிருகங்களுக்கும் பொருந்துமோ என்று யோசிக்க வேண்டியதாகி விட்டது. அந்தளவுக்கு மனித-மிருக நட்பு செழித்து ஓங்கி வளரத் தொடங்கிவிட்டது.

# அதிகமாய் கொடுத்த விலை



படத்தில் இருப்பவர் பிரபல 'மொடல்' அழகி. இவர் உடலை விளம்பரப் படங்களில் கண்டு பலர் வியந்தனர். இவளோ கட்டழகன் ஒருவரைக் கண்டு மயங்கினாள். காதல் வளர்ந்து ரொம்ப தூரம் முன்னேறியதில் இவருக்கு கிடைத்த பரிசு 'எய்ட்ஸ்'? காதலன் தான் ஒரு 'எயிட்ஸ்' நோயாளி என்று இவரிடம் சொல்லவில்லையாம். காதலுக்காக இவர் கொடுத்த விலை அதிகம்தான்!